அறவாணன், கொடைக்கானல் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தில் பணியாற்றி ஓய்வுபெற்றவர். 18க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியவர். பெண்ணியம் தொடர்பாகப் பல நூல்களை எழுதி மகளிர் பல்கலைக்கழகத்துக்குப் பெருமை சேர்த்து வருபவர். அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் நிகழ்த்தி வருபவருமாவார். மேலும் இவர் 'ஆதிமந்தி முதல் ஆண்டாள் வரை' உள்ள பெண்பாற் புலவர்கள் பற்றி ஆய்வு செய்து, பெண் புலவர் களஞ்சியமாக உருவாக்கியுள்ளார்.

இவர் 1944 மே 23இல் பிறந்தவர்; எம்.ஏ.,பி.எச்.டி., பட்டங்கள் பெற்றவர். குமரி மாவட்டம். சேந்தன்புதூர்.

கொடைக்கானல் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத் தமிழியல் துறை முன்னாள் தலைவர் - பேராசிரியர்.

நாமக்கல் அரசு மகளிர் கல்லூரி, சென்னைப் பச்சையப்பன் அறநிறுவனக் கல்லூரிகளில் தமிழ் இணைப் பேராசிரியராகப் பணியாற்றியவர்.

**அயல்நாட்டுப் பணி :**

மேற்கு ஆப்பிரிக்க செனகால் நாட்டு அதிபர் கவிஞர் லியோ போல்டு செதார் செங்கோர் அவர்களால், டக்கார் பல்கலைக்கழக இலக்கியத்துறையில் இணைப் பேராசிரியராக அமர்த்தப் பெற்றவர் (1978 - 1982)

**எழுதிய நூல்கள்:**

பெண்மொழி, புதிய கோலங்கள், உறவுமுறை, பெண்ணறிவு என்பது, திராவிட - ஆப்பிரிக்க ஒப்பீடு, பல்லாங்குழி, பெருமையே பெண்மையாய், தையல் சொல் கேளீர், தையலை உயர்வு செய், தடம் பதித்தோர், குழந்தை - ஓர் இலக்கியப் பகுப்பாய்வு, தமிழ்ச் சமூகவியல் - ஒரு கருத்தாடல், பெண்ணெழுத்து இகழேல், கண்ணகி மண்ணில், பெண் இன்று நேற்று அன்று, அவ்வையார் அன்று முதல் இன்று வரை, மகடூஉ முன்னிலை (பெண் புலவர் களஞ்சியம்) பெண் பதிவுகள், தமிழ்ப் பெண் 1917, அவ்வையார் படைப்புக் களஞ்சியம், இலட்சியப் பெண்டிர், பெண்ணின் பெருந்தக்கதில், நூல் பல கல், முதலான 27 நூல்கள்.

**பெற்ற விருதுகள்:**

சிறந்த கல்வியாளர் என்பதற்காக மதுரையில் வாரியார் விருதும், 'பெண்ணெழுத்து இகழேல்' என்ற நூலுக்காகச் சிறந்த பெண் எழுத்தாளருக்கான 'சக்தி 2004' விருதும் பெற்றவர்,

**நெய்வேலி புத்தகக்காட்சி - எழுத்தாளர் விருது:**

2009இல் தமிழ்நாடு அரசு "கி.ஆ.பெ. விசுவநாதம் விருது"" அளித்து கவுரவித்தது,

**தினத்தந்தி சி.பா.ஆதித்தனார் விருது - 2 இலட்சம்**

'காந்தி சேவை' விருது வழங்கியோர் : குமரி அறிவியல் பேரவை

**அவ்வை விருது :**

தமிழ் ஆய்வுப் பணிக்கும், அவ்வையின் புகழுக்கும் தம்மை ஆட்படுத்தி அரும்பணியாற்றியமைக்குத் திருச்செங்கோடு, டி.எம்.காளியண்ணனால் வழங்கிச் சிறப்பித்த 'அவ்வை விருது'ம் ரூ.பத்தாயிரமும் பெற்றவர்.

**நூல்களுக்காகப் பெற்ற பரிசுகள்:**

'அவ்வையார் அன்று முதல் இன்று வரை' என்னும் மிகச் சிறந்த உழைப்பு நூலை உருவாக்கியமைக்காகத் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றமும் நியூ செஞ்சுரி புக் ஹவுசும் இணைந்து வழங்கிய இலக்கியப் பரிசினைப் பெற்றவர்.

‘தமிழ்ச் சமூகவியல் – ஒரு கருத்தாடல்’ என்னும் நூலுக்கு இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றச் சிறந்த நூல் பரிசைப் பெற்றவர்.

மகடூஉ முன்னிலை – (பெண் புலவர் களஞ்சியம்) என்னும் நூலை அரிய உழைப்பால் உருவாக்கியவர்.

‘திராவிட ஆப்பிரிக்க ஒப்பீடு’ என்னும் நூலுக்குத் தமிழ்நாடு அரசு வழங்கிய முதற்பரிசைப் பெற்றவர்.

**கருத்தரங்கப் பங்கேற்பு :**

உலகம், நாடு, தமிழ்நாடு அளவிலான கருத்தரங்குகள் பலவற்றில் பலமுறை பங்கு பெற்றுப் பல கட்டுரைகளை வழங்கியுள்ளார்.

அன்னை தெரசா பல்கலைக்கழகத்தில் மகளிருக்கான கருத்தரங்குகளில் பங்கேற்றவர், மகளிர் தற்கொலை, முதியோர் பிரச்சினைகள் பற்றி ஆய்வு நிகழ்த்தியவர், பெண்ணியல் சார்பாக 9 நூல்களை எழுதியவர்.

அறக்கட்டளைச் சொற்பொழிவுகளை அண்ணாமலைப் பல்கலைக்கழகம், மேலைச் சிவபுரி செந்தமிழ்க் கல்லூரி, பேரூர் சாந்தலிங்கனார் கலைக்கல்லூரி முதலியவற்றில் நிகழ்த்தியவர்.

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் 27.7.2010 பங்கு கொண்டு ‘அறியப்படாத பெண் புலவர்’ என்ற தலைப்பில் கட்டுரை வழங்கியவர்.

**வானொலி உரை :**

1970 முதல் சென்னை, மதுரை, தூத்துக்குடி அலைவரிசையில் எழுத்துரை ஆற்றி வருபவர். வெளிநாட்டுப் பண்பலை வானொலி பரப்புக்காகத் தமிழ் இலக்கியத்தில் தன்மானம், காலமாற்றத்தில் கற்பு, பூப்பு நிகழ்ச்சி முதலிய பல தலைப்புகளில் ஆய்வுக் கட்டுரைகள் வழங்கியவர்.

200க்கும் மேற்பட்ட கட்டுரைகளை உருவாக்கியவர். கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தில் ‘இலக்கியம் வாசித்தல், கற்பித்தல்’ என்ற தலைப்பில் ஆசிரியப் பணிப்பட்டறையில் பங்கேற்று நடத்தியவர் – நூற்றுக்கும் மேற்பட்ட பன்னாட்டுக் கருத்தரங்குகளில் கலந்து கொண்டு கட்டுரை வழங்கியும், தலைமையுரை ஆற்றியும் சிறப்பித்தவர்.

**தற்போதைய பணி :**

தற்போது மகளிருக்காகத் தொடர்ந்து பணியாற்றி வருபவர், அறியப்படாத பெண் புலவர்களை அறியச் செய்ய அரும்பாடுபட்டு வருகிறார்.

இக்கட்டுரை ஆசிரியர், 1977 – 82 வரை மேற்கு ஆப்பிரிக்க செனகாலில் டக்கார் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய போது களப்பணி செய்து எழுதப் பெற்ற கட்டுரை. **பார்வை நூல்கள் :**

1. Aravanan K.P. Dravidians and Africans, Tamil KOHAM, Chennai - 600029.

2. அறவாணன் க..ப. செந்தமிழ் செனகால் செங்கோர், பாரி நிலையம், சென்னை –108,

3.. அறவாணன், க.ப. மரவழிபாடு, பாரி நிலையம், சென்னை –108,

4. அறவாணன் க.ப. பாம்பு வழிபாடு, சென்னை –108.

5. K.P.Aravanan an Anthropological studies on the Dravido Africans, Dakar University, Senegal.

6. தாயம்மாள் அறவாணன் திராவிட ஆப்பிரிக்க ஒப்பீடு, பாரி நிலையம், சென்னை –108

7. தாயம்மாள் அறவாணன், பல்லாங்குழி – திராவிட – ஆப்பிரிக்க ஒப்பீடு – பாரி நிலையம், சென்னை – 108.

●

# சங்கச் செவ்வியல் மறுவாசிப்பு - பெரியாரைத் துணைக்கோடல்



பேரா. முனைவர் **தென்னவன் வெற்றிச்செல்வன்**

**கட்டுரைச் சுருக்கம்**:

*சங்க இலக்கியத்தை, தமிழின் கருத்துக் கருவூலமாக பார்ப்பது பொதுவான பார்வையாக உள்ளது. சங்க இலக்கிய ஆய்வுகளை அணுகினோமானால், பெரும்பாலும் விதந்தோதும் போக்கும், பாராட்டுவகைத் திறனாயும் அகச்சார்பும், மேலோங்கியிருக்கக் காணலாம். பழந்தமிழ்ச் சங்க இலக்கியம் குறித்த சமகாலப்பார்வை தமிழை, தமிழ்ச் சூழலை பண்டுதொட்டு உணர்ச்சிபூர்வமாக அணுகியதால் கட்டமைக்கப்பட்டது எனலாம். சங்க காலம், பாலாறும் தேனாறும் பாய்ந்தோடிய, கடவுள்களே கூட பாவலராக பா புனைந்த காலமாக, முன்னோர் சொல் பொன்னே போல் போற்றும் மரபாக, எவ்வித விமர்சனமும் அற்றுச் சொல்லப்பட்டு வருகிறது.*

*மறுவாசிப்பு, தொன்மவியலைச் சமகால வாழ்வியலோடு பொருத்தி, புதியநோக்கு புதியகோணம் புதியபரிமாணம் என, மாறுபட்ட களங்களில் புரிந்துகொள்ள முயலும் முயற்சியாகும். பெரியாரிய / மார்க்சிய அழகியல் வெளிச்சத்திலிருந்து சங்கச்செவ்வியல் இலக்கியத்தை மறுவாசிப்பு செய்ய முயல்கிறது இக்கட்டுரை.*

**குறிச்சொற்கள்**:

*மறுவாசிப்பு, சூழலியல், பழமொழி, ஒத்திசைவு, முரணியல்பு, வருணச்சிந்தனை, திணைக்கோட்பாடு, கரவுத்தொடர்பியல்.*

**முகவுரை**:

*வாசிப்பை, திருவாசிப்பாக்கிப் புனிதப்படுத்தி, பிரதியின் மீது எந்த விமர்சனமுமற்று, முன்னோர் சொல் பொன்னேபோல் போற்றி, காலமும் கருத்தும் குறித்த தர்க்க நியாயங்களைக் கோராமல், படைப்புக்குப்பின் இயங்கும் உற்பத்தி உறவுகள் - உற்பத்தி சக்திகள் சார்ந்த கருத்தியல் பற்றி துலக்கம் கொள்ளாமல், ஊடுருவிப்பாயும் பார்வையல்லாமல் (Cosmic outlook) வாசிக்கும், பழமைவாத வாசிப்பு கொஞ்சம் கொஞ்சமாக உதிர்ந்து வருகிறது.*

*இன்றைய காலச்சூழலில் பெரிதும் கவனத்திற்குள்ளாகி இருக்கும் ஒரு சொல் 'மறுவாசிப்பு' என்பது. மேலாய்வும் மீளாய்வும் கூடிமுயங்கப் பிறப்பது மறுவாசிப்பு ஆகும். 'கோபுர தரிசனம் கோடி புண்ணியம்' என்பது வழிபாடு சார்ந்த, பொதுப்புத்தி வாசிப்பு. ஆனால், ஆலய வழிபாட்டுரிமை மறுக்கப்பட்டோர் தொலைவிலிருந்தே வழிபாடு நிகழ்த்துவதற்கான சமரச ஏற்பாடுதான் அப்பழமொழி என்பது மறுவாசிப்பாகும்.*

மறுவாசிப்பு, தொன்மவியலைச் சமகால வாழ்வியலோடு பொருத்தி, புதிய நோக்கு புதிய கோணம் புதிய பரிமாணம் என, மாறுபட்ட களங்களில் புரிந்துகொள்ள முயலும் முயற்சியாகும். புதிய கேள்விகள் மறுவாசிப்பின்போது எழுப்பப்படும். புதிய தர்க்க நியாயங்கள் மறுவாசிப்பில் முன்வைக்கப்படும். பொதுவாசிப்பில் பொதுக்கண்களுக்குப் புலனாகாதவை, மறுவாசிப்பின் போது, மூன்றாவது கண்ணுக்குப் புலப்படும்.

மகாபாரதத்தை, விடுதலைப் போரின்போது, பாஞ்சாலி சபதமாக பாரதி மறுவாசிப்பு செய்தார். அந்த வகையில் பாரதி, தமிழ் மறுவாசிப்பு முன்னோடி எனலாம். மகாபாரதம் அய்ராவதி கார்வேயால் மறுவாசிப்பு செய்து நாவலாக்கப்பட்டது. தமிழில் உபபாண்டவமாக எஸ்.ராமகிருஷ்ணனால் மறுவாசிப்பு செய்யப்பட்டது. ஜெயமோகன், பிரபஞ்சன், பூமணி, ஆகியோரும் தொடர்ந்து மகாபாரதத்தைத் தமிழில் மறுவாசிப்பு செய்தவகையில் குறிப்பிடத்தக்கோர் ஆவர்.

இராமாயணம் இராவண காவியமாக புலவர் குழந்தையால் மறுவாசிப்புச் செய்யப்பட்டது. இராமாயண அகலிகை புதுமைப்பித்தனால் சாபவிமோசனமாக மறுவாசிப்புச் செய்யப்பட்டது. புதுக் கவிதைக் காவிய வடிவில் கல்லிகையாக ஞானியால் மறுவாசிப்புச் செய்யப்பட்டது. சரயுநதியில் சீதை குளிக்கச் செல்லும் காட்சிச் சித்திரம் மகாமக சாபம் ஆக பாவண்ணனால் மறுவாசிப்பு செய்யப்பட்டது.

காலந்தோறும் பல பனுவல்களும் மறுவாசிப்புச் செய்யப்பட்டே வருகின்றன. உலக இலக்கியப் பரப்பில் மறுவாசிப்பு என்பது மிகமுக்கிய, இலக்கிய ஆக்கமாக பரவலாக்கம் பெற்று வருகிறது.

சிலப்பதிகார மறுவாசிப்பு, பாரதிதாசன் பரம்பரைக் கவிஞர் முடியரசனால் மாதவி காவியமாகவும், கவிஞர் யுகசிற்பியால் எழுதாச் சிலம்பாகவும் மறுவாசிப்பு செய்யப்பட்டுள்ளன. நாம் இந்தச் சிந்தனை களைப் பகிர்ந்து கொண்டிருக்கும் இதே வேளை, உலகெங்கும் எத்தனை மறுவாசிப்புகள் செய்யப்பட்டுக் கொண்டி ருக்கின்றன என்பதை நாம் அனுமானிக்க முடியாது. அந்த அளவுக்குத் தொடர் ஓட்டங்கொள்கிறது, மறுவாசிப்பு.

### சிலப்பதிகார மறுவாசிப்பும் பெரியாரைத் துணைகோடலும்

சிலப்பதிகாரத்தை, இதுகாறும் இயல் இசை நாடகக் கூறுகளைக் கொண்டு, முத்தமிழ்க்காப்பியம் என்றும், காட்சிப் புலப்பாட்டுத் திறம் மேலோங்கிய பார்வையில், நாடகக் காப்பியம் என்றும், மூவேந்தர் சேர, சோழ, பாண்டிய ஆட்சிப் பகுதிகளில் நிகழ்களம் அமைந்ததால் ‘தேசியக் காப்பியம்’ எனவும், அரசர்கள் அரசியர்களை பாட்டுடைத் தலைவர் - தலைவியராக்கிய பழம் மரபு தகர்த்து, குடிமக்களை நாயக - நாயகியராக்கிய வகையில் ’குடிமக்கள் காப்பியம் எனவும், கடவுள் வாழ்த்துக்குப் பதிலாக, ’ஞாயிறு போற்றுதும்’ ’திங்களைப் போற்றுதும்’ ’மாமழைபோற்றுதும்’’புகாரைப்போற்றுதும்’ என இயற்கையைப் போற்றி வணங்கித் தொடங்கும் வகையில், ‘புரட்சிக் காப்பியம்’ எனவும் சுட்டப்பட்டு வந்துள்ளது. மேலும், சிலப்பதிகாரம் சமணக் காப்பியம் என்று உள்ளீட்டு அமைப்பில் அடையாளப் படுத்தப்பட்டு வந்தது. கடவுள் வாழ்த்து இடம்பெறாத புரட்சிகரத் தன்மையை விதந்தோதுபவர்க்கு, இங்கு ஒரு கேள்வியும் எழுகிறது. பலிகொடுப்பதை எதிர்த்த சமணம், சைவம் போன்ற வகையறாக்களால் கழுவில் ஏற்றப்பட்டது ஒருபுறமிருக்க, சமணத்தை அடியுறை உண்மையாகக் கொண்ட, சிலப்பதிகாரத்திற்குள்ளே பலி கொடுத்து வழிபாடு செய்யும் சித்திரங்கள் விமர்சனமற்று இடம்பெறுவதும், இந்திய சமயங்களாகிய ஆசீவகம், உலகாயதம், சமணம் மற்றும் பவுத்தத்தை கபளீகரம் செய்த சைவம், சைவ மந்திரங்களைக் கேட்கக்கூடாதென காதுகளில் மணிகளைக் கட்டிக்கொண்டு தலையாட்டுவதன் மூலம் மணியொலி வழியாக, சைவ மந்திரங்களுக்கு செவிமடுக்காத வைணவம், வைணவத்தை எதிர்த்த சைவம், இஸ்லாம், கிறித்துவம், ஆகியவற்றையும் உறவாடிக் களவாடுவதன் மூலம் பார்ப்பனியம் தன் ஆக்டோபஸ்

*கரங்களை நீட்டிக் கவ்விய வரலாறு தானே இந்திய வரலாறு என்று நுண்கூர்ந்தாய்வு மிக்க ஆய்வாளர் கேட்கமுடியும்?*

**அன்றுதொட்டுப் பாண்டிய நாடு**
**மழைவறங் கூர்ந்து வறுமையெய்தி**
**வெப்பு நோயும் குருவும் தொடரக்**
**கொற்கையில் இருந்த வெற்றிவேற் செழியன்**
**நங்கைக்குப் பொற்கொல்லர் ஆயிரவரைக்**
**கொன்று களவேள்வியால்**
**விழாவோ டுவந்த சாந்தி செய்ய**
**நாடுமலிய மழைபெய்து**
**நோயும் துன்பமும் நீங்கியது**

*என்று 'உரைபெறு கட்டுரை' பகுதியில் இடம்பெறுகிற செய்தியை நோக்குகையில், 8000 சமணர்களைக் கழுவிலேற்றியதாக பெரிய புராணம் பெருமைப்பட்டுக் கொள்வதைப் போல, கொற்கையை ஆண்ட வெற்றிவேற் செழியன் என்ற பாண்டிய மன்னன், முன்பு பாண்டியன் நெடுஞ்செழியன் செய்த தவறால், பொங்கி எழுந்த கண்ணகியின், சினத்தைத் தணிப்பதற்காகப் அப்பாவிப் பொற்கொல்லர் ஆயிரவரைக் கொன்று, பலியிட்டு, களவேள்வி நிகழ்த்திச் சாந்தி செய்வித்தான், எனச் சிலப்பதிகாரம் பெருமைப்பட்டுக் கொள்கிறதா?*

*பாண்டிய நாட்டில் நிலவிய பஞ்சத் திற்கும் வறட்சிக்கும், குருவும் வெப்புமாகிய கொள்ளை நோய்கள் பரவியதற்கும் கண்ணகியின் ஆறாச்சினமும் மாறாச் சினமும்தான் காரணமா? அவ்வுற் பாதங்களுக்கும் இயற்கைக்கும் தொடர்பு ஏதுமில்லையா எனக் கேட்கிறது. 'மறுக்கப்பட்ட நீதியும் மறைக்கப்பட்ட உண்மையும்' நூல். தவிரவும்,*

**'பார்ப்பார் அறவோர் பசுபத்தினிப் பெண்டிர்**
**மூத்தோர் குழவி எனும் இவரைக் கைவிட்டு**
**தீத்திறத்தார் பக்கமே சேர்க'**
**என்று கண்ணகி, தீயாணை இடுகிறாள்.**

*தானம் பெற வந்த பார்ப்பனக் கூனனை மதயானை ஒன்று, தன் துதிக்கையால் பற்றித் துன்புறுத்திய போழ்து, கோவலன் விரைந்து சென்று, யானையின் துதிக்கையில் இருந்து அவனை விடுவித்து, அதன் தந்தங்களுக்கு இடையில் புகுந்து, அதன் பிடர்மீது ஏறி விஞ்சையன் போல அமர்ந்தான். அந்தண முதுமகனை யானையின் துதிக்கையினின்றும் விடுவித்து, அவனுக்குப் பெரும் பொருள் தானமாகக் கொடுத்ததன் பயனாகத்தான், கோவலன் வானோர் வடிவம் பெற்றுத் துறக்கம் புகுந்தான் என்று கதைக்கப்படுகிறது.*

*கண்ணகியின் தாயும் கோவலனின் தாயும், மாதவியும் அத்தகைய செயலைச் செய்திலர். அதனால் அவர்கள் துறக்கம் புகவில்லை என்று மாடலன் கூறினான். இதன் தொடர்ச்சியாக நிறைவு விழாக்கள் மற்றும் பிறந்தநாள், நினைவுநாள் விழாக்கள் கொண்டாடி மகிழும் பெருஞ் செல்வர்கள், பிற ஜாதியருக்கு அன்னதானம் செய்வோர் வஸ்திரதானம், சுவர்ணதானம், கோதானம் முதலிய தானங்களை பார்ப்பனருக்கு மட்டுமே வழங்குகிறார்கள். ஏனெனில், அத்தகைய தானம் பார்ப்பனர்க்கு வழங்குவதுதான் புண்ணியம் என்று கருதுகின்றனர். சிலப்பதிகாரக் காலத்தில் தோன்றிய அவ்வழக்கம் இன்றும் நடைமுறையில் இருப்பதைக் காணமுடிகிறது என்கிறார் வெ. பெருமாள்சாமி (சிலப்பதிகாரம் மறுக்கப்பட்ட நீதியும் மறைக்கப்பட்ட உண்மைகளும்.)*

*தவிரவும் நீர்ப்படை காதையில், இடம்பெறும் செய்தியை எடுத்துக் கொள்வோம். வடபுலத்தில் கனக விசயர்களுடன் நிகழ்ந்த போரில் வெற்றிபெற்ற தன் வீரர்களைச் சிறப்பிக்க விரும்பிய செங்குட்டுவன், அவ்வீரர்களுக்காகப் பொன்னாற் செய்யப்பட்ட வாகைப் பூக்களை வெற்றிவிழாவின் போது, பரிசளித்துப் பெருமைப்படுத்தினான். ஆனால், கங்கைக் கரையில் குளித்துவந்த மாடலனுக்கு தன் நிறையளவான 50 துலாம் ஆடகப் பசும்பொன் வழங்குகிறான். அதன் இன்றைய மதிப்பு 45கோடியே 57 லட்சத்து அறுபதினாயிரம் ரூபாய். இவ்வளவு மதிப்புடைய தங்கத்தையே மாடல மறையோனுக்குச் செங்குட்டுவ மடையன் அறிவற்று ஈந்தான் என, அருளியார், நிழல் காண்மண்டிலம் சங்கச்செவ்வியல் வாசிப்பும் மறுவாசிப்பும் (ஆசிரியர் - தெ, வெற்றிச்செல்வன்) எனும் நூலில் அணிந்துரைக்கிறார்.*

இதையெல்லாம் வைத்துப் பார்க்கின்றபொழுது, பார்ப்பனியம் தன் செல்வாக்கைப் பெறுவதற்கான எல்லா வழிவகைகளும் திறந்துவிடப்பெற்ற நிலையைக் காண்கிறோம். சமணக் காப்பியமாகிய சிலப்பதிகாரத்துள் இந்துத்துவப் பார்ப்பனியம் ஊடுருவியது எப்படி என்பது கேள்வி.

பத்தினி, பதிவிரதை என்ற சொற்கள் முட்டாள் தனத்திலிருந்தும் மூர்க்கத் தனத்திலிருந்தும் தோன்றிய சொற்களாகும் என்பதோடு, தொடர்ந்து பெரியார் சொல்கிறார்: தமிழர் சரித்திரம் தொடங்கிய காலம் முதல் இன்றுவரை கற்பில் சிறந்த கண்ணகி ஒருத்தியைத்தான் போற்றப்பட வேண்டியவளாகக் கண்டு பிடிக்க முடிந்திருக்கிறது என்றால், இது தமிழ்ப்பெண் சமுதாயத்திற்கு எவ்வளவு இழிவும் பழியும் ஆகும் என்று சிந்தியுங்கள். தமிழ்ப் பெண்களில் ஒருத்திதான் பதிவிரதை என்பது தமிழ்ப் பெண் சமுதாயத்தை இழிவு படுத்தியதும் வெறுக்கத்தக்க செய்கையும் ஆகாதா?

தவிரவும், ‘உழுந்து தலைப்பெய்த கொழுங்களி மிதவை’ என சங்கப் பாடலில் இடம் பெறுவது போல, புதுமணல் பரப்பிய பந்தலில் பிச்சிப்பூவும் நெல்லும் தூவி, உளுந்துக்களி பரிமாறி முதுபெண்டிர் வழிநடத்திய, தமிழர் திருமணம் சிலப்பதிகாரத்துள் வானின் கண் செல்லும் சந்திரன் உரோகிணியைச் சேர்ந்த நாளிலே வானின் கண் விளங்கும் விண்மீனாக உள்ள அருந்ததி போலும் கற்புடையாளை, கோவலன் மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத் தீவலம் செய்து திருமணத்தைச் செய்து கொண்டான் என்று கூறியிருப்பதைக் கொண்டு, ஆரியப் பண்பாட்டை ஏற்றுக்கொள்வது சரியா என்று பெரியார் சிலப்பதிகாரத்தை மறுவாசிப்புச் செய்கிறார்.

மேலும் கண்ணகி கண்ட தீக்கனா பற்றி கோவலனிடம் உடனே கூறியிருந்திருக்கலாமே! பின்னர் மதுரை நிகழ்வுகள் தடுக்கப்பட்டிருக்கலாமே! அவன் ‘எழுக’ என்றதும் அவனுடன் சென்றது கூட பெண்ணடிமைத் தனத்தையும் ஆணாதிக்கத்தையும் தானே காட்டுகிறது என்றும், (பெரியாரின் இலக்கியச் சிந்தனைகள் - இரா.மணியன்) அதைக் கூட, ஒரு பெண்ணின் குரல் ஒலிக்க முடியாதபடி ஏன் செய்ய வேண்டும்? என்றும் கவுந்தி, கண்ணகி, கோவலன் மூவரும் ஒரு சோலையில் தங்கியிருந்த போது, ஒருபெண்ணும் ஆணும் (வம்பப்பரத்தை, வறுமொழியாளன்) காமனும் ரதியும் போல் காட்சியளிக்கும் இவர் யாவர் என வினவ, அய்யை, இவர்கள் என்னுடைய மக்கள் எனச் சொல்ல, ஒருவயிற்றில் பிறந்தோர் கணவனும் மனைவியும் ஆகக் கூடிவாழ்க்கை நடத்துதல் உண்டோ எனக் கேட்க, அது கேட்டு கண்ணகி நடுங்க, அது கண்ட அய்யை “முள்ளுடைக் காட்டின் முதுநரி யாகென" என அவர்கள் இருவரையும் சபிக்கிறார். உடனேயே அந்த வம்பப் பரத்தையும், வறுமொழியாளனும் நரிகளாக ஆகி ஊளையிடத் தொடங்கி விட்டதாகக் கதை கூறப்பட்டுள்ளது. (நாடுகாண் காதை) வழி சொல்லக்கூட மாங்காட்டுப் பார்ப்பானை வலியப் புகுத்தியிருப்பதும், அவன் வழியை மட்டும் சொல்லாது, புண்ணியச் சரவணத்தில் மூழ்கினால் அய்ந்திர நூலை அறியலாம். பவகரணியில் மூழ்கினால் உள்ளத்து எண்ணியவற்றை எல்லாம் அடையலாம் என்றும், பார்ப்பனியத்தைப் பிரச்சாரம் செய்பவனாக வருகிறான் என்றும் தமது மறுவாசிப்பின் தர்க்கங்களைப் பெரியார் முன்வைக்கிறார்.

போலவே, சிலப்பதிகாரத்தின் 22ஆவது பகுதியான அழற்படு காதையில் நால்வகை வருணச் சிந்தனையும், ஒவ்வொரு வருணத்துக்கும் ஒவ்வொரு பூதம் தெய்வமாக உள்ளது என்றுரைத்து, வருணபூதங்கள் நான்கின் இயல்புகளும் விவரிக்கப்பட்டுள்ளன. வருணக் கடமையாகிய வைசியனும் ஷத்திரியனும் சூத்திரனும் பார்ப்பானைக் கண்டால் முந்திக்கொண்டு வணங்குதல் வேண்டும் எனும் அடிப்படையில் கோவலன், மாடலன் எனும் பார்ப்பான் வரும் போது, வணங்குவதும், பார்ப்பனன் ’கோவலன் தீதிலன்’; என்று அய்.எஸ்.அய் மற்றும் அய்.எஸ்.ஓ முத்திரையிட்ட சான்றிதழ் தருவதும் முற்பிறவி நம்பிக்கை, எங்கும் எதிலும்

பார்ப்பனியம், ஆரியச் சூழ்ச்சியுமாக இப்பனுவலை மறுவாசிப்பு நிகழ்த்துகிற பெரியார், கதையை விட, மதத்தை முன்னிறுத்துவதும் மதப்பிரச்சாரத்தை குறிக்கோளாகக் கொண்டிருப்பதுவும் மட்டுமல்லாது, சமணக் காப்பியம் என முத்திரை குத்தப்பட்ட, சிலப்பதிகாரத் துக்குள் வருணாசிரம் இந்துத்துவம் கோலோச்சுவது எப்படி? என முரண் நகைப்பது கருதத்தக்கது.

**தொல்காப்பியக் கோட்பாடுகளும் நவீன கோட்பாடுகளும் - ஒத்திசைவும் முரணியல்பும்:**

**'இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்'**

என்கிற தொல்காப்பியம், வடமொழிகள் சுட்டும் வேதவழிப்பட்ட வீடுபேறு பற்றி கருத்தில் கொள்ளவில்லை என்பதோடு, உலகத் தோற்றக் கதைகள் பல்வேறு மொழிக் கூட்டத்தாரிடையே பலவிதமாக மதவழிப்பட்ட, வேதவழிப்பட்ட வைதிகக் கண்ணோட்டம் கொண்டிருக்க,

**'நிலந்தீ நீர்வளி விசும்போ டைந்துங் கலந்த மயக்க முலக மாதலின்'**

என்று பகுத்தறிவுக் கண்ணோட்டம் கொண்டிலங்குகிறது.

எனவே, இந்தியச்சூழலில் மட்டுமல்லாது. உலகச் சூழலில் இப்படி, பரந்துபட்ட நிலையில் வைத்து, பகுத்தறிவு மெய்ப் பொருளியல் சார்ந்து தொல்காப்பியத்தை, அறிவியல் கண்ணோட்டத்தில் பார்ப் பதற்குரிய விரிதரவுகள் அதற்குள்ளேயே இருக்கின்றன எனலாம்.

தொல்காப்பியத்தை, சூழலியல் பொருத்தத் தோடு, அணுகவேண்டும் என்கிறார் கெ.அய்யப்ப பணிக்கர். திணைக்கோட்பாடு, திராவிட அழகியலின் அதிகாரப் பூர்வமான பதிவேடு. பொருளதிகாரம் மனித வாழ்வைஅதன் பின்னணியுடனும், உந்துசக்தி யுமான நிலவியற்கையோடும், உறவுப்படுத்திக் காணும் ஒரு முழுமையான தத்துவமாகும். தொல்காப்பியப் பொருளதிகாரம் திராவிட இலக்கியச் சிந்தனையின் உயிர்மை – நுண்மை வடிவமாகும். அதனை வளர்த்தெடுத்தால் ஒரு வேளை, உலகிலே மிகத் தொன்மையான, விழுமியத்தன்மை கொண்ட, ஒரு சூழிடவியல் அழகியல் கோட்பாட்டையும் பெறலாம்.

இன்று, மேற்கத்திய மொழிகளில் (Eco-Critisism) என்றழைக்கப்படுகின்ற சூழலி யல் இலக்கியச் சிந்தனை உருவாகி வளர்ந்து வருகின்றது. 2000 ஆண்டுகளுக்கு முன்னர் சங்ககாலப் படைப்புகளுடன் தொடர்புபடுத்தி, வளர்ச்சி பெற்ற திணைக்கோட்பாடு மாறிய சூழ்நிலையில், பிறமொழி இலக்கியங்களுக்குப் பொருந்து வதாகும். ஒருவேளை உலகிலேயே வேறெந்த மொழிகளிலும் இதுபோன்றதொரு சூழலியல் இலக்கியக்கொள்கை, முற்காலத் தில் தோன்றவில்லை என்பதால், திராவிடத் திணைக்கோட்பாடு நம்மால் பயன்கொள்ள வேண்டிய ஒரு கோட்பாடாகும்.

எனினும் இந்நூற்பாக்களை இன்றும்கூட திராவிட மக்கள் போதுமான அளவு புரிந்துகொள்ளவோ, இலக்கிய ஆய்வில் பயன்படுத்தவோ முனைப்புக் கொள்வதில்லை. சமஸ்கிருதமேலாதிக்கமும், மேற்கத்திய பாதிப்புகளுமே இந்நிலைக்கான காரணங்கள். அரிஸ்டாட்டில் முதல், எட்வர்டு சையத் வரையான மேலைத் திறனாய்வாளர்களின் கொள்கைகளுக்கு அளிக்கும் முக்கியத்துவத்தில் எள்ளளவுகூட, இத் திராவிடக் கோட்பாடுகளுக்கு அளிக்கப்படுவதில்லை. காலனிய ஆட்சியின் மாயப் பாதிப்புக்கு ஆட்பட்டு, மயங்கிப்போன இந்திய அறிவுஜீவி வர்க்கமே, இந்நிலைக்குப் பொறுப்பாளிகள். சமஸ்கிருத இலக்கியச் சிந்தனையில், மிக விரிவாக விவரிக்கப்பட்டுள்ள தொனிக் கோட்பாட்டைவிட, மேலைத் திறனாய்வாளர்கள் கவனம் செலுத்திய படிமக் கோட்பாட்டைவிட, ஆற்றல் மிக்க வளமான ஓர் உணர்ச்சியும் பொருளும் இணைந்த நிறைவே, பொருளதிகாரத்தில் உள்ளுறை உவமையால் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது, என்று விரித்துரைத் துள்ளார் பணிக்கர். (கெ.அய்யப்ப பணிக்கர், இந்திய இலக்கியக் கோட்பாடுகள், சூழல் பொருத்தம் மாற்று வெளியீடு, சென்னை.)

வரலாறு பேணும் பொறுப்பின்மை மற்றும் சைவ ஏற்பின்மை காரணமாகச் செம்மொழி இலக்கியப் பதிப்பும், பயில்வும்

தமிழில் தள்ளிப்போன வரலாறும், வாசிப்புக்குக் காலமெடுத்துக் கொண்ட தமிழ்ச் சமூகம் மறுவாசிப்புக்கு வந்தடைய எடுத்துக்கொண்ட முயற்சி குறித்தெல்லாம் மிகுதியும் சிந்திக்கவேண்டியிருக்கிறது.

போலவே, கந்தர்வ மணம் பற்றித் தமிழும் ஆரியமும்பேசினாலும்இரண்டும்வேறுவேறு; ஒன்றல்ல எனும் சுப்பு ரெட்டியாரின் பார்வை மிக நுணுக்கமானதாய் உள்ளது. ஆரிய மணமாகிய கந்தருவத்திற்கும் தமிழரின் களவு மணத்திற்கும் உள்ள வேற்றுமை கருதத்தக்கது. ஒருவனும் ஒருத்தியுமாக எதிர்ப்பட்டார் இருவர், புனலோடு புல் சாய்ந்தார் போலத் தம் தலைமைக் குணங்களை இழந்து, மெய்யுறு புணர்ச்சியிற் கூடி மகிழும் இயல்பே கந்தருவ மணம் என்பது. இங்ஙனம் கூடினோர் தம் வாழ்நாள் முழுவதும் கூடி வாழ்வர் என்ற கட்டாயமில்லை. எதிர்ப்பட்ட அளவில் வேட்கை மிகுதியால் கூடிப் பின் அன்பின்றி, பிரிந்து மாறும் வரம்பற்ற நிலையும் இவ்வகை மணத்திற்கு உண்டு. இன்று உலகியல் வழக்கில் இத்தகைய நிகழ்ச்சிகளை நாம் காணத்தான் செய்கின்றோம். ஆனால், தமிழர் கூறும் களவொழுக்கமோ இருவருள்ளும் உள்நின்று சுரந்த அன்பின் பெருக்கினால், தான் - அவள் என்ற வேற்றிமையின்றி இருவரும் ஒருவராயொழுகும் உள்ளப் புணர்ச்சியாகும்.

**''தானே அவளே தமியர் காணக்**
**காமம் புணர்ச்சி இருவயின் ஒத்தல்''**
*(இறையனார் களவியல்)*

இதையே, தொல்காப்பியர், 'அன்பொடு புணர்ந்த அய்ந்திணை மருங்கிற் காமக்கூட்டம்' என்று குறிப்பிட்டார். இதுவே தமிழியல் கூறும் களவு மணத்திற்கும் வடநூல் குறிப்பிடும் கந்தர்வ மணத்திற்கும் உள்ள உயிர்நிலையாய வேற்றுமையாகும். (தொல்காப்பிய காட்டும் வாழ்வியல் சுப்பு ரெட்டியார் பக் 62-63)

**''கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்**
**மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்**
**விருந்து புறந்தருதலும், சுற்றம் ஓம்பலும்**
**பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்**
**முகம் பகல் முறைமையின் கிழவோற்கு உரைத்தல்**
**அகம் பகல் மரபின் வாயில் கட்கு உரிய''**
**(தொல். பொரு -1098**
**ச.வே.சு, மணிவாசகர் பதிப்பகம், பக்446 - 47)**

கணவனே தன் தலைவன் என்ற மனத்திண்மையும், மாறாத அன்பும், நன்றின்பால் உய்க்கும் ஒழுக்கமும், மென்மைத்தன்மையும், மறைபுலப்படாமல் ஒழுகும் நிறையும், சமையல் தொழில் வல்லமையால் விருந்தினரைப் பாதுகாத்தலும், சுற்றத்தாரைக் காத்தலும் இவை போன்றன தலைவியின் பண்புகள்.

**''அவன் சோர்பு காத்தல் கடன் எனப்படுதலின்**
**மகன் தாய் உயர்பும் தன் உயர்பாகும்**
**செல்வன் பணிமொழி இயல்பாகலான்.''**
**(தொல். பொரு 1120 ச.வே.சு, பக் 454, 455)**

தலைவன் சோர்வைப் போக்கிக் காத்தல், தலைவி கடமையாதலால், மகன் உயர்வைத் தாய் கருதுவதுபோல, கருதிச்செயல்படுவாள் தலைவி. அவள் பணிந்த மொழியினளாக இருத்தல் வேண்டும்.

**''தன்வயின் கரத்தலும் அவன் வயின் வேட்டலும்**
**அன்ன இடங்கள் அல்வழி எல்லாம்**
**மடனோடு நிற்றல் கடன் என மொழிப''**
**(தொல் பொரு 1151)**

என்ற நிலையில் பெண் நிறுத்தப்பட்டிருக்கிறாள் அச்சமூகத்தில்.

**''தன்னுறு வேட்கை கிழவன் முன் கிளத்தல்**
**எண்ணுங் காலைக் கிழத்திக் கில்லை**
**பிறநீர் மாக்களின் அறிய ஆயிடைப்**
**பெய்ந்நீர் போலும் உணர்விற் றென்ப''**

என தொல்காப்பியம் அதன் காலத்தில் பெண்ணுக்கு வரையறுத்திருந்த அச்சமும் நாணும் மடனும் பயிர்ப்பும், அதன் காரணமாக, அவளது வேட்கையை வெளிப்படையாகக் கூறமுடியா நிலையும், ஒருவேளை வெளிப்படுத்த நேர்ந்தால் மண்கலத்துள் பெய்து வைக்கப்பட்ட நீர் வெளித்தெரியாமல் மெல்லப் பரவுவது போல, அவளது வேட்கை குறிப்பாலும், இதர உடல் மொழியாலும் வெளிப்படுத்த வேண்டும் என்பதை, நவீனப் பெண்ணிய - தகவல் தொடர்பியல் கோட்பாடுகளுடன் பார்க்கிறார் - பொ.ந.கமலா.

ஒருவர் தாம் கருதுவதை வெளிப்படையாகவும், துல்லியமாகவும் (perfect Clarity) உணர்த்த முடியுமானால் அது நேர்த்தொடர்பியலாகும் (Direct communication) ஒன்றைத் தெரிவிக்க எண்ணுபவர்,

அக்கருத்தை வெளிப்படையாகத் தெரிவிக்காது, மறைமுகமாக உணர்த்துதல் மறைமுகத் தொடர்பியல் அல்லது கரவுத் தொடர்பியல் *(Indirect Communication)* ஆகும். தொல்காப்பியம் நேர்த் தொடர்பியலை 'வெளிப்படக் கிளத்தல்', 'தெரிவு வேறு நிலையல்' எனவும் மறைமுகத் தொடர்பியலைக் 'குறிப்பில் தோன்றல்' எனவும் குறிப்பிடுவதை எடுத்துக்காட்டுகிறார். இது மொழிவழி அல்லாத *(Non-verbal)* தொடர்பியலாக, மெய்ப்பாட்டு மொழியாக *(Body Language)* அமைவது. சொல்லும் பொருளும் சொற்றொடரும் பொருளும் இயையாமல் உள்ளுறையாகவோ, இறைச்சியாகவோ அமைவன எழுத்தொடும் சொல்லோடும் புணராது பொருட் புறத்தனவாகக் குறிப்பு மொழியாக, அமைவன என்கிற இருநிலைகளில் அமைவதைச் சுட்டுகிறார். ஆக, சங்கத் தலைவிக்கான தகவல் தொடர்பியல், அல்லகூற்று மொழியாக அமைகிறது என்கிறார். கூழை விரித்தல், காதணி களைதல், ஊழணி தைவரல், உடை பெயர்த்துடுத்தல் போன்ற அவளது 'நுட்பமான மெய்ப்பாடுகளும்' *(powerful expression)* அசைவுகளும் *(gestures)* ஆழமான உணர்வுகளை உரைக்கின்றன என்று மதிப்பிடுகிறார். (நவீன கோட்பாட்டு ஆய்வுகள், பொ.ந. கமலா, காவ்யா, சென்னை)

தொல்காப்பியத்தில் ஜாதிமுறைமைகள் புலையன் 'தொடுதீம்பால்' விளிப்புகள் - உரையாசிரியர் அரசியல், பதிப்பு அரசியல், தொல்காப்பியர் சமணரா?

தொல்காப்பியத்தில் மழித்தலும் நீட்டலும் (பொருள் கோடலில் சங்க இலக்கியங்களில் கோள்பார்த்தல், கட்டுவிச்சி, சகுனம், சிலப்பதிகாரத்தில் மாமுது பார்ப்பான் மறைவழி காட்டல் போன்றவை பிற்காலச் செருகல்களா?) போன்ற பொருண்மைகள் ஆய்வுக்குக் காத்துக்கிடக்கின்றன.

சமக்கிருதம் முதலாய இந்திய மொழிக் குடும்பங்களில் மட்டுமல்லாது, அதிநவீன நாகரிகம் கொண்டதாக புளகிக்கப்படும் மேலைமொழிகள் (பிரெஞ்ச், ஜெர்மன்) அஃறிணைக்குப் பால் பாகுபாடு பேணுதல் என்பனவற்றில் எத்தகைய தர்க்க நியாயமற்ற முறையிலும் அறிவியலுக்கு அப்பாலும் கட்டமைக்கப்பட்டுள்ளன. காட்டாக, வடஆரிய மற்றும் சில மேலைமொழிகளில், நீண்ட மேசையை ஆண்பாலாகவும், நாற்காலியைப் பெண்பாலாகவும் குறிப்பதைச் சுட்டலாம். மொழி எவ்வாறு ஆதிக்க மொழியாக முடியும் என்பது போன்ற கேள்விகளின் சங்கிலிக் கண்ணிகளாகப் பிணைந்து கிடக்கின்றது. இத்தரவுகளில் அறிவியல் மயப்பட்ட ஆய்வுகள் - மேலாய்வுகள் - மீளாய்வுகள் பெரியாரியல் வெளிச்சத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**விளிம்புநிலை நோக்கில் சங்கச் செவ்வியல் இலக்கியம்:**

கண்ணீர்த் திவலைகளாய் 'இரு முலைகள்' என்று பார்க்கும் பெண்ணியப் பார்வை கொண்ட குட்டி ரேவதி போலல்லாது, பழந்தமிழ்ச் சங்க இலக்கிய எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான நற்றிணையில், அண்ணாந்து ஏந்திய வனமுலை (பாலை 10) வளைந்து ஏந்து இளமுலை (பாலை 29) நல் அக வனமுலை (பாலை 33) ஏர் இள வனமுலை (குறிஞ்சி 160) வண்டற் பாலை வனமுலை (நெய்தல் 191) குவவு முலை (மருதம் 350) குறுந்தொகையில், அரும்பிய சுணங்கின் அம்பகட்டு இளமுலை (71) உறுத்தெழு வனமுலை ஒளிபெற எழுதிய தொய்யில் (276) இன்னுறழ் இளமுலை(314) வீங்கு முலை (344) ஐங்குறுநூற்றில் காதற் குழவிக்கு ஊறுமுலை (92) தும்பை மாலை இளமுலை (127), அகநானூற்றில் ஆகவனமுலை அரும்பிய (6) முலை முகம் செய்தன முள்ளெயிறு இலங்கின (7) தேம்கோள் மென் முலை (26) எனவும் பத்துப்பாட்டில், குவி முகிழ் இளமுலை (முருகு 35) ஈரக்கு இடை போகா ஏர் இளவனமுலை (பொருந.36) அணிமுலை (சிறுபாண்.2) கவை முலை (பெரும்பாண்.358) வீங்கு முலை கடுப்ப (நெடுநல்.120) முகிழ் முலை (பட்டின. 296) வனைபுனை எழில் முலை (மலைபடு.57) எனவும், பெண் உறுப்பு சார்ந்த வர்ணனைகள் நமக்கு பழந்தமிழ் இலக்கியச் சூழலில் மிக இயல்பானவை. ஆனால், கல்லாடம் கூறும் பருத்த முலை பற்றிய அடையாளம், ஒடுக்குமுறையின் குரூரத்தையும், ஒடுக்கப்பட்டோரின்

எதார்த்தத்தையும் ஒருசேரப் பார்த்தால், ஜாதி ஆதிக்க ஆணாதிக்கச் சீழ் ஒழுகுவதை உணர முடியும். பெண்ணில் முலைகள் அளவற்றுப் பருத்திருந்தன. எவ்வாறெனில், கீழ் மக்களுக்குக் கல்வி கற்பித்தால் எவ்வாறு குற்றங்கள் பெருகுமோ அவ்வளவு பெரிதாகப் பருத்திருந்தன என்கிறது அந்நூல். ஓர் உவமை சொல்லும்போது கூட, ஒடுக்குமுறையின் உக்கிரம் கொப்பளிக்கச் சொல்லப்படுவதை சான்று காட்டவே இம்மேற்கோள்கள் இங்கு எடுத்தாளப்பட்டன.

கீழ் இருத்தப்பட்ட மக்களின் குரல்கள் பழந்தமிழ் இலக்கியத்தின் பெருமளவு புலப்படாது இருந்தபோதும், ஆங்காங்கே அவர்களின் வாழ்நிலை பற்றிய பதிவுகள் தென்படுகின்றன. உத்தரநல்லூர் நங்கையின் வரிகள் இவ்வகையில் குறிப்பிடத்தக்கவை.

**“ஒருபனை இரண்டு பாளை**<br>
**ஒன்று நுங்கு ஒன்று கள்ளு**<br>
**அறிவினில் அறிந்தபேர்க்கு**<br>
**அதுவுங்கள் இதுவுங்கள்ளே**<br>
**பறையனை இகழ்வதேனோ**<br>
**பாய்ச்சலூர்ப் பதிகத்தாரே!”**

என்று பாய்ச்சலூர் பதிகத்துள் கேட்கும் கேள்வி, பழங்குடி மக்கள் கூட்டமைப்பின் தலைவர் பெ.சண்முகத்தின் கேள்வியோடு, காலநீட்சி பெறுகிறது. பக்கத்துத் தெருக்காரனை ‘தொடாதே, தள்ளி நில்!’ என்று சொல்லிவிட்டு, உலகம் முழுவதையும் பார்த்து, ’யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என்று பேசுவது எவ்வகையில் நியாயம்? என்று அவர் கேட்கிறார். இவை சற்றே பிற்காலத்தைய தமிழ்ச் சமூகப் போக்கை, அடையாளப் படுத்துபவை. பழந்தமிழ் இலக்கியப் பதிவுகள், நமக்கு முன்னர்ப் பலமுறை சொல்லப்பட்டு, புழங்கப்பட்ட, புலையன் தொடுதீம்பால் (இனிமையான சுவையுடைய பாலானது புலையன் தொட்டதால் எப்படி தரங்கெட்டது என்பதான பொருளில்) மற்றும் துடியன் பாணன் பறையன் கடம்பன் என்று இந்நான்கல்லது குடியுமில்லை (புறம் 335) என்பன போன்ற பதிவுகளை நாம் அறிவோம்.

சங்க இலக்கியத்தை, தமிழின் கருத்துக் கருவூலமாகப் பார்ப்பது பொதுவான பார்வையாக உள்ளது. திணைப் பின்புல, நிலத்தியல் கண்ணோட்டமும், சூழலியல் மற்றும் வானவியல் கண்ணோட்டங்களும், இயற்கையோடு இயைந்த அறிவியல் கண்ணோட்டமும் கொண்ட பதிவுகள், குறிப்பாகப் பெருவாரியான தன்மை நவிற்சிப் பதிவுகள், பழங்காலத் தமிழ்ச் சூழலை, தமிழர் தகவை, அறிவாற்றலை, பண்பாட்டு விழுமியங்களைப் பேசவல்லன என்பதில் யாருக்கும் எவ்வித மறுப்பும் இருக்காது. ஆனால், சங்க இலக்கிய ஆய்வுகளை அணுகினோமானால், பெரும்பாலும் விதந்தோதும் போக்கும், பாராட்டுவகைத் திறனாயும் அகச்சார்பும், மேலோங்கியிருக்கக் காணலாம். பழந்தமிழ்ச் சங்க இலக்கியம் குறித்த சமகாலப் பார்வை தமிழை, தமிழ்ச் சூழலை பண்டு தொட்டு உணர்ச்சிபூர்வமாக அணுகியதால் கட்டமைக்கப்பட்டது எனலாம். சங்க காலம், பாலாறும் தேனாறும் பாய்ந்தோடிய, கடவுள்களேகூட பாவலராக பா புனைந்த காலமாக, முன்னோர் சொல் பொன்னே போல் போற்றும் மரபாக, எவ்வித விமர்சனமும் அற்றுச் சொல்லப்பட்டு வருகிறது. உயர்வு நவிற்சியும், அதீத தற்காமமும், உணர்ச்சிமயமான தன்னியல்பு அழுத்தமும் காரணமாக கல்லும் மண்ணும் தோன்றுவதற்கு முன்னால், வாள் எப்படி தோன்றியிருக்க முடியும் என்ற கேள்வியற்று, கற்காலத்திற்குப் பின்புதான் உலோக காலம் என்கிற கால வரிசை உணர்வற்று, ‘கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளோடு முன் தோன்றிய மூத்தகுடி தமிழ்க்குடி‘ எனும் பழம்பெருமை பேசுவது. களப்பிரர் காலம் இருண்ட காலம் என, தட்டையாக சமயவாதிகளால் சமய சந்தர்ப்பம் கருதி உண்மை வளைக்கப்பட்டு புனைவுக்கு ஆட்பட்டது என, இந்தப் போக்குகளை மயிலை சீனிவேங்கடசாமி, நா.வானமாமலை, கைலாசபதி, சிவத்தம்பி, கோ. கேசவன், இ.முத்தையா, ந.வேலுச்சாமி, ராஜ்கவுதமன், ஆ. சிவசுப்பிரமணியம், ஆ.தனஞ்செயன், கேப்டன் கலியபெருமாள் போன்றவர்கள் விமர்சனப் போக்கோடு; வேறுபட்ட பார்வையோடு பழந்தமிழ் இலக்கிய வரலாற்றை அணுகியவர்கள் என்பதை மனம் கொள்ள வேண்டும். திராவிட இயக்கம் சங்க இலக்கியம் பற்றிய

வேறுபட்ட பார்வையை முன்வைத்ததை அண்ணாவின் மேற்கோள் கீழ்க்கண்டவாறு புலப்படுத்துகிறது.

சங்ககாலம் பற்றிய அறிஞர் அண்ணாவின் படப்பிடிப்பு ஆரிய வைதிகப் பண்பாட்டிற்கு எதிரான, திராவிடச் சிந்தனையை முன்வைக்கிறது. "எனது வாதத்திற்குத் துணையாக அகநானூறு, புறநானூறு, குறுந்தொகை, பட்டினப்பாலை, தொல்காப்பியம் ஆகியவற்றைச் சாட்சிக்கு அழைக்கிறேன். இக்காலத்தில் உலவும், நாசத்தை விளைவிக்கும் நம்பிக்கைகளை அக்காலத்தில் எப்படிக் காணமுடியும்? அகநானூறு, புறநானூறுகளில் எந்தத் தமிழ்நாட்டு மன்னனாவது, போருக்குக் கிளம்பும் பொழுது படைகிளம்பும் முன், பரமசிவத்திடம் பாசுபதம் பெற்றான் என்று எங்கேயாவது பாடல் உண்டா? அல்லது படை கிளம்பி, எதிரிகளுடன் போரிடும்பொழுதாவது வர்ணாஸ்திரம், வாயுவாஸ்திரம், மோகனாஸ்திரம், அக்கினியாஸ்திரம் ஆகிய அஸ்திரங்களில் எந்த அஸ்திரமாவது எதிரியை வீழ்த்திய போது உதவியதாக, எங்காவது பாடல் இருப்பதாகச் சொல்லமுடியுமா? என்று கேட்பதோடு, திராவிட மன்னர்கள் தர்மராஜன் போல் நாட்டைச் சூதாட்டத்தில் தோற்றதில்லை. அரிச்சந்திரன் போல், நாட்டை முனிவருக்குத் தானம் செய்ததில்லை. திராவிடக் கவிஞர்கள் அதலசுதல பாதாளமென்னும் பொய்யுரைகள் எழுதியதில்லை. திராவிடர் உயிர்வாழ மானத்தை இழந்ததில்லை, உறுதியின்றி உலுத்தராய் இருந்ததில்லை. சூது, சூழ்ச்சிகளை ஆயுதமாகக் கொண்டதில்லை. சுதந்திர வாழ்வுக்காக உயிரையும் தந்தனர்" என்று ஆணித்தரமாகக் கூறுகிறார் அண்ணா.

எனவே வேதகாலத்தை, வடமொழி இலக்கியம் போன்ற வைதிக நெறிகளுக்குத் தொண்டூழியம் செய்த காலத்தைப் போலல்லாமல், தமிழர் அறிவுப்பூர்வமான, ஆக்கப் பூர்வமான இயற்கையோடு இயைந்த, வாழ்க்கையை மேற்கொண்டிருந்தனர் என்று திராவிட இயக்கம் பார்க்க, விளிம்புநிலை ஆய்வுகளோ, திராவிடர்களுக்குள்ளும் உட்புகுந்த வேதவைதிகப் பண்பாட்டு நடவடிக்கைகளால், அடிநிலை மக்கள் ஜாதியப் படிநிலையின் கீழ் இருத்தப்பட்ட நிலை குறித்துப் பேசுகின்றன. எனவே சமூகத்தின் விளிம்பில் ஆதிக்கப் படிநிலையில், கடைகோடியில் ஒடுக்கப்பட்டோராய் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தமிழர்கள் குறித்தும், அக்கறையோடு பழந்தமிழ் இலக்கிய வாசிப்பு நிகழவேண்டியுள்ளது. சங்ககாலத்தில் விளிம்பு நிலையில் இருந்தவர்கள், வறுமையில் உழன்ற பாணர் மரபினர், தொடர்ந்து புலவர், காதற்பரத்தையர், சேரிப்பரத்தையர், தோல் வேலையும் சுடுகாடு காத்தலும் செய்யும் இழிசினர்கள், கொடிய வறுமையில் வாடிய எயினர் எயிற்றியர், அடிமைகள், ஏவிய வேலைகளைச் செய்யும் ஏவலர்கள், கொண்டி மகளிர் இவர்களைப் பற்றிய ஆய்வாக பழந்தமிழ்ச் சங்க இலக்கியம் வாசிக்கப்பட வேண்டியுள்ளது.

துடியெறியும் புலைய, எறிகோல் கொல்லும் இழிசின (புறம்.287) எனவும், கைவினை மாக்கள் (குறுந்தொகை.309) உழவர் (நற்.60, குறுந்.10) நெல் அரிபவர்கள் (நற். 400, 275, 350) கடைசியர் (புறம்.61) வேளாண் வினைஞர், குறுந்தொழுவர்கள், ஏவல் மகளிர், அடியோர்கள் இப்படி நிலமற்றவர்களாக, கல்வியற்றவர்களாக, வறுமை உடையவர்களாக விளிம்பு நிலை மக்கள் காணப்படுகின்றனர். இவர்களோடு கல்லா மக்களாக வேட்டுவரும் கானவரும் சேர்ந்து கொள்கின்றனர். எனவே, வளமான ஏழடுக்கு மாளிகை, பருவத்திற்கு ஒன்றாகக் குடியிருக்கக் கட்டிவாழ்ந்த, செல்வமிகு தமிழர்கள் இருந்த காலத்தில்தான், சுரைக்கொடி படர்ந்த குடிசைகளில் பசியால் கதறும் பச்சிளம் குழந்தைக்கு முலைப்பாலுக்குப் பதிலாக, உதிரம் ஒழுகும் அளவு, வறுமை பீடித்தவர்கள் வாழ்ந்தார்கள் என்பதையும், சங்க இலக்கியம் காட்டுகிறது. பொற் குவளையில் நீர் அருந்தியோரும்; பொன் அணியால் பறவை விரட்டியோரும் இருந்த சமூகத்தில்தான், கொடிய வறுமையில் உழன்றோரும், கஞ்சி குடிப்பதற்கில்லாரும் வாழ்ந்தனர். ஒரு பக்கம் அடுபசி உழந்தை இரும்பேர் ஒக்கலைக் காண்கிறோம். இன்னொரு பக்கம் தொல்பசி அறியா துளங்கா இருக்கையினரையும் பார்க்கிறோம்.

தூங்குபவன் எழும்வரையில் அவன் உணரமுடியாத வகையில், அவனிடமிருந்து

*இரத்தத்தைக் குடிப்பதற்காக அட்டை உறிஞ்சுவது மாதிரி மிருதுவாகவும், வலி இல்லாமலும், வரி வசூலிக்க வேண்டும் என்கிறது, மகாபாரதம். பழந்தமிழ்ச் சமூகத்தில் குடிமை என்னும் நிலவரி தவிர, தறியிறை, செக்கிறை, மனையிறை, அங்காடிப் பாட்டம், தட்டாரப் பாட்டம், இடைப் பாட்டம், வண்ணாரப் பாறை, கன்னாலக் காணம், சேக்காணம், ஓடக்கூலி, நீர்க்கூலி, நாட்டக் காணிக்கை, அரசுபேறுபாண்மை, பண்டவெட்டி, சபாவிநியோகம் போன்ற வரிகள் பிற்காலத்திற் போல இல்லாவிட்டாலும், சங்க காலத்தில் வரி வாங்குவது கொடுமையாக மாறிவிடக்கூடாது என்பதற்காக, யானைபுக்க புலம்போல வரன்முறை இல்லாது வரிகொளாது நெறியறிந்து இறைகொளவேண்டும் என, பிசிராந்தையார் பக்குவமாக வரி வாங்க வேண்டியதன் தன்மையை புறம் 184ஆம் பாடலில் எடுத்துக் கூறுகிறார். இது நாம் அறிந்ததே. இதைப்போல வெள்ளைக்குடி நாகனாரும் வறுமைக் காலத்து, வரிவசூல் நடவடிக்கை குறித்து மன்னருக்கு அறிவுறுத்தும் பாங்கோடு, பாட்டாளிகள் பக்கம் நின்ற பாவலராகக் காணக் கிடைக்கிறார் என்கிறார், அ.ப.பாலையன்.*

*மலைகளிலே வாழும் குறவர்களிடம் கூட, மலைபடு பொருள்களை வரியாக அச்சுறுத்திப் பெற்றான் மன்னன் நன்னன் என்பது,*

**''பெரும்பயன் தொகுத்த தேங்கொள் கொள்ளை**
**அருங்குறும் பெறிந்த கானவர் உவகை**
**திருந்து வேல் அண்ணற்கு விருந்திறை சான்மென்"**

*என்ற அடிகளால் புலனாகும்.*

*அடுத்ததாக, ஆடை அணிதல் குறித்த பதிவுகளைக் காணலாம்.*

**''நோக்கு நுழைகல்லா நுண்மைய**
**பூக்கனிந்து அரவுரியன்ன**
**அறுவை நெய்யும் அளவிற்கு"**

*மீன்வலை காய்ந்த நிழலைப்போல மெல்லிய ஆடை மற்றும் மோதிரத்தில் மடித்து வைத்து விடக்கூடிய பட்டாடை, பல நுட்பமான ஆடைவடிமைப்பு எனப் பழங்காலத்துச் சிறப்பமைப்புகள் இருந்தபோதிலும், சங்க காலத்துப் பொருநராற்றுப் படையில், புலவர்தம் ஆடை குறித்துக் கூறுவது மிக விநோதமானது.*

*ஈரும் பேனும் கூடிக்குலவி என் உடையில் அரசு புரிகிறது. அது வேர்வையில் நனைந்து நாற்றமடிக்கிறது. என் உடை வேறு நூல்கள் நுழைந்திருக்கின்ற தையல் போட்ட கிழிந்த கந்தை என்பதை,*

**''ஈரும் பேனும் இருந்து இறை கூடி**
**வேரோடு நனைந்து வேற்றிழை நுழைந்த**
**துன்னல் சிதார்"** *(பொரு 80-82)*

*என்று, வறுமை படம்பிடிக்கப்படுகிறது.*

**''பருவ வானத்துப் படுமழை கடுப்ப**
**கருவைவேய்ந்த கவின்குடிச் சீறூர்"** *(பெ.பா.190-91)*

*அடுத்து எப்படிப்பட்ட வறுமை நிலை துரத்த, இவர் சுரங்களைக் கடந்து சென்றார் என அறிந்தால் அன்பு, பெருமை, சிறுமை என்பதெல்லாம் எழுத்துக்கெழுத்து பொருந்தாமை புலப்படும்.*

**''புனிற்றுநாய் குரைக்கும் புல்லென் அட்டில்**
**காழ்சோர் முதுசுவர்க் கணச்சித லரித்த**
**பூழி பூத்த புழற்காள மாம்பி**
**ஒல்குபசி உழந்த ஒடுங்குநுண் மருங்குல்**
**வளைக்கைக் கிணைமகள் வள்ளுகிர்க் குறைந்த**
**குப்பை வேளை உப்பிலி வெந்ததை**
**மடவோர் காட்சி நாணிக் கடையடைத்து."**

*சில நாள்களுக்கு முன்புதான் குட்டிபோட்ட நாய், தன் குட்டியை மெல்லிய குரலில் அழைக்கும் அளவுக்குப் புன்மை உடைய வீடு, அப்பாணன் வீடு. வீட்டுக் கூரையின் மூங்கில்கள் எல்லாம், கட்டுகள் இற்று விழுந்து கொண்டிருக்கின்றன. பழைய சுவர்களில் கறையான் கூட்டம் அரித்துக் குவித்த புழுதிக் குவியல்களாக உள்ளன. அவற்றில் காளான்கள் பூத்திருக்கின்றன. வருத்தம் தந்த பசியாலே, பாணன் மகள் ஒடுங்கிய இடையோடும் வளையல் அணிந்த கையோடும், குப்பையில் கேட்பாரற்று முளைத்த வேளைக் கீரையை, உப்பில்லாமல் (உப்புக்கும் வழி இல்லாமல்) வேகவைக்கிறாள். பிறகு என்ன செய்கிறாள்? வறுமை கூறுவது இயல்பு என்று அறியாதவளாகிய அவள், தங்கள் குடும்பத்தை ஊர் கேலி செய்யுமே என்று, உள்ளே நடப்பது வெளியே தெரியக்கூடாது என அஞ்சித் தலைவாயிலை அடைத்துக்கொண்டு நின்றிருக்கிறாள்.*

(பின்னர் எளிய தமிழ்க் குடும்பங்களில் கதவைச் சாத்திக்கொண்டு சாப்பிடும் முறை இப்படித்தான் வந்திருக்க வேண்டும் எனக் கொண்டுகூட்டலாம்.)

இப்படிப்பட்ட காட்சிகளை நிறையக் கொண்டிலங்கும் சங்ககாலத்தைப் பொற்காலம் என்பதா? வறுமையை உண்டாக்கிவிட்டு, பிறகு அதே வறுமையை நீக்குவது போல் நடவடிக்கை மேற்கொண்ட, முதலாளித்துவ தர்பார்கள் என்பதா? என்று பேசுகிறார் ந.வேலுச்சாமி. இவ்விதம் உணவு, உடை, உறையுள் என அடிப்படைத் தேவை ரீதியாக, விளிம்பில் நிறுத்தி வைக்கப் பட்டிருந்தவர்கள் கொந்தளித்து விடக்கூடாது என்பதற்காகவே, 'செல்வத்தின் பயனே ஈதல்' என்பதாக ஈகைத்திறம் பரவலாகப் பேசப்பட்டிருப்பதையும் பார்க்கிறோம்.

மகளிர் நிலை குறித்து ஆயப் புகுந்தால், அங்கும் ஆதிக்கத்தின் கோரமுகம் நமக்குத் தென்படுகிறது. தொடக்கப் பத்தியில் சொன்னதைப் போலவே, உறுப்பு வர்ணனைகளும், பாலியல் நுகர்வுச் சாதனமாகப் பெண்ணைப் பாவிக்கும் போக்கும், சங்ககால கட்டத்தில் தொடங்கி விட்டதைப் பார்க்கிறோம். மேலாதிக்கத் தலைவியின் காதலுக்கு விழுந்து விழுந்து பணிவிடை செய்யும் தோழி என்றைக்காவது காதலித்திருக்கிறாளா? என்று கேட்கும் வைரமுத்துவின் கேள்வி மிக நியாயமானது. இதைப்போல தலைவியின் மூன்றுநாள் மாதவிலக்குக் காலத்தைக்கூட, கூடி முயங்க வாய்ப்பற்ற கொடுங்காலமாகக் கருதி, தலைவன் பரத்தைச்சேரி நோக்கிப் போவதும், பரத்தையரின் பாடுகளும் பழந்தமிழ் இலக்கியத்தில் பதிவாகியுள்ளது மிகுதி.

வைதிகப் பண்பாட்டில் உள்ளபடி, சிசுமணமோ இன்னபிற பெண்ஒடுக்கு முறைகளோ சங்கத் தமிழகத்தில் இல்லையெனும்படி, ஆரியப் பண்பாடு கொடுங்கோன்மை மிக்கதாக, விளங்கி யிருப்பதைக் காணமுடியும். உதாரணமாக, பிரம்மகத்தி தோஷம் பற்றிய மனுஸ்மிருதியின் (ராமானுஜர் உரை) படப்பிடிப்பு இவ்வாறு உள்ளது. இந்திரனுக்கு பிரம்மகத்தி தோஷம் கிடைத்தது. அவனுடைய உடம்பு அழுகி நாறுகிறது. பூமியிடம் கெஞ்சி, தன்னுடைய தோஷத்தைக் கொஞ்சம் கொடுக்கிறான். உடனே பூமியில் வறட்சி வந்துவிடுகிறது. மரம், செடி, கொடிகளிடம் இறைஞ்சி, தன் தோஷத்தின் ஒரு பகுதியைக் கொடுக்கிறான். மரங்களில் பால் பிசின் உண்டாகிறது. மீதத்தைப் பெண்களிடம் கெஞ்சி, கொடுக்கிறான். பெண்களுக்கு மாதவிடாய் உண்டாகி விடுகிறது. பெண் எக்குலத்தில் பிறந்தாலும் பிரம்மகத்தி தோஷத்திற்குப் பொறுப்பேற்றுக் கொண்ட தால் அவள்; தாழ்குலத்திற்குச் சமமானவள். எந்த இனப் பெண்ணுக்கும் சொர்க்கம் செல்ல வாய்ப்பில்லை. எட்டு வயதுக்குள், பெண்ணைக் கன்னிகாதானம் செய்து கொடுத்துவிட வேண்டும். அப்படிப் பூப்படையும் காலம் வரை செய்யாதிருப்பது, குற்றத்திற்குரிய தண்டனையாக உலக வரலாற்றில் கண்டறியாத – கேட்டறியாத கொடூரம் இதுவாகத்தான் இருக்கமுடியும் எனும் அளவுக்கு நடைமுறைகள். எழுதப்படாத சட்டங்கள்... அதாவது பூப்படைவதற்குள் பெண்ணைத் திருமணம் செய்து கொடுக்காத தந்தை, அப்பெண்ணின் ஒவ்வொரு மாதவிடாய்க் காலத்திலும் மாதவிடாயைப் பருகவேண்டும். அல்லது பிராமணனுக்கு கொழுத்த பசுவைத் தானமாகக் கொடுக்க வேண்டும். இப்படிப்பட்ட, கொடிய பண்பாட்டுக் கூறுகள் தமிழ்ச்சங்க காலத்தில் பார்க்க முடியாது. பெண்கள் கல்வி கற்று வல்லாராக கவி பாடுவாராக, தூதுவராக, மன்னர்களை இடித்துரைத்துத் திருத்தும் ஆற்றலாளராக, சங்கப் பெண்டிர் அவ்வையார், ஒக்கூர் மாசாத்தியர், வெள்ளி வீதியார், வெண்ணிக் குயத்தியார், குறமகள் இளவெயினி என கற்ற பெண்கள் முற்காலத்திலேயே இருந்தனர் என்கிற பதிவையும் பார்க்கமுடிகிறது. ஆனால், வைதிகப் பண்பாட்டின் உட்பாய்ச்சல் காரணமாக, விதவை போன்ற சொல்லாடல்களும் வாழ்முறையும் தமிழ்ச் சமூகத்திற்குள் வந்துவிட்டன.

பெண்பாலியல் நுகர்வுப்பண்டமாக பார்க்கப்பட்டது என்பது, தலைமக்களில் உள்ள பெண்களும் சரி, கீழோர் எனப் பகுக்கப்பட்டோரில் உள்ள பெண்களும் சரி, யாரும் தப்பமுடியவில்லை. முந்நீர் வழக்கம் மகடூவோடு இல்லை என்பதாகட்டும், சொல்

எதிர் சொல்லாள் (நற்.201) என்பதாகட்டும், மறுமொழிபெயர்த்தல் ஆற்றாள் (நற்.206) உயிரைவிட நாணம்தான் பெண்ணுக்குச் சிறந்தது (நற்.17) என்பதாகட்டும், நினைத்த – காதலித்த பெண்ணை அடையமுடியாத ஆண் மடலேறுவதாக மிரட்டிப் பணிய வைப்பதாகட்டும், பெண் இவ்வாறான களங்களில், இரண்டாம்தரமாக நடத்தப் பட்டதைச் சான்றுகள் காட்டுகின்றன. பெண்ணினது நீர்ச்சுழி போன்ற கொப்பூழ், பரந்த அல்குல், பருத்த கொங்கைகள் என வருணித்துத் தள்ளிய புலமை அறம் எத்தகையது என நாம் அறிவோம். காதற்பரத்தையர், காமக்கிழத்தியர், வரியலர், துடியர், கோடியர் இப்படிப் பலரும் மன்னர் மயப்பட்ட சங்கப் பனுவல்களுக்கிடையே, பேசுபொருளாக வந்து போகிறார்களேயொழிய, முதன்மைப் பதிவுகளாக எங்கும் இடம் பெறவில்லை. வைதிக ஆரியப் பண்பாடு – பூர்வ தமிழ்ப் பண்பாடு, இனக்குழுப் பண்பாடு – அரசுருவாக்க உடைமைச் சமூகப் பண்பாடு, மற்றும் வென்றெழுதல் – பணிந்து அடங்குதல் இவற்றுக்கிடையேயான பண்பாடு, போன்ற இடையீடுகள், ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும். தொடக்கத்தில் தொழில் அடிப்படைச் சமூகப் பகுப்பு என்னுமாறு, சமநில சச்சதுர நிலையிலிருந்து மேல் – கீழ் எனுமாறு வருணாசிரம ஏணிப்படி நிலை உருவாக்கம் பற்றி, கேப்டன் கலியபெருமாள் தமது, 'தமிழர் உண்மை வரலாறு நூலில் (அரிச்சந்திரன் உண்மை பேசுவதைச் சோதிக்க ஆயிரம் வழிகளிருக்க வெட்டியானாய்ப் பணித்துச் சோதிக்கும் புராணிகம் குறித்து இவர் எழுப்பும் கேள்வி மிக முக்கியமானது) பேசுகிறார். இக்காலகட்டம் தான் 'பார்ப்புக்கன்றி பணிபு அறிதிலேயே' எனும் குரல் ஒலிக்கத் தொடங்கியது எனலாம். தானம் பற்றிப் பேசுகிறபோது, அரச ஈகை, வரிசையறிந்து பரிசில் வழங்குதல் முதலியன மேல்தட்டு சார்ந்து, நிகழ்ந்திருப்பதைக் காணலாம். தானம் வழங்குவோரும் பெறுவோரும் நீர்சொரிந்து கொடுத்தனர்; பெற்றனர். நீர் தீட்டுக் கழிப்பதற்கானது என்பதை இங்குக் கருதவேண்டும்.

தலையில் குடுமி வைத்தார்கள் (அய்ங்.202) (ஏனைய தமிழர்கள் கூந்தல் வளர்த்தார்கள்) காவிக்கல்லால் தோய்த்துக் காவியூட்டப்பட்ட ஆடையை அணிந்து (மு.பா) கையில் குடைபிடித்து, பிடரியில் உறியும், கரகமும், முக்கோலும் அசைந் தாடப் பார்ப்பனப் புரோகிதர்கள், பயணம் செய்தார்கள். (கலி.9) உலகிலுள்ள மக்களைவிடத் தாங்களே புலன் அழுக்கு இல்லாதவர்கள் என்ற கட்டுக் கதையைப் பரப்பினார்கள் (புறம்.126). இந்தச் சுத்தக் கொள்கையைத் தங்களது உயரிய கொள்கை யாக, நிலைநாட்டினார்கள். பிறர் நீராடிய ஆற்றில் குளிப்பதையும், சடங்கு செய்வதையும் தவிர்த்தார்கள். புதுவெள்ளத்தில் தமிழ் மக்கள் புதுப்புனலாட்டம் என்ற விழாவைக் கொண்டாடிய போது, அந்த வெள்ளத்தில் அவர்கள் கலந்த நறுமணப் பொருள்களாலும், கள்ளாலும் கலங்கலாக ஆனதால் அதில் நீராடவும் இல்லை; வாயைக்கூடக் கொப்பளிக்கவில்லை (பரி.6, பரி.திர.2) என்று ராஜகவுதமன் கூறுகிறார். இதிலிருந்துதான் உனக்கும் எனக்கும் ஸ்நானப் பிராப்திகூட கிடையாது என்கிற இன்றுவரை புழங்கும் வழக்காற்றுக் கதையாடல் பிறந்திருக்கிறது எனலாம். தானம் பற்றிய வணிகமயமான சூழலில்தான், அறவிலைவணிகன் என்ற சொல் உருவாக்கம் பெற்றிருக்கிறது எனலாம்.

போரில் தோற்கடிக்கப்பட்ட நாட்டுப் பெண்களை, கொண்டி மகளிர் எனப் பிடித்து வந்ததும், அவர்களை அடக்கி ஒடுக்கியதும், காரணமாகவே, பின்னர் தமிழ்நாட்டில் அடிமைமுறை உருவாக, விசையாக இருந்தது என்பதும் அறிவர் ஆ.சிவசுப்பிரமணியன் கூற்றாக உள்ளது.

சங்க இலக்கியம் எழுத்தெண்ணி ஆயப்பட்டதைப் போல, பல நிலைகளில் இன்றைக்கு ஆய்வுக்குட்பட்டிருக்கிறது. 'வலவன் ஏவா வான ஊர்தி'(Aeroplane) முதல் 'மயிற் குறை கருவி' (Shaving Blade) வரை விதந்தோதப்பட்டுள்ளது. சங்க இலக்கியத்தில் தோடு, மூக்குத்தி, பாக்கு வெட்டி, குண்டு சட்டி என சலிப்புத் தட்டும் விதத்தில் தொகுப்பாய்வுகள்..... சங்க இலக்கியத்தில் வயிற்றுப் போக்கு (செம்மொழி மாநாட்டுக்கு வந்த ஓர் ஆய்(வு) கட்டுரைத்தலைப்பு) என நாறடித்தல்கள் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன.

இவற்றுள் ஆரியவரவுக்கு முந்தைய, பூர்வதமிழ்க் கலைஞர்களாக பரிமளித்த கூத்தர், பாணர், பொருநர், விறலியர், இழிசனர், புலையர், கணிகையர், கடைசியர், தொழுவர் எனப் பல நிலைகளில் ஆய்வுகள் பெரிய அளவுக்கு நிகழ்ந்து விடவில்லை என்பதை நோக்க வேண்டியிருக்கிறது.

கால்நடைகளும், நெல் விவசாயமும் அன்று வளர்ச்சியடைந்த பொருளாதாரத்தைக் குறித்தன. இந்த வளர்ச்சிபெற்ற சமூகப் பகுதியில் உடலால் உழைத்துப் பிழைத்த ஆயர்களும், உழவர்களும் காதல் பாடல்களுக்கு உரிய மாந்தர்களாகப் பாடப்படவில்லை. மாறாக, வயலுக்கு உரிமை பூண்டவர்களும், கால்நடைகளுக்குச் சொந்தக்காரர்களும், போர்த் தலைவர்களும், தேரில் சென்ற செல்வந்தர்களும், மாடங்களில் வாழ்ந்தவர் களும் தலைவன், தலைவியராகப் பாடப்பட்டார்கள். அரசர்களும், அரசிகளும்காதல்தலைவன்,தலைவியராகப் பாடப்பட்டார்கள் (முல்லைப் பாட்டு, நெடுநல்வாடை) தொல்காப்பியம் என்ற இலக்கண நூலில் கூறப்பட்ட விதிகள் பலவற்றுக்குப் பொருத்தமாகப் பலபாடல்கள் கிடைக்கவில்லை. என்ன நடந்தது என்பது சிக்கலும் குழப்பமுமாக இருக்கிறது. வடக்கிலிருந்து வந்த வைதிக - வைதிகமல்லாத பண்பாட்டுக்காரர்களால் அப்போதே தமிழ் வரலாறு மாற்றப்பட்டதாகத் தெரிகிறது. பாடல்களைத் தொகுத்த, தேர்வு செய்த, தணிக்கை செய்த சான்றோர்கள் தத்தம் கொள்கைக்கு ஏற்றபடி, தங்கள் கைவரிசையைக் காட்டியிருக்கிறார்கள் என்றும் பார்க்கமுடியும். செல்வர் வீட்டுப் பெண் பிரசவமான போது, அவளைத் தீட்டுக்காலம் வரை படுக்க வைப்பதற்கான கட்டிலைப் பின்னியவனும் இழிசினன் என்று பழிக்கப்பட்டான். ஊசியால் தோல் வாரைக் கொண்டு இவன் கட்டில் பின்னியதே இதற்குக் காரணம். (புறம்.82) (தோல்வார் என்று பாட்டில் குறிக்கவில்லை. உரை எழுதிய வைதிகரே குறித்துள்ளார்.) இதனை விட்டுவிட்டுப் பார்த்தாலும் கூட, சேவைப்பணி புரிபவன், குறிப்பாக பிரசவத் தீட்டோடு தொடர்புகொள்பவன் என்பதற்காக, இழிவானவனாகக் கருதப்பட்டது தெரிகிறது. ஊராரின் அழுக்காடையோடு சம்பந்தப்படுபவள் புலைத்தி; பிரசவத் தீட்டோடு சம்பந்தப்படுபவன் இழிந்தவன். இப்படி இவர்கள் பழிக்கப்பட்டதற்கான ஒரே அடிப்படை அசுத்தம் என்ற தீட்டுத்தான். அசுத்தத்தைப் பார்ப்பன வைதிகம் தீட்டு என்று சடங்கு மயமாக்கியுள்ளது. மக்களில் ஒரு பிரிவினரை, செய்யும் தொழிலால் இழிந்தவர்கள் என்று ஆக்கியதில் பார்ப்பன வைதிகத்திற்கு முழுப்பொறுப்பு உண்டு. இந்தக் குற்றச்செயலுக்குப் பார்ப்பனக் கருத்தியலே பொறுப்பேற்க வேண்டும் என்று பேராசிரியர் ராஜ்கவுதமன், தமது தலித் பார்வையில் தமிழ்ப் பண்பாடு என்ற நூலில் ஆய்கிறார்.

மன்னர்கள், தொகுப்பித்தமையாலும் தொகுத்தவர்களின் மற்றும் தொகுப்பித்தவர்களின் சமய, வர்க்கச்சார்பு மேலாதிக்கம் காரணமாகவும், பல இடைச்செருகல்களும், புறக்கணிப்புகளும், பதிப்பாசிரியர், உரையாசிரியர் ஆகியோரது அரசியலாலும், தீயிட்டு எரித்ததில் ஆற்றலுடன் எரியாமல் நின்றவை; நீரிலிட்டு அழித்தபோது எதிர்த்து நீந்தியவை என்றவாறு அனல்வாதம், புனல்வாதம் என்கிற கதையாடல்களில் போக்கடிக்கப்பட்டு, அழித்தொழிப்புக்கு உள்ளான பதிவுகள் போக, கிடைத்துள்ளவற்றைப் பற்றிய - அவற்றுக்குள் இருந்தே பழந்தமிழ்ச் சமூகம் குறித்த, பிம்பத்தைக் கட்டமைக்க வேண்டியிருக்கிறது. எனவேதான் மயிலை சீனி.வேங்கடசாமியின் பொற்காலம் இருண்டகாலம் குறித்த மறு ஆய்வுகள் தமிழ்ச் சமூகத்தில் அதிர்வுகளை உண்டாக்கின. தொடர்ந்து, பொ.வேல்சாமி போன்றோர் இந்தத் தளத்திலிருந்து இயங்கி வருகிறார்கள்.

### திருக்குறளும் பெரியாரியலும்:

**''திருக்குறள் கல்லாதானைத்**
**திருமணம் செய்துகொள்ளேன்''**

என்று வாதிடுகிறாள், உவமைக் கவிஞர் சுரதாவின் கவிதைத்தலைவி. 'கொல்லேறு தழுவுதல்' வரைவு செய்து கொள்ளப் போகும் தலைவனுக்கான அடிப்படைத் தகுதியாகப் பார்த்த சங்கப்பெண் மரபிலிருந்து, வீரம்

*சார்ந்த தகுதியை அறிவாராய்ச்சி சார்ந்த – அறநெறி ஒழுகலாறு சார்ந்த தகுதியாக, சுரதாவின் கவிதைப் பெண் இடம் மாற்றியும் பொருள் கூட்டியும் பார்க்கிறாள். இது பெரியாரியல் கருத்துருவாக்கத்தால் நிகழ்ந்த பார்வை எனலாம். எனவே, தமிழர் வாழ்வில் திருக்குறளின் இடம், கூடுதல் முக்கியத்துவம் பெறுகிறது. திருக்குறளைத் திராவிட இயக்கம் விமர்சனத்தோடு அணுகினாலும் அதன் முக்கியத்துவத்தைக் கூடுதல் கவனமெடுத்துப் பரவலாக்குவதில் மிக முனைந்தது.*

*புத்தருக்கு முந்தைய, பகவத் கத்யாயனர் எல்லா நிகழ்வுகளுக்கும் ஏதேனும் ஒரு காரணம் இருந்தாக வேண்டும் என்பதையே மறுக்கிறார். நிகழ்வுகள் தன்னிச்சையாக நிகழ்வதாய் அவர் கூறுகிறார். மகாலி கோசலரோ ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் ஒரு காரணம் இருந்தாக வேண்டும் என்பதை ஒப்புக்கொள்கிறார். ஆனால், அந்தக் காரணம் மனிதனால் தோன்றுவதல்ல. மாறாக அது இயற்கையால், அவசியத்தால், தற்செயல் விதிகளால் முன்பே முடிவான ஊழ்வினையால் அதுபோன்ற பிறவற்றால் என்றே போதித்தார் அவர். இந்தக் கோட்பாடுகளைப் புத்தர் மறுத்தார். ஒவ்வொரு நிகழ்வுக்கும் ஒரு காரணம் உண்டு என்பது மட்டுமின்றி, ஒவ்வொரு காரணமும் ஏதாவதொரு மனிதச் செயற்பாட்டாலோ, இயற்கை விதியாலோ விளைவதே என்றும் அவர் கருதினார்.*

*'ஊழ் வலியது' என்று மரபாகச் சொல்லப்பட்டு வந்ததன் தொடர்ச்சியாக, வள்ளுவரும் 'ஊழிற் பெருவலி யாவுள' என்று கேட்கிறார். ஆனால், 'ஊழையும் உப்பக்கம் காண்பர்' என்றும், 'தெய்வத்தால் ஆகாதெனினும், முயற்சி மெய் வருத்தத்திற்கு விளைவு உண்டு' எனவும் சொல்லி ஊழைக் கடந்து போகிறார் வள்ளுவர்.*

*'மழித்தலும் நீட்டலும் வேண்டா', எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்', 'எப்பொருள் எத்தன்மைதாயினும்', பரந்து கெடுக உலகியற்றியான்' போன்ற குறட்பாக்கள் மொழிகின்றன.*

*மூவேந்தர் காலத்தில் ஒரு குறிப்பிட்ட பிரிவினருக்கு வழங்கப்பட்ட பெருவாரியான மானியங்களை, களப்பிரர் ஆட்சிக் காலத்தில் மீளப்பெற்று எளிய மனிதர்களுக்கு வழங்கிய காரணத்தால், பாதிப்புற்றவர்கள் சார்பான கருத்தியல் நிலைப்பாடுடையோர் களப்பிரர் காலம் இருண்டகாலம் என்று எழுதிச் சென்றனர். களப்பிரர் காலம் இருண்ட காலமல்ல என மயிலை சீனி. வேங்கடசாமி கழிந்த நூற்றாண்டில் சொல்லிச் சென்றபிறகும் கூட, இன்னும் களப்பிரர் காலம் இருண்ட காலம் எனும் பழைய பாடத்தையே மொழியாசிரியர் சொல்லிவரும் நிலை வருந்தத்தக்கதாகும்.*

*'செம்மை' புலம் என்கிற பண்புத் தொகையில் 'செம்மை' என்பது நிறம் சார்ந்த பண்பா? வளமை சார்ந்த பண்பா? என்று நுணுகி ஆராயவேண்டியிருக்கிறது.*

| **நிறம்சார் பண்பு** | **வளம்சார் பண்பு** |
|---|---|
| **செங்குன்றம்** | **செந்தமிழ்** |
| **செஞ்சடை** | **செம்பதிப்பு** |
| **செம்மண்** | **செஞ்சோறு** |
| **செந்நீர்** | **செம்மாந்தநிலை** |
| **செந்நாய்** | **செம்பாகம் / செம்பாதி** |
| **செவ்வாய்** | **செங்குட்டுவன்** |
| **செஞ்சாந்து** | **செஞ்சுருட்டிப்பண்** |
| **செங்குருதி** | **செங்கோல்** |
| **செங்கடல்** | **செம்புலம்** |
| **செங்கதிர்** | **செங்காந்தள்** |
| **செங்கை** | **செங்கை** |
| **(சிவந்த நிறத்திலானகை)** | **(கொடுத்து சிவந்தகை)** |

*ஆக, உரைகாரர்களால் நிறப்பண்பு அடிப்படையில் செம்புலம் பார்க்கப் பட்டதால், பொருளாழமும் விரிந்த நிலையில் சொற்பொருள் பயன்பாடும் இன்றி மயங்கியதோடு, மொழிபெயர்க்கப்படும் போது, உலகளாவிய நிலையில் அது மயக்கப் பொருளிலேயே சிவப்புமண் என்ற பொருளில் பரவிவிட்டது என்பதையும் நினைவுகூரவேண்டும். இந்த நோக்கிலேயே ஏ.கே.ராமானுஜம், செம்புலத்தை (Fertiled earth) என்று பெயர்க்காது (Red earth) என்றே மொழிபெயர்த்திருக்கிறார் என்பது, இந்த இடத்தில் நோக்கத்தக்கது. செம்புலம் – செம்மையான புலம் அமோக விளைவுக்கு ஏற்ற வளமான நிலத்தில் பெய்த மழைநீர் நிலத்தையும் பண்படுத்தி*

விளைவுக்கும் பயன்பட்டாற்போன்று தலைவன் தலைவி சேர்க்கை அமைந்தது எனப் பொருள் கொள்வதே, சாலவும் பொருத்தப்படுவதோடு, சிறந்தும் விளங்கும். இதுவும் பெரியாரியல் கருத்துருவாக்கத்தால் நிகழ்ந்த எனது ஆய்வுப் பார்வை எனத் துணியலாம்.

சைவ வல்லாண்மையின், அனல்வாதமும் புனல்வாதமும் தமிழ்ச்சமூகச் சிந்தனை மரபில் பக்கவாதத்தை ஏற்படுத்தின. இடைச் செருகல்களும், கோணல்களும், திருகல்களும், இருட்டடிப்புகளும், பாடம் மாற்றி, ஏடு பெயர்த்தல்களும் ஆக உண்மைத் தமிழ்ச் சமூகக் கலை இலக்கியப் பண்பாட்டு வரலாற்றில் எழுதமுடியாத சவால்கள் உருவாக்கப்பட்டன

**பழமொழி நானூறும்**
**பெரியாரியப் பார்வையும்:**

மறுபடைப்பு என்கிற வகையில் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள், ஏன் சங்கச் செவ்வியல் இலக்கியங்களுள், தனித்தமைந்த பாங்குடையது, பழமொழி நானூறு. இது ஒருவகையில் மொழிக்குள் மொழிபெயர்ப்பாய் அமைந்தது எனவும் சுட்டலாம்.

பண்டுதொட்டு, மொழி புழங்கு வெளியில் மக்களால் உருவாக்கப்பட்டு, காலந்தோறும் மெருகூட்டப்பட்டு, சொற்செறிவு, பொருட் செறிவு, இயைபு, எதுகை, மோனை, யாப்பமைதி எனச் செப்பம் செய்யப்பட்டு, விருட்சத்தை விதைவடிவில் கட்டமைத்து, வழங்கிவருதலே பழமொழி எனும் வழக் காற்றுப் படைப்பு.

பொதுவாக, நாட்டுப்புற வழக்காற்றுக் கூறுகளின் தாக்கம், செவ்வியல் இலக்கியங் களுக்குள் உள்ளுறைந்திருக்கின்றது. குறிப் பாக, வழக்காற்றுப் படைப்பான பழமொழி, இலக்கியப் பனுவலாய், மறுகட்டமைப்புச் செய்யப்பட்டதன் காரணமாக, அதனால் விளைந்த ஒரு புத்திலக்கிய ஆக்கமே, பழமொழி நானூறு என வரையறை செய்யலாம்.

செவ்வியல் இலக்கியப் போக்குகளை விமர்சனப் பார்வையற்று, 'முன்னோர் சொல் போன்னே போல் போற்றி' வரும் வழக்கம், இன்றைய நவீன அறிவியல் யுக ஆய்வுலகில் மாறிவருவதைக் கவனிக்கிறோம்.

சமூகம் என்பது, எல்லோருக்கும் பொது வான ஒரே சமூகமாக இருப்பதில்லை, சமூகநீதியும் எப்போதும் எல்லோருக்கும் பொதுவாக இருந்திருக்க முடியாது. ஆள்வோர் - ஆளப்படுவோர், மேலோர் - கீழோர், வருணப் படிநிலைகள் - வர்க்கப் படிநிலைகள் என இருமைகளின் எதிர்வுப் போக்குகளால் சமூகம் பிளவுபட்டுக் கிடப்பதைப்போல, சமூகநீதி மாறுபட்டு அமைவதும், அதன் விளைவான கலை இலக்கியப் படைப்புகளும் வெவ்வேறு நிலைகளில் இயங்குதளமாகி, பொருண்மை மாறுபட்டு நிற்பதையும் பார்க்கமுடியும். எடுத்துக்காட்டாக, 'ஊருடன் ஒத்து வாழ்' என்பது, புதிய சிந்தனைக்கும், கேள்வி எழுப்புதல் தர்க்கச் சிந்தனை வளர்ச்சி, புதியன காண விழைதல் என எல்லாவற்றுக்கும் முட்டுக்கட்டை போடும் சிந்தனையாக அமையும், ஊர் எவ்வாறான போக்கிலும், பிற்போக்குச் சக்திகளின் பிடியிலும், மேலாதிக்கத்தின் பிம்பமாகவும் அமைகிறபோது, ஊருடன் ஒத்துப்போகச் சொல்வது என்பது, ஊர் இப்படித்தான் இருக்கும்; அதை மாற்ற முடியாது. எனவே, ஆதிக்கத்திற்கு அடிபணிந்து ஒத்துப்போ எனப் பொருள் விரிவுபெற, இப்பழமொழி யாருடைய நலனுக்குச் சேவை செய்யும் என எண்ணினால், ஆளும் வர்க்கத்துக்குத்தான் சேவைசெய்யும் எனத் துணியலாம். ஊருடன் ஒத்துப்போயிருந்தால் பூமி தட்டை என, ஊர்உலகம் எண்ணிக் கொண்டிருந்தபோது, உருண்டை எனவும், சக்கரம் கண்டுபிடித்து விரைந்த போக்குவரத்துத் தகவல் தொழில்நுட்பம் காணவும், நோய்களை வினைப்பயன் எனக் கூறிக்கொண்டிருந்த போது, மருத்துவ வளர்ச்சி அதைச் சீரமைத்தும் சாதனைகள் செய்ய முடிந்திருக்காது.

வலிமையுள்ளது தப்பிப் பிழைக்கும் *(Survival of the Fittest)* எனும் சார்லஸ் டார்வின் கருத்துக்கூட, 19 ஆம் நூற்றாண்டு தொழிற்புரட்சிக்குப் பிந்தைய கம்யூனிசக் கருத்தியலால் மாறக்கூடியதாகியது என்கின்றனர். இந்தக் கருத்தியலின்படி, முதலாளித்துவம்தான் வலிமையுடையது அதுதான் தப்பிப் பிழைக்கும் என்பது,

கம்யூனிசப் புரட்சியால் அடக்கி ஒடுக்கப்பட்ட, கீழ்ப்படி நிலையில் கிடந்த, தொழிலாளி வர்க்கம் வலிமைபெற்று, முதலாளித்துவத்தை வீழ்த்தி மாற்றம் பெற்றதை ஆய்வு நோக்கர்கள் கூறுவர்.

இதைப்போலவே, சில பழமொழிகளும் காலந்தோறும் மக்கட்திரளின் ஏற்பிசைவு பெற்று வந்தபோதும், சில பழமொழிகள் காலத்தின் போக்கிற்கு - அறிவியல் சிந்தனைக்கு அப்பாற்பட்டு, பொருண்மை கொண்டு இலங்குவதையும். அறியாமை முடிச்சுகளில் இறுக்கப்பட்டிருப்பதையும் கூர்ந்தாய்வு செய்யலாம்,

**''சட்டியிலிருந்தாதான் ஆப்பைல வரும்.''**
**''ஊராம்புள்ளைய ஊட்டி வளத்தாத் தன்புள்ள தானே வளரும்.''**

இவ்வாறாக,பழமொழிகளைக்கட்டவிழ்த்து ஆயவேண்டியுள்ளது. கட்டமைப்பு கல்வியின் இன்றியமையாமை, கற்றோன் சிறப்பு, கல்லாதாரின் இழிவு, அவையறிந்து ஒழுகுதல், தர்க்கமுறை ஒழுக்கம், இன்னா செய்யாமை, வெகுளாமை, பெரியாரைப் பிழையாமை, புகழ், சான்றோர் செய்கை, கீழ்மக்கள் செய்கை, நட்பு, குறிப்பறிதல், முயற்சி, வினைத்திறம், மறைபிறர்க்கறியாமை, தெரிந்து தெளிதல், பொருள் சேர்த்தல், ஆள்தல், நன்றி, ஊழ், அரசியல், அமைச்சு, மன்னரைச் சேர்ந்தொழுகல், பகைத்திறம் தெரிதல், படைவீரர் மாட்சி, இல்வாழ்க்கை, உறவு, அறச்செயல்கள், ஈகை, துறவு என்னும் பொருண்மைகளில் பழமொழிநானூறு கட்டப்பட்டிருக்கிறது.

முன்றுறையரையனார் சமணச் சார்பினராதலின் தொல்வினை பிறப்பறுப்பு, ஊழ், துறவு என்பன அழுத்தம் பெற்றிருப்பதை, பழமொழி நானூற்றில் பார்க்கமுடிகிறது. நடைமுறை வாழ்வில் புழங்கும் பழமொழிகள் சற்றே, மாற்றம் பெற்றும், பழமொழி நானூற்றில் பொதியப் பெற்றுள்ளன. எளிதாய் காரியமற்றாமல், காலம் தாழ்த்துவதற்கு கொக்கின் தலையில் வெண்ணெய் வைத்துப் பிடிப்பதைப்போல் என்னும் பழமொழி மயில் தலையில் வெண்ணெய் வைத்து பிடிப்பதைப் போல என்று 210ஆம் பாடலில், பேசப்படுகிறது.

நாய் கவ்வியதாயினும், உடும்பின் தசையை உயர்வாக எண்ணித் தின்பார் , பார்ப்பார். இதுபோல கீழானவர் வாயிற் பிறந்தாயினும், நல்லுரை இகழப்படாது என்று சொல்லவருகிற இடத்தில், நாய் கவ்விய உடும்பு உள்பட, பல்லாற்றானும் புலாலைப் புசித்துள்ளனர் பார்ப்பனர் என்று அரியதொரு சான்றினையும் தருகிறது பழமொழி நானூறு.

**கட்டவிழ்ப்பு**

கீழ் - மேல் கருத்தியல் பழமொழி நானூறு மூலம் வெளிப்படுத்தியுள்ள பாடுபொருளைக் கட்டுடைத்துப் பார்க்கலாம். அச்சமே கீழ்களது 'ஆச்சாரம்' என்று பாரதி பேசுகிற இடத்தில் 'கீழ்' என்பது கீழ்ஜாதியாரைக் குறிப்பதில்லை. நடத்தையில் கீழானவரைக் குறித்து நிற்கும் சொல்லாடலாக உள்ளது. கீழ்மக்கள் இயல்பு என்று பழமொழிநானூறு பேசுவது அய்யத்திற்கிடமாகவுள்ளது. இனநலம் நன்குடையவாயினும் என்றும் மனநலம் ஆகாவாம் கீழ் என்கிற இடம், இதுபோல அமையப் பெற்ற ஒன்று, எனலாம்.

கீழானவன் கள்ளைக் கண்டு மகிழ்வான்; மறைப்பினும் ஆகாதே தஞ்சாதி மிக்குவிடும்; சுரையாழ அம்மி மிதப்ப (நல்ல குடிமரபில் சேராதவரான கீழானவர் செல்வத்தால் பெருகுதல் என்னும் அது நீரிலே சுரைக்குடுக்கை ஆழ்வதையும் அம்மிக்கல் மிதப்பதையும் ஒக்கும்) குணத்தைக் குலத்தால் அறியலாம் குல ஒழுக்கம் குலவித்தைக் கல்லால் வரப்பெறும், முயற்சியால் பயனில்லை; முன்வினைப் பயன்; மன்னனை இகழ்வார் கெடுவார்; நாணமின்றிப் பெண்கள் இல்லை; வினைப்பயனை அனுபவித்தே தீரவேண்டும்; மகளிரைச் சார எழுதக் கூடாது நச்சுப் பாம்பையும் நம்பலாம்; பெண்களை நம்பக்கூடாது என்பன போன்ற இடங்கள் பிற்போக்குக் கருத்தியல் சமூகத்தில் எவ்வாறு வழக்காறாக இருந்து வந்துள்ளன என பழமொழிநானூறு எடுத்துக்காட்டுகிறது. மனித நடத்தை மாற்றத்துக்கு, மரபு நிலை மட்டுமல்ல; சூழ்நிலையும் பெரும்பங்கு வகிக்கிறது எனும் புளும் - கோல்மன் ஆய்வுகள் பகுத்தறிவுப் பார்வைகள் இங்கு முரண்பட நேர்கிறது.

'நுனிப்புல் மேயாதே' எனும்

*பழமொழியை எடுத்துக் கொள்வோம். சித்த மருத்துவம் மற்றும் பதார்த்த குண சிந்தாமணி போன்ற மக்கள் வழக்காற்றிலும் சரி, அறிவியலடிப்படையிலும் சரி, சில தாவரங்களில் மேல் பகுதியை மட்டுமே பயன்கொள்ள வேண்டும். அவற்றின் வேர்ப்பகுதி கடுமையான விஷத்தன்மை வாய்ந்ததாக இருக்கக்கூடும். காட்டாக, பாம்புகடிக்கான விஷ முறிவாகவும் இறைவழிபாட்டில் முக்கிய இடம் பெறுவதாகவும் உள்ள அருகம்புல் மிகுந்த மருத்துவப் பயன்பாடு கொண்டு விளங்கினாலும், அருகம்புல் சாறு தயாரிக்கும்போது, விஷத்தன்மை காரணமாக அதன் வேர்ப்பகுதியை நீக்கிவிடுவர். எனவே கால்நடைகள் புல்லை அடியோடு மேய்வதில்லை. இந்த அடிப்படையில் பார்த்தால், நுனிப்புல் மேய்வதுதான் சரி என்றும், இந்தப் பழமொழி காரண காரிய அடிப்படையில் இல்லை என்பதோடு, எதிரான பொருளிலும் புழங்கப்பட்டு வருகிறது என்பார் சொல்லாய்வறிஞர் அருளியார். இதே போல, சீரனப் பிரச்சினைகளை அருகம் புல்லைச் சாப்பிட்டு, வாந்தி மூலமாகச் சரிசெய்து கொள்ளும் நுட்பம் கொண்டவை புலி, பூனை, நாய் முதலியன. எனவே, புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது எனும் பழமொழியைக் கட்டவிழ்ப்பர் விலங்கியல் நடத்தை ஆய்வர். பாம்பைச் சண்டையிட்டு முடித்தவுடன், அருகம்புல்லில் தான் புரளும் கீரி என்பர்.*

*எருதின் நோவு காக்கைக்குத் தெரியுமா? என்கிற பழமொழியிலும் இத்தகு இடர்ப்பாடு உள்ளதைப் பார்க்கிறோம். அதாவது மற்றவர் துன்பத்தைப் பற்றிக் கவலைப் படாதவர்களைக் கண்டனம் செய்யும் குரல் இதில் ஒலிக்கிறது. ஆனால், இயற்கையில் எளிய உயிரினங்கள் இடையே, ஒன்றற்கொன்று பரிமாற்றத் தகவமைப்பு அடிப்படையிலேயே, எருதுகளின் காதுகளில் சேரும் அழுக்கை மற்றும் உண்ணிகளை, அனைத்துண்ணிகளாக இருக்கின்ற காகங்கள் கொத்தித் தின்பதன் மூலம் எருதுகளுக்கு உதவுவதாகச் சொல்லப்படுகிறது. இந்த அடிப்படையில் பார்த்தால், இந்தப் பழமொழியும் எதிர்நிலைக் கருத்தாடலாக அமைகிறது எனலாம். போலவே, முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டதைப் போல' எனும் பழமொழியை 'முதுவர் பழங்குடி வழக்காற்றியல் கண்ணோட்டத்தில் கானுயிர் ஆய்வாளர் தியோடர் பாஸ்கரன் 'முதுவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்டதைப்போல' எனக் கட்டவிழ்க்கிறார்.*

- **பறையன் பொங்க வச்சா பகவானுக்கு ஆவாதா?**
- **சக்கிலியக் குடி நாய் சமயத்துக்கு உதவாது**
- **நாயக்குளிப்பாட்டி நடுவூட்லவச்சா வாலக்கொழச்சுகிட்டு பீத்திங்கத்தான போவும்**
- **பன்றியோடு சேர்ந்தால் கன்றும் மலம் தின்னும்**
- **நாய் ஏன் கோயிலுக்குப் போகணும் கோயில் காத்தவன் ஏன் தெண்டம் கட்டணும்**
- **ஆட்டாம்புழுக்கையெல்லாம் நாட்டாமை பண்ணுது; கொட்டு மம்பட்டி கொலவை போடுது**
- **என்னமோ சொன்ன கதையில எலி ரவுக்கை கேட்டுச்சாம் சபையில**
- **எல்லாரும் பல்லாக்கு ஏறினா சொமக்குறது யாரு**
- **ஆனைக்கு நீதி சொல்ல பூனை போவலாமா**
- **களிகிண்டும் துடுப்பே உனக்கு என்ன வெறைப்போ**
- **மானங்கெட்ட சஞ்சனக்கு மாட்டுக்கறிக்கு வுழுந்து நக்கு**
- **சன்னியாசிக்கும் ஜாதிமானம் போகாது**
- **வனத்துல மேஞ்சாலும் இனத்துல சேரணும்**
- **சக்களத்திக்கும் சக்களத்திக்கும் சண்ட என்னாடி ஜாதிகெட்ட மாப்பிள்ளைக்கு கொண்ட என்னாடி என்பன போன்ற பழமொழிகள் வருண இழிவையும்**
- **பணக்கார அவுசாரி பந்தியிலே ஏழ அவுசாரி சந்தியிலே**
- **கல்லு வீட்டுக்காரி போனா கமுக்கம் கூர வீட்டுக்காரி போனா கூச்சம்**
- **ஆப்பைக்கு உருவங்குடுத்தவன் ஆசாரி அள்ளிப் போட்டு குழம்பு ஊத்துனவன் பூசாரி**
- **அரையணா மந்திரி அழச்சதும் எந்திரி முக்காத் துட்டு மந்திரி முக்கிகிட்டே எந்திரி**
- **அஞ்சனக் காரன் முதுகில் வஞ்சனக்காரன் ஏறுவான்**
- **சன்னியாசியக் கடிச்சநாய்க்குப் பின்னால் நரகமாம் சன்னியாசிக்கு முன்னால் மரணமாம்**
- **மடப்பய கோயிலுக்கு தடிப்பய பூசாரி ஆக்கங்கெட்ட கோயிலுக்கு அருள்கெட்ட பூசாரி**
- **அகதிக்கு ஆகாயம் துணை**
- **முற்றுந்துறந்தவனை விட கற்றுச் சிறந்தவனே மேல்**
- **கட்டிலைத் திருப்பிப் போட்டா தலை வலி தீருமா?**

*போன்ற பழமொழிகள் பொருளாதார ஏற்றத்தாழ்வு சார்ந்த இழிவைப் பகடி செய்யும் மூடநம்பிக்கையைக் கண்டித்தும்*

*கழிவிரக்கத்தைப் பதிந்தும் நீதி புகட்டுகின்றன.*

*காலந்தோறும் சமயவாதிகள் சமயத்துக்குத் தகுந்தாற் போல இடையீடு செய்வதையும் பார்க்கமுடியும். 'பள்ளித் தலமனைத்தும் கோயில் செய்குவோம்' எனும் பாரதி பாடலை இந்துத்துவ மனப்பான்மையோடு, பள்ளிவாசலை இடித்துவிட்டு கோயில் கட்டச்சொல்லியிருக்கிறான் மகாகவி பாரதி என்று புரிந்துகொண்டதைப்போல!*

**'சட்டியிலிருந்தாதான ஆப்பைல வரும்'**

*எனும் சாதாரணப் பொருள்நிலையில் ஆளப்படும் பழமொழி மனதில் உணர்வும் மூளையில் அறிவும் உள்ள அளவுக்குத்தான் வெளிப்படுத்தப்படும் என்கிற நேர்ப் பொருள் விடுத்து, சமயவாதம் சார்ந்து அனுமானமான பொருளில் சஷ்டியில் விரதம் இருந்தால்தான்; அகப்பையுள் (கருப்பையுள் ) குழந்தை நன்கு வளரும் என்று வலிந்து பொருள் கொள்ளப்படுவதை மலினமான கைத் தட்டல்களுக்காக பட்டிமண்டப வாய்வாடகையர் பரப்பி வருவதையும் பார்க்கிறோம்.*

*'ஊராம் புள்ளைய ஊட்டி வளத்தாத் தன்புள்ள தானே வளரும்' எனும் பழமொழியையும் இவர்கள் விட்டு வைக்கவில்லை. பிறருக்கு உதவிகள் செய்யும் பொதுத் தொண்டாற்றினால் இந்தச் சமூகம் உனது அடுத்த தலைமுறையையும் கூட ஏந்திக்கொள்ளும் எனும் தமிழ்மரபின் ஈகைத் திறத்தை விரிந்தபொருளில், தன்னகத்தே கொண்ட இப்பழமொழியைக் குறுக்கி. ஊரான் வீட்டிலிருந்து வந்துள்ள உன்மனைவியை கர்ப்பகாலத்தில் நீ நன்கு பேணுவாயாகில் அவள் வயிற்றிலிருக்கும் உன்பிள்ளை நன்கு வளரும் என்று கொண்டு கூட்டக் காணலாம். இவ்வாறு அவரவர் வசதிக்கேற்ப குறுக்கியும் திரித்தும் கொண்டு கூட்டும் பொருள்கோடலை ஆய்வுக்குட்படுத்த வேண்டியிருக்கிறது.*

*'மரத்தாலி கட்டி அடிச்ச மாதிரி' எனும் பழமொழியில் வரிகட்டாத விவசாயி வீட்டுப் பெண்களின் தாலியை அறுத்துவிட்டு மரக்கட்டையை அவர்கள் கழுத்தில் கட்டிவிடும் பழைய அரசாங்க வன்முறையைப் பதிவு செய்யக் கா ணலாம்.*

*'சுவரிருந்தால் தான் சித்திரம் வரைய முடியும்' எனும் பழமொழி உத்தப்புரம் ஜாதியவாதிகளால் எழுப்பப்பட்ட சுவர் இடிக்கப்பட்டபோது, சுவரிருந்தால் சித்திரம் வரைய முடியும் என மறுவாசிப்பு செய்யப்பட்டதை இங்கு ஒப்பு நோக்க, காலந்தோறும் கருத்தமைப்புகளில் நேரும் மாற்றங்களையும் கணக்கில் கொள்ள வேண்டும்.*

*எனவே, பழமொழி நானூறு, காலங்காலமாக வழங்கி வந்த விழுமியங்களின் பிழிவாக, மனிதப் பண்பாட்டைப் பேசுவதோடு ஆளும் வர்க்கச் சார்பையும், அடக்கி ஒடுக்கப்பட்டவர் எதிர்க்கேள்வி கேட்டு, எழுந்து விடாமல் சமரசம் கொள்ளும் போக்கையும், உனக்கு விதிக்கப்பட்ட நியதி என, கெட்டிதட்டிப் போன மரபுகளை ஏற்கச் செய்யும் சிந்தனைத் தக்கவைப்பையும், கட்டவிழ்த்துப் பார்க்கவேண்டியுள்ளது.*

*'வாலறிவன் நற்றாள் தொழார்' என்பதை 'தெய்வம் தொழுதல்' என்ற பொருளில் பார்க்காது, குற்றமற்ற அறிவைத் தொழுதல் (வினையின் நீங்கி விளங்கிய அறிவு)... 'இந்திரனே சாலும் கரி' என்பதை இந்திரக் கடவுள் அல்லாது அய்ந்திரம் நூற்புலமை மிக்கோன் எனப் பார்த்தல்...*

*இப்படிச் சங்கச் செவ்வியல் பெரியாரைத் துணைக்கோடல் மூலம் காட்சித் துலக்கங்கள் நமக்குக் கிட்டுவதோடு, தமிழ்ச் சமூகப் புத்துயிர்ப்புக்கு வழிகோல முடியும்.*

**சங்கச் செவ்வியல் பதிப்பும் மறுவாசிப்பும்**

*ஆறுமுகநாவலர் பதிப்பித்த நூல்கள் - உரையுடன் பதிப்பித்தவை கோயிற் புராண உரை, திருவள்ளுவர் - பரிமேலழகர், நன்னூல் விருத்தியுரை, திருச்செந்தில் நீரோட்ட யமக அந்தாதி உரை, பிரயோக விவேக உரை, திருச்சிற்றம்பலக் கோவையார் உரை, தொல். (சொல்). மருதூர் அந்தாதி உரை, சூடாமணி நிகண்டுரை, நன்னூல் காண்டிகையுரை, உபநிடத உரை ஆகிய நூல்களைப் பதிப்பித்தார் என்பதோடு, 1851இல் ஆறுமுக நாவலர் எழுதிய பெரிய புராண வசனம் தமிழ் மொழியில் முதன்*

முதலாக வெளிவந்த உரைநடை நூல்களில் முதன்மையான பெரிய நூலாகும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சிவாலய தரிசனவிதி, குளத்தூர் அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ், கந்தரலங்காரம், ஏரெழுபது, திருக்கை வழக்கம், புட்பவிதி, மறைபசையந்தாதி, திருக்கருவைப் பதிற்றுப் பத்தந்தாதி, பட்டணத்துப் பிள்ளையார் பாடல், அருணகிரிநாதர்வகுப்பு, திருச் செந்தூர் அகவல், விநாயக கவசம், சீவக கவசம், சக்திகவசம், சேது புராணம், தருக்க சங்கிரகம், இலக்கணக்கொத்து, கந்தபுராணம், பதினோராந்திருமுறை, நாவலர் நான்மணி மாலை, இரத்தினச் சுருக்கம், சிதம்பர மான்மியம், வாதப்பிரதிவாத எழுத்துகள்: சைவதூஷண பரிகாரம்,யாழ்ப்பாணச் சமயநிலை (தகவல் வெ.கனகரத்தின உபாத்தியாயரின் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சரித்திரம்)

இவ்வாறாக கனதியான பதிப்பாசிரியராகவும் தமிழறிஞராகவும், புகழ்பெற்ற நாவலர், தாம் எழுதிய நூல்களைத் தாமே அச்சுக்கூடம் நிறுவி வெளியிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. 1851இல் யாழ்ப்பாணத்தில் உள்ள வண்ணை நகரத்தில் வித்தியாநுபாலன எந்திரசாலை என்ற பெயரில் அந்த அச்சுக் கூடம் தொடங்கப்பட்டது. 1870ஆம் ஆண்டினை அடுத்த பகுதியில் அதே பெயரில் சென்னையிலும் ஓர் அச்சுக்கூடம் தொடங்கப்பட்டது என்று தெரியவருகிறது.

ஆனால் சைவம், சங்கச் செவ்வியல் மரபை அதன் சமயச் சார்பற்ற பின்புலத்தை ஒவ்வாமையோடு பார்த்தது, தமிழ்ச் சமணம், பவுத்தம், ஆசீவகம் போன்றவை இலக்கியம், இலக்கணம், அகராதி, நிகண்டு, மருத்துவம், பழமொழித் திரட்டு, காப்பியப் பங்களிப்பு என, தமிழ்ச் செவ்வியலுக்கு ஆற்றிய அருங்கொடையின் வீச்சை முந்திக் கொண்டு காலச் சக்கரத்தைப் பின்னோக்கி நீட்டி, செவ்வியல் காலத்திலிருந்தே சைவம் தழைத்திருந்தது எனும் ஒரு மாயை முயற்சிக்காக பல உள்ளடி வேலைகளைச் செய்ததாகத் தெரிகிறது. சங்கச் செவ்வியல் சுவடிகளிலிருந்தும் பதிப்பிக்க வாளாவிருந்தது, விதிவிலக்காக திருக்குறளை, அதுவும் காலம் கடந்து பரிமேலழகர் உரையைத்தான் ஆறுமுக நாவலர் பதிப்பித்தார். (முன்னமே அயோத்திதாசரின் தாத்தா எல்லப்பன் கொடுத்த சுவடியை எல்லீசர் பதிப்பித்ததும் தஞ்சையிலிருந்து ஞானப்பிரகாசர் பதிப்பித்ததும் நிகழ்ந்தேறிய பிறகு) சைவம். ஆரியமாயை குறித்து மட்டுமல்ல சைவமாயை குறித்தும் மிகக்காத்திரமாக ஆய்வுகள் மேற்கிளம்ப வேண்டியிருக்கிறது,

"சமயம் என்ற பழம்சரக்கு புதிய ஊடகத்தில் புற்றீசலென உருவான வரலாற்றைப் பார்க்கிறோம். பெரிய புராணம், திருமுருகாற்றுப்படை முதலான சைவ சமய நூல்களுக்கு உரை எழுதுதல் மற்றும் பதிப்பித்தல் ஆகியவற்றைச் செய்த நாவலர், சங்க நூல்கள் மீது கவனம் செலுத்தாமல் போனது, நாம் கவனத்தில் கொள்ள வேண்டிய செய்தியாகும். இதனை நாவலர் செய்த வரலாற்றுப்பிழை என்றே மதிப்பிடலாம். 1850களில் தம்மிடம் இருந்த சங்க இலக்கியச் சுவடிகளைத் தமிழ் சைவப் பாரம்பரியத்தில் உருவாகி வந்த நாவலர் பதிப்பித்து வெளிக்கொண்டு வந்திருப்பாரேயோனால், பின்னர் 'தமிழ்த் தாத்தா' உருவாக வேண்டிய அவசியம் நேர்ந்திருக்காது. தமிழ்த் தாத்தாவிற்கு வாய்ப்பளித்து, ஆறுமுக நாவலர் கண்ணை மறைத்தது மதம். மதம் எல்லாக் காலங்களிலும் மதம் பிடித்தே செயல்படுவது 'வரலாற்றின் முடிவு' எனத் திறனாய்கிறார் வீ.அரசு.

இந்த ஆறுமுகநாவலர்தான் சமணச்செட்டிச்சி கண்ணகிக்கு ஏன் சிலை என்று கேட்டவர் என்பதும், இவருடைய சைவ வாரிசு கதிரைவேற்பிள்ளைதான், "இவ்வளவு புராணப் புளுகுகள் படைப்புகளுக்குள் வந்தது பற்றியெல்லாம் உங்களைப்போன்ற அறிஞர்கள் சிந்திக்க மாட்டீர்களா?" என்றவாறு கேட்டதற்காக "உம்மைச் சந்திக்க வந்தமையே தவறு" அதுவும் நீர் கொடுத்த பாலை வாங்கிக் குடித்தது அதைவிடத் தவறு என்று சொல்லி, பெரியார் கொடுத்து உபசரித்த பாலை விரல்விட்டு வாந்தியாக எடுத்தவர் என்பதும், இந்த மரபிலேதான் கைலாசபதி, சமக்கிருதத்திற்கும் தமிழுக்கும் இருந்த

அக்காள் தங்கை உறவைப் பாதிரிமார்கள் கெடுத்தார்கள் என்று புலம்பியதும், இந்த வரிசையில்தான் திராவிட இயக்கம் கதாகாலட்சேப வடிவில் தமிழ்மரபில் புகுந்து தமிழ்ச் சிந்தனை மரபைப் பிற்போக்காக்கிய இராமாயணத்தை எதிர்த்து இயங்க, ப.ஜீவானந்தம் இராமாயணத்தைப் பரப்ப முனைந்து மாபெரும் வரலாற்றுப் பிழைசெய்தார் என்பதையும் பார்க்கவேண்டியுள்ளது.

கண்ணைத்திறந்திருக்கும்போது மண்ணள்ளிக் கொட்டுவதைப் போல 4489 ஆண்டுகள், 489 புலவர்கள், இறைவனே இருந்து லாடு சிவா அண்டு சன் ஆப் லாடு சிவா ஆகியோர் சங்கமேறி தமிழ் வளர்த்தார்கள் எனும் பொய்யும் புனைவும் கொண்ட இறையனார் களவியலை செம்மொழிப் பட்டியலில் சோணகிரிகள் சேர்த்தது... வளையாபதியும் குண்டலகேசியும் சரிவரக் கிடைக்காததால் பெரியபுராணத்தையும் கம்பராமாயணத்தையும் அய்ம்பெரும் காப்பியப் பட்டியலில் சேர்க்க அஞ்ஞானங்கள் தினமணியில் எழுதியது .....(10 சதவிகித இட ஒதுக்கீடு போல சைவ வைணவ இடஒதுக்கீடு) ஊசிமுறி பூர்ணம்பிள்ளை சங்கநூல் மாதிரியே போலிமையாய் எழுதிய இன்னிலை கைந்நிலை திரிபாக்கம் போலவே எழுதிச் சேர்த்த வரலாறுள்ள தமிழ் மண்ணில் திருமுருகாற்றுப்படை, பரிபாடல் சங்க நூல்களுக்குப் பிற்பட்டவையாக இருக்கலாம் என வையாபுரிப்பிள்ளை சொல்ல அதுபற்றி, தர்க்க நியாய விவாதமின்றி, வக்கீல்கள் இப்படித்தான் பொய் சொல்வார்கள் என, தண்டமிழாசான்கள் கடந்து போனது ... மாற்றுச் சிந்தனையை அழித்தொழித்த அனல்வாதம் புனல்வாதம் பற்றிப் பெரிதும் தர்க்க நியாய உரையாடலைத் தமிழ்ச்சமூகம் நிகழ்த்த வேண்டியதன் அவசியம்... ஆசாரக்கோவை தமிழ் மரபின் அபசாரக் கோவை என பெரியாரியல் வெளிச்சத்தில் நான் எழுதிய கட்டுரை.... எனப்பல தளங்களில் ஆழமும் விரிவும் தேடிப் பயணமாக வேண்டியிருக்கிறது.

இந்நிலையைத்தான் காலஞ்சென்ற அறிஞர்களும் காலஞ்செல்லாத பல தமிழறிஞர்களும் எனும் பெரியாரின் தொடர் சுட்டுகிறது. (இன்னமும் ஆக்கப் பூர்வமாகக் காலத்திற்கும் பயனளிக்க வேண்டுமெனவே இத்தகு சொல்லாடல்களைப் பெரியார் பயன்படுத்தினார். காலஞ்செல்லாத எனும் தொடரைப் பெரியார்தான் முதன்மையாக உருவாக்கிப் பயன்படுத்தியிருக்கிறார் என்று தோன்றுகிறது.)

**நிறைவுரை:**

தனிநாயக அடிகளின் தமிழ் பக்திமொழி எனும் வரையறை மீதான எதிரீடு இங்கு அழுத்தமாகப் பதிய வேண்டியிருக்கிறது, சமயச்சார்பற்ற வளமான புலமை மரபு நம்மிடம் இருக்க, பக்தி என்பது நீள்நெடும் தமிழிலக்கியப் பரப்பில் ஒரு சிறுபகுதி. அவ்வளவே! அதுவும் செவ்வியல் காலத்திற்குப் பிந்தைய ஒரு பகுதி. அவ்வளவே! ஆனால், இதில் முரணிக்கொண்டு பிரெஞ்சு மொழி – காதலின் மொழி, இத்தாலி மொழி – வணிகத்தின் மொழி, தமிழ் – பக்தியின் மொழி என, தனிநாயகர் வரையறை செய்தது பொருத்தமற்றதும் முழுமையற்றதும் தர்க்கமற்றதும் ஆகும் என அறுதியிடலாம். இப்படி, விரிந்து பரந்து ஆய்வுக் களம் கண்முன்னே விரிந்து கிடக்கிறது. பெரியாரைத் துணைக் கோடல் எனும் வெளிச்சத்திலிருந்து, மேலாய்வுகளும் மீளாய்வுகளும் மென்மேலும் துலங்கப்படல் வேண்டும்.

**மாட்டேற்றுக் குறிப்பு நூல்கள் :**


1. செவ்வியல் தமிழ், ம.வே.பசுபதி (பதி), தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 2010
2. இந்திய இலக்கியக் கோட்பாடுகள், சூழல்பொருத்தம், கெ.அய்யப்ப பணிக்கர், (மொ.பெ) மனோகரன், மாற்று வெளியீடு,சென்னை, 2015
3. கல்லாடம், பாட நூல், தமிழ்ப்பல்கலைக்கழக வெளியீடு, 2016
4. சிலப்பதிகாரம் மறுக்கப்பட்ட நீதியும் மறைக்கப் பட்ட உண்மைகளும், வெ. பெருமாள் சாமி, பாரதி புத்தகாலயம், 2017

5. பெரியாரின் இலக்கியச் சிந்தனைகள் - இரா.மணியன், புரட்சிப்பாதைப் பதிப்பகம், 10, சவகர்லால் நேரு சாலை,கோயம்பேடு, சென்னை , 2007.

6. நிழல் காண்மண்டிலம் -சங்கச்செவ்வியல் வாசிப்பும் மறுவாசிப்பும், தெ,வெற்றிச்செல்வன், முக்கூடல் வெளியீடு,2015

7. சொலவடைகளும் சொன்னவர்களும், ச.மாடசாமி, எதிர் வெளியீடு, சென்னை, 2018

8. நவீன கோட்பாட்டு ஆய்வுகள், பொ.ந. கமலா, கால்யா, பெங்களூர் , 1999

9. பழந்தமிழில் புதிய பார்வை, அ.ப.பாலையன், சீதை பதிப்பகம்,சென்னை,2007

10. தமிழர் உண்மை வரலாறு,கேப்டன் கலியபெருமாள், பாலம் வெளியீடு,சென்னை 2010

11. தலித் பார்வையில் தமிழ்ப் பண்பாடு, ராஜ்கௌதமன், அடையாளம் பதிப்பகம், 2018.

12. இருண்ட காலங்களும் பொற் காலங்களும், பொ.வேல்சாமி, காலச்சுவடு, 2009.

13. தொல்காப்பியம் காட்டும் வாழ்வியல் , ந.சுப்புரெட்டியார், 1995.

14. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சரித்திரம், வெ.கனகரத்தின உபாத்தியாயர், இலங்கை, 1882.

15. தமிழகத்தில் அடிமைமுறை , ஆ.சிவசுப்பிரமணியன், காலச்சுவடு வெளியீடு, 2017.

16. பழமொழிகளும் விளக்கங்களும், மஞ்சை வசந்தன், சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடு, சென்னை, 2018.

17. பழமொழிகளும் விளக்கங்களும், புஷ்பவனம் குப்புசாமி,சென்னை, 2015.

18. ஈ.வெ.ராமசாமி என்கிற நான், பசு கவுதமன், பாரதி புத்தகாலயம்,சென்னை, 2018.

19. தமிழர் இயங்கியல், க. நெடுஞ்செழியன், மனிதம் வெளியீடு, திருச்சிராப்பள்ளி, 2000.

**ஆசிரியர் குறிப்பு:**

பேரா.தென்னவன் வெற்றிச்செல்வன் கவிதை, சிறுகதை, கட்டுரை, என 25 நூல்களின் நூலாசிரியர்; இரு குறும்பட, ஆவணப்பட இயக்குநர்; கற்கை மற்றும் ஆய்வு நெறியாளர்; பாடத்திட்ட வல்லுநர்; பொழிவாளர் எனப் பன்முகத் தளத்தில் கால் நூற்றாண்டாகப் பணியாற்றி வருபவர்.

அமெரிக்கா, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, கனடா, டென்மார்க், நார்வே, நெதர்லாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, ஸ்வீடன் போன்ற நாடுகளின் புகலிடத் தமிழ்க் கவிதைகள் குறித்து, தமிழில் 2004-இல், தமிழ்ப் பல்கலைக் கழக அயலகத் தமிழியல் துறையில் முதன்மையான ஆய்வை நிகழ்த்தி, அத்துறையில் பேராசிரியராகப் பணியாற்றி வருபவர்.

இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், மொரீசியஸ், பர்மா போன்ற நாடுகளில் களப்பயணம் மேற்கொண்டும், கருத்தரங்குகள் / ஆய்வரங்குகளில் ஆய்வுரை யாற்றியும், அயலகத் தமிழாசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் ஆழ்நிலைத் தமிழ்ப் பயிற்றியும் பன்னாட்டளவிலான தமிழ் வளர்ச்சிப் பணிகளை மேற்கொண்டு வருபவர். சிறந்த நூலாசிரியர் விருது, சிறந்த ஆவணப்பட இயக்குநர் விருது, ஆசிரியச் செம்மல் விருது போன்ற விருதுகள் இவரது பணிகளுக்கு ஏற்பிசைவு அளித்துள்ளன.

●

Social Endosmosis is Social Justice.

"An ideal society should be mobile, should be full of channels for conveying a change taking place in one part to other parts.

In an ideal society there should be many interests consciously communicated and shared. There should be varied and free points of contact with other modes of association. In other words, there should be social endosmosis.

This is fraternity, which is only another name for democracy.

Democracy is not merely a form of Government. It is primarily a mode of associated living, of conjoint communicated experience. It is essentially an attitude of respect and reverence towards fellowmen".

---

*(Annihilation of Caste)*

*Prof. Dr.* **B.R. AMBEDKAR ,** *M.A., M.Sc., Ph.D., D.Sc.*

Hon'ble Minister (1st Minister) of Law and Justice, Union Of India (1947-51).
Minister of Labour in Viceroy's Executive Council (1942-46).
Chairman of the Constitution Drafting Committee -
Constituent Assembly of India (1946-50).
Member of Parliament - Rajya Sabha for Bombay State (1952-56).

# குறளும் மனுவும் – ஒப்பீடு



திரு. **நா.முத்துநிலவன்**
**கல்வி, சமூகவியல்**
**தமிழ் இலக்கிய ஆய்வாளர்**

**கட்டுரைச் சுருக்கம்:**

*"மனு ஸ்மிருதியில் பெண்களைப் பற்றிச் சொல்வதையே தான் திருவள்ளுவரும் சொல்லியிருக்கிறார்; எனவே மனுதர்ம சாஸ்திரம் தடை செய்யப்பட வேண்டுமானால், அதே காரணத்திற்காகத் திருக்குறளும் தடை செய்யப்பட வேண்டியதே" என்றெல்லாம் அண்மையில் எழுப்பப்படும் வைதிகக் கூக்குரல்கள் உண்மையா? என்று ஆய்கிறது இக்கட்டுரை.*

*மனுநூல், மக்கள் விரோத நூல். பெண்களை, உழைக்கும் மக்களை இழிவுபடுத்தும் நூல். திருக்குறளோ மக்கள் சமூக விழுமியம் கொண்ட நூல். பெண்களை, உழைக்கும் மக்களை வாழ்த்திடும் நூல். வடிவிலோ, கருத்திலோ, நீதியிலோ, இரண்டு நூல்களும் ஒன்று ஆகவே ஆகாது என்று நிறுவுவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.*

**முகவுரை:**

*மனுநூல் ஒரு மக்கள் விரோத நூல். பெண்களை, உழைக்கும் மக்களை இழிவுபடுத்தி, பார்ப்பனர்கள் உழைக்காமலே அதிகாரம் செய்து பிழைத்துக் கொழுப்பதற்கான சூழ்ச்சிகளைக் கொண்ட ஒரு நூல். ஒவ்வொரு சூத்திரமும் (சுலோகம்) உழைக்கும் மக்களை அடிமைப் படுத்துவதற்கான வஞ்சக "சூத்திர" நூல்! இதை ஏற்கெனவே பலகாலமாகத் தந்தை பெரியாரும், திராவிடர் கழகமும், இடதுசாரி, தலித்திய முற்போக்கு இயக்கத் தோழர்களும் சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள்.*

*ஆனால், அண்மையில், "அய்ரோப்பிய ஒன்றியப் பெரியார் அம்பேத்கரியத் தோழர்கள் கூட்டமைப்பு" நடத்திய கருத்தரங்கம் ஒன்றில், "இந்திய அரசியலில் பெரியார்" எனும் தலைப்பில் பேசிய வி.சி.க.தலைவர் தொல். திருமாவளவன் அவர்கள், மனுநூல் பெண்களை இழிவு செய்திருப்பதைச் சொல்லி, அதை எதிர்த்துப் பெரியார் நடத்திய போராட்டங்களைப் பற்றியும் பேசினார். இந்த நிகழ்ச்சி பெரியார் வலைக்காட்சியில் அக்.16, 2020 அன்று வந்தது. இன்றும் இருக்கிறது. "மனு (அ) தர்ம நூலைத் தடைசெய்" என்ற திருமா, அதற்கான இயக்கத்தையும் முன்னெடுத்தார்1 இதற்காகத் தோழர் திருமாவளவன் மீது வழக்குப் போட்டார்கள், அந்த வழக்குத் தள்ளுபடி ஆகிவிட்டது. ஆனால், அதன் தொடர்ச்சியாகத் தமிழ் ஊடகங்களில்*

*நடந்த விவாதங்கள் எளிதில் மறந்துவிடக் கூடியவை அல்ல.*

*"மனுஸ்மிருதியில் பெண்கள்" என, கோதை ஜோதிலட்சுமி என்பவர் எழுதிய கட்டுரையை, திருமா இயக்கம் நடத்திய பதினைந்தாம் நாளில், 'தினமணி'[2] வெளியிட்டு, "மனுதர்ம நூல், பெண்களை இழிவு செய்யவில்லை, மாறாகப் பெருமைப்படுத்தியே இருக்கிறது" என்று வலிந்து சொல்லிப் பார்த்தது. இதற்குத் தந்தை பெரியார் எழுபது ஆண்டுகளுக்கு முன்பே பதில் தந்து விட்டதைத் தமிழ்நாடு அறியும், காத்திருந்தோம். ஆனால், "இவ்வளவு சொல்லியும் நம்மைக் கண்டுகொள்ளாமல் இருக்கிறார்களே" என்று நினைத்தோ என்னவோ, "தமிழர் போற்றும் திருக்குறளைச் சீண்டிப் பார்த்தால், ஒருவேளை தமிழர்கள் கவனிப்பார்களோ?" எனும் நினைப்பில், மீண்டும் "மநுவுக்கு ஏன்இந்த எதிர்மனு" எனும் தலைப்பில், ஆர்.நடராஜன் என்பவர் எழுதிய கட்டுரையை அடுத்த15ஆம் நாள் வெளியிட்டது 'தினமணி'.[3] இந்தக் கட்டுரைகள் வெளியான தேதிகளைக் கவனித்தால் அவர்களின் அவசரமும் ஆத்திரமும் புரியும்! இதையும் யாரும் கவனிக்காமல் இருந்துவிடக் கூடாதே என்னும் கவலையோடு, சிலவரிகளைப் பெரிது படுத்தி, 'தினமணி' நடுப்பக்கக் கட்டுரையின் நடுவில் வெளியிட்டதை மட்டும் அதன் முக்கியத்துவம் கருதி, கவனம் குவிக்க வேண்டி, இங்கு அப்படியே எந்த மாற்றமும் இன்றி தரப்படுகிறது.*

**"மநு பெண்களைப் பற்றிச் சொல்வதையேதான் திருவள்ளுவரும் சொல்லியிருக்கிறார், மநுதர்ம சாஸ்திரம் தடை செய்யப்பட வேண்டுமானால், அதே காரணத்திற்காகத் திருக்குறளும் தடைசெய்யப்பட வேண்டியதே"**

*இது சரி தானா ?*

*குறளும் மனுவும் சொல்லும் கருத்துகள் எல்லாம் ஒன்றுதானா?*

*இவ்விரண்டு நூல்களையும் ஒப்பிட்டுப் பார்க்கலாம் -*

## பெண்ணைப் போற்றும் குறளும், இழிவுபடுத்தும் மனுவும் :

*கற்பை வலியுறுத்தும் அந்தக்கால நடைமுறையிலும் கூட, "பெண்ணின் பெருந்தக்க யாவுள?"[4] என்று, பெண் இனத்தைப் பெருமைப்படுத்திய குறள் எங்கே? நூலின் அனைத்துப் பகுதிகளிலும் பெண்இனத்தை இழிவுபடுத்தி, "எல்லா ஜாதிக்குள்ளும் இழிந்த ஜாதியாக" பெண்களைப் பேசும் மனுஎங்கே? 'உயர்ந்தஜாதி' என்று அவர்களே உயர்த்திச் சொல்லிக் கொள்ளும் பார்ப்பனக் குலத்திலேயே பிறந்திருந்தாலும், அவள் பெண்ணாகப் பிறந்து விட்டால் இழிந்த பிறவிதான் என்கிறது மனு.[5]*

*மனுவைப் பொறுத்தவரை, அனைத்து ஜாதிப் பெண்களும் சூத்திரர் தானே?! எனவேதான் "பெண்களையும் சூத்திரரையும் கொல்லுவது மிகவும் குறைந்த பாவமாகும்"[6] என்றும், "பெரும்பாலும் மாதர் கற்பிலார் என்றே பெரிதும் பல நூல்களிலும் குறிப்பிடுவனவற்றையும் கேட்பீராக"[7] என்றும், இதுபோலப் பற்பல இடங்களிலும் பெண்களை இழிவுபடுத்தியே மனுவில் சொல்லப் பட்டிருப்பது உண்மைதானே? பெண்களை ஒழுக்கக் கேடானவராக, மயக்கும் குணம் கொண்டவர்களாகவே மனுதர்மம் சித்தரிக்கிறது பாலியல் ரீதியில் ஒழுக்கக் கேடுகள் ஏதும் நடந்தால், அதில் ஆணுக்குப் பொறுப்பு எதுவும் இல்லை என்பது போல மனுநூல் பெண்களை இழிவுபடுத்துகிறது.*

*"தமது அலங்காரத்தால் மனிதரைக் கவரும் பெண்களின் இயல்பறிந்தோர் பெண்களிடம் கவனக் குறைவாக நடந்து கொள்ளமாட்டார்கள்."[8]*

*"கணவன் சூதாடுகிறவனாயினும் குடிகாரனாக இருந்தாலும் பிணியாளனாயினும் மனைவி அவனுக்குச் செருக்குற்றுப் பணிபுரியாமல் இருந்தால் அவளுக்கு அழகு செய்தல், ஆடை, படுக்கை*

இவற்றை மறுத்து மூன்று மாதம் விலக்கி வைக்கவும் சொல்கிறது மனுநூல்."[9]

"இழிநடத்தை, பரத்தையர் நட்பு, நற்குணமின்மை இவற்றையுடையவனாயினும் கற்பினளான பெண் தன் கணவனைத் தெய்வமாகப் பேணுக."[10]

"மறுமையின்பத்தில் நாட்டமுள்ள பெண்மணி தன் கணவன் இருப்பினும் இறப்பினும் அவன் கருத்துக்கு மாறுபாடாக நடக்கக் கூடாது."[11]

இவ்வாறு மனு பெண்களை இழிவுபடுத்தும் போது, இதற்கு மாறாகக் குறள், பெண்கள் பற்றி என்னென்ன சொல்லியிருக்கிறது என்றும் பார்க்க வேண்டும்.

இல்லறவியல் என்றொரு தனி இயல் (நூலின் சிறு பிரிவு) வகுத்து, அதற்கென்றே இருபது அதிகாரங்களில் இருநூறு குறட்பாக்களை எழுதி, வாழ்க்கைத் துணையின் பெருமை சொல்லி, மக்கட்பேறு தரும் மகிழ்வைச் சொல்லி, அன்புடைமையோடு, விருந்தோம்பி, இனியவை கூறி, செய்ந்நன்றியறிந்து, நடுவுநிலை தவறாது, அடக்கம் மற்றும் ஒழுக்கத்துடன், பிறனில் விழையாது, பொறுமையுடன், பொறாமை தவிர்த்து, பேராசைப்படாது, புறங்கூறாது, பயனில சொல்லாது[12] தீவினை அஞ்சி, ஒப்புரவறிந்து ஈகையுடன், புகழ்பெற வாழச் சொல்லித் தருகிறது குறள்.

இல்லறத்திற்கே 200குறட்பாக்கள் எழுதிப் பெண்ணின் பெருமை சொன்ன திருக்குறள் எங்கே?

பெண்ணை இழிபிறவியாகவே சொல்லி வைத்த மனு எங்கே?

இதனால்தான், கவிஞர் கந்தர்வன்,

**"இந்த தேசத்துப் பன்றி கூட**
**கோடீஸ்வரன் மகளை விடவும்**
**மதிப்பு மிக்கது " - என்றும்,**
**"நாளும் கிழமையும் நலிந்தோர்க் கில்லை,**
**ஞாயிற்றுக் கிழமையும் பெண்களுக் கில்லை"**

என்றும் இன்றைய பெண்களின் பரிதாப நிலையைச் சொல்லி, அதற்கான தீர்வுநோக்கிச் சிந்திக்க வைக்கிறார்.[13]

ஒரு நாட்டு முன்னேற்றம், அந்நாட்டுப் பெண்களின் முன்னேற்ற அளவில்தான் அமையும் என்பார்கள். ஆனால், மனுநூலின் ஒவ்வொரு சுலோகத்திலும் பெண்ணடிமைத்தனம் வழிந்து ஆறாய்ப் பெருகுகிறதே! ஓரிடத்திலாவது பெண்ணும் ஓர் உயிர்தான், அவள் மனிதப் பிறவிதான், ஆணுக்குச் சமமான உரிமையுள்ளவள்தான் என்று எங்காவது சொல்லப்பட்டிருக்கிறதா? இல்லையே! மாறாக, எல்லா இடங்களிலும் பெண்கள் ஆண்களைத்தான் சார்ந்திருக்க வேண்டும், எந்த வயதிலும் அவளுக்குச் சுதந்திரம் கிடையாது. ஆண்களால் காப்பாற்றப் படுவதற்காக, பெண் சுயஅறிவின்றியே படைக்கப்பட்டாள் என்று எத்தனை வகையான சுலோகங்கள்?

"பாலியத்தில் தகப்பன் ஆஞ்ஞையிலும், யவ்வனத்தில் கணவன் ஆஞ்ஞையிலும், கணவனிறந்த பின்பு பிள்ளைகளின் ஆஞ்ஞையிலும் இருக்க வேண்டியதே யல்லாது, ஸ்த்ரீகள் தன் ஸ்வாதீனமாக ஒருபோதும் இருக்கக் கூடாது ("அத்.9, சுலோகம்148) எனும் இந்த வரிகள் அப்படியே ஓர் எழுத்தும் மாறாமல், "மநுதரும ஸாஸ்திரம்" எனும் நூலின் உரையில் உள்ளவை. "திருவந்திபுரம் கோமாண்டூர் இளையவில்லி, இராமாநுஜாச்சாரி" என்பவர் எழுதிய உரையோடு, 1865ஆம் வருடம் டிசம்பர் 19ஆம் தேதி வெளியிடப்பட்ட நூலில் உள்ளது. (இதன் பிடிஎஃப் கோப்பு வடிவம் இன்றும் இப்போதும் கணினி இணையத்தில் கிடைக்கிறது 'ஒரிஜினல்' மனு தர்ம சாஸ்திரத்தைப் பார்த்துக்கொள்ளவும்.)

அந்த ஒரிஜினல் சுலோகம் இதோ,

**"பிதா ரக்ஷதி கௌமாரே,**
**பர்த்தா ரக்ஷதி யௌவனே**
**புத்ரோ ரக்ஷதி வார்தக்யே**
**நஸ்த்ரீ ஸ்வாதந்தர்ய மர்கதி"**[14]

இந்தக் கருத்தை, அறிவொளி

இயக்கத்திற்காக 1990-1991இல், இக்கட்டுரை ஆசிரியர் -நா.முத்துநிலவன் மொழி பெயர்த்து, தமிழ்நாட்டின் பெரும்பாலான மாவட்டங்களில் நாடகப் பாடலாகப் பாடப்பட்ட மொழிபெயர்ப்பு வரிகள் இதோ,

**"தந்தைக் கடிமை சிறுவயதில்,**
**கணவற் கடிமை இளவயதில்,**
**மகனுக் கடிமை முதுமையிலே**
**எந்நாளும்பெண் அடிமைதான்"**

("உண்மை" இதழிலும் அப்போது வந்தது)

இவ்வாறாக, பெண்களைப் பற்றிய மனுவின் பார்வை, "ஆண்களுக்கான போகப் பொருளாக" பெண்களைப் படைத்திருப்பதாகவே உள்ளது.

இது ஒருபுறமிருக்க,

மனுவின் "பங்காளி"யான பகவத்கீதை இதுபற்றி என்ன சொல்கிறது என்று பார்த்தால் பெண்களும் சூத்திரர், வைசியர் ஆகியோருடன், "பாவயோனியில்" இருந்து பிறந்ததாகச் சொல்கிறது![15] தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள பகவத் கீதை நூல்களில் இதை "இழிந்த பிறப்பு" என்று சொல்லிவிட்டார்கள். ஆனால் ஆங்கிலத்தில் நேரடியாக "born out of the womb of sin"[16] என்று போட்டு உடைத்து விட்டார்கள் 'ரெண்டும் ரெண்டாப்பை! ரெண்டும் கழண்டாப்பை' என்னும் கிராமத்துப் பழமொழி இதனால் தான் எழுந்ததோ?

எனில்,

பெண்ணைப் பெருமைப்படுத்தி இல்லறம் பாடும் குறளும் ,

இழிவு படுத்தி வசை பாடும் மனுவும் எப்படிச் சமமாகும்?

பிறப்பால், மனிதர் அனைவரும் சமம் இல்லையா?

பொதுவாகவே எல்லா மனிதர்க்குமான அறம்கூறும் நூல் என்பதால் "உலகப் பொது மறை" என்று குறளைப் போற்றுகிறது குவலயம்! மறை என்றாலே ரகசியமாகச் சொல்லும் வேதம் என்றுதானே பொருள்? அதனால், எல்லார்க்கும் பொதுவான அறநூல் எனும் பொருளில்,"உலகப் பொதுமறை" என்பதே சரி.

'சூத்திரர்' என்றால் பிராமணர்களின் வைப்பாட்டி மக்கள்'[17] என்று பொருள். ஆம். அப்படித்தான் மனுசாஸ்திரம் கூறுகிறது. இதிலிருந்தே மனுநூல் ஒரு மக்கள் விரோத நூல் என்பதைத் தெளிவாகப் புரிந்துகொள்ளலாம்.

அன்றைய ஜாதியச் சமுதாயத்திலேயே, "ஆறறிவு படைத்த மனிதர்கள் மட்டுமல்ல, உலக உயிர்கள் அனைத்துமே சமம், ஏனெனில் ஓரறிவுத் தாவரம் முதல், அய்ந்தறிவு விலங்குகள்வரை ஒவ்வொன்றும் மதிப்பிற்குரியவையே" எனும் ஆழ்ந்த பொருளில், "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்"[18] என்பது உலகப் புகழ்பெற்ற குறள்வரி. இதற்கு நேர் எதிராக, "நான்கு வர்ணங்களை பிரம்மனே படைத்ததாகச் சொல்லும் மனு, "தனது முகத்திலிருந்து பிராமணரையும், தோளிலிருந்து சத்திரிய ரையும், தொடையிலிருந்து வைசியரையும், காலிலிருந்து சூத்திரரையும் பிரம்மா படைத்தான்"[19] என்று கதைகட்டியது.

இதை விழுங்கிச் செரித்து, அப்படியே பகவான் கிருஷ்ணன், "நான்கு வர்ணங்களையும் நானே படைத்தேன்" என்கிறான்.[20] கீதை, ஒரு புனித நூலாக இந்திய வழக்கு மன்றங்களில், அங்கீகரிக்கப்பட்டுள்ள செய்தியும், மனுதர்ம(?)நூல் இதுவரை முப்பத்தெட்டு தீர்ப்புகளில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது எனும் தகவலும் இன்றைய சமூகத்தின் அவலநிலைக்கு உச்சபட்ச சாட்சிகள்!

இந்தப் புரட்டுக் கதையைத் தானே புரட்சிக்கவிஞர் புரட்டிப் புரட்டி எடுத்தார்?

"முகத்தில் பிறப்பதும் உண்டோ முட்டாளே?

**தோளிற் பிறப்பதுவும் உண்டோ தொழும்பனே?**
**இடையிற் பிறப்பார் உண்டோ எருமையே?**

**காலில் பிறப்பார் உண்டோ கழுதையே?**
**நான்முகன் என்பான் உளனோ நாயே?**
**புளுகடா புகன்றவை எலாம்போக் கிலியே**"[21]

இதே போல ஜாதிக்கொரு நீதி சொல்லும் சனாதனப் போக்கைக் கண்டித்து,

"**சூத்திரனுக்கொரு நீதி – தண்டச்**
**சோறுண்ணும் பார்ப்புக்கு வேறொரு நீதி**
**சாத்திரம் சொல்லிடு மாயின் – அது**
**சாத்திரம் அன்று சதியென்று கண்டோம்**"[22]

எனும் பாரதியின் குரலும் நினைவுக்கு வருவது போல, "அறமாவது, மனு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும், விலக்கியன ஒழிதலும் ஆம்"[23] எனப் பரிமேலழகர் குறளுக்கு எழுதிய உரைப்பாயிர வரிகளும் நினைவில் எழுவது இயல்பே.

ஜாதிகளைத் தாண்டி "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" எனப் பொது நீதி சொன்ன வள்ளுவரையே "மனு சொன்னபடி குறள் எழுதினார்" என்கிறார் பரிமேலழகர்!

ஜாதி, மதம் மீறி நடக்கும் கலப்புத் திருமணங்களை மனு ஏற்கவில்லை, வர்ணம் வேறு; ஜாதி வேறு! வர்ணம், "பிரம்மா" படைத்த நால்வர்ணம். ஆயினும், இந்த வர்ணக் கலப்பில் உருவான பிரிவுகளே ஜாதிகள். இந்த ஜாதிமறு(கல)ப்பு மணம் பிரம்மாவை மீறி(?!) காலங்காலமாக நடந்தே வந்திருக்கிறது. ஜாதி வேறுபாடுகள் தம் கையை மீறிப் போய் விடாமலிருக்கவே இந்த நான்கு வர்ணத்தில் அனைத்து ஜாதிகளையும் "அடக்கி" வைத்தனர். இப்போதும் மோட்சம் என்பது பார்ப்பனர்களுக்கு மட்டுமே. சித்தியாவது வீடுபேறு என்பதைப் போனால் போகிறது என்று பார்ப்பனர் அல்லாத மற்ற வர்ணத்தினர்க்கும் கிடைக்க ஏற்பாடு செய்தார்கள். அதாவது, பார்ப்பன சேவைகளைச் சரியாகச் செய்கின்ற மற்ற வர்ணத்தினர் வீடு பேறு அடைந்து, அடுத்த பிறவியில் பார்ப்பனராகப் பிறந்து, பார்ப்பனப் பிறவியில், பார்ப்பனருக்குரிய தர்மம் தவறாது நடந்து மோட்சம் அடையலாம், பரம்பரை பரம்பரையாகவே, உழைக்காமல் உட்கார்ந்து உண்டு கொழுப்பதற்கான ஏற்பாடு இது.

அம்பேத்கர் இயற்றிய அரசு அமைப்புச் சட்டம், ஜாதிமறுப்பு மணம் செய்வதை ஏற்கிறதே! "சமூகத்தில் உள்ள ஜாதிய ஏற்றத் தாழ்வுகளை நீக்குவதற்காகவும் ஜாதி மறுப்புத் திருமணம் செய்பவர்களை ஊக்குவிக்கவும் அண்ணல் அம்பேத்கர் சமூக ஒருமைப்பாட்டுக் கலப்புத் திருமண நிதி உதவித் திட்டத்தை ஒன்றிய அரசு கொண்டுவந்தது. 2013ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட இந்த நிதித் திட்டம், ஜாதி மறுப்புத் திருமணம் செய்த பட்டியலின சமூகத்தைச் சேர்ந்தவர்களின் பொருளாதாரப் பாதுகாப்புக்காகவும் சமூக அங்கீகாரத்துக்காகவும் உருவாக்கப் பட்டது"[24]

அதிலும் புரோகிதர் இல்லாமல், இந்துச் சடங்குகள் இல்லாமல் நடக்கும் பகுத்தறிவு சுயமரியாதைத் திருமணத்தை நமது சட்டம் ஏற்கிறதே! இந்தச் சட்டம் 1967இல் அண்ணா தமிழ்நாடு முதல்வராகப் பதவி ஏற்றவுடன் தந்தை பெரியார் செய்த சிறு திருத்தத்துடன் நிறைவேறியது.[25] "தந்தை பெரியாருக்கு எனது நன்றிக் காணிக்கை" என்று அவர் சொன்னதும் ஒரு சரித்திரப் பதிவு! புரோகிதர் இல்லாமல் நடக்கும் சுயமரியாதைத் திருமணத்திற்குச் சட்ட ஏற்புக் கிடைத்தது சாதாரணமல்ல; சமூகநீதி வரலாற்றில் ஒரு மைல்கல்! தமிழ்நாடு அரசின் இந்த அரசாணை 20.01.1968அன்று வெளியாகி இப்போதும் நடைமுறையில் உள்ளது. ஒன்றிய, மாநிலச் சட்டங்களை விட "ஜாதிக் கொரு நீதிசொல்லும்" மனு மேலானதா?

திருக்குறள் இன்பத்துப் பால் முழுவதும் ஜாதி,மதம் கடந்த – காதல்தானே நிறைந்து கிடக்கிறது! "காதல் சிறப்புரைத்தல்" எனும் அதிகாரத்தின் பத்துப் பாடலில் எந்த இடத்திலும் ஜாதி மதம் பற்றிய குறள் இல்லையே! ஒரு பெண்ணைப் பார்த்து, இருவரும் குறிப்பறிந்து, கூடி மகிழ்ந்து,

நலம்புனைந்துரைத்து, அதுவே அலராகி திருமண வாழ்வில் கூடியதைக் கற்பியல் எனும் அடுத்த பதினெட்டு அதிகாரப் பாடல்களிலும் காதல் ததும்பும் காட்சிகளைச் சொல்லும் குறள், எந்த இடத்திலும் - இன்பத்துப் பாலின் இருநூற்றைம்பது பாடலில் ஓரிடத்திலும் - ஜாதி மதம் பற்றிப் பேசவில்லையே!

காதலின்பத்தைப் பற்றிய இன்பத்துப் பாலில் மட்டுமல்ல, ஏனைய அறத்துப் பால் பொருட்பால் என எந்த இடத்திலும் ஜாதி - மதம் பற்றி ஒரு சொல்லும் சொல்லாத பெருமைக்கு உரியதே குறள் எனும் பண்பாட்டு நூல்!

இதற்கு மாறாக மனு நூல் முழுவதும் ஜாதியம் கோலோச்சுகிறது.

இதனால்தான் “நீராரும் கடலுடுத்த” எனும் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலை எழுதிய “மனோன்மணியம்” பேராசிரியர் சுந்தரனார் 1891ஆம் ஆண்டிலேயே, “குறளைப் படித்தவர், “ஜாதிக்கு ஒரு நீதி” சொல்லும் மனுவை ஏற்க மாட்டார்” என்று - இன்றைக்கு 130ஆண்டுகளுக்கு முன்பே எழுதி எச்சரித்துவிட்டுப் போயிருக்கிறார்!

**“வள்ளுவர்செய் திருக்குறளை மறுவற நன்கு உணர்ந்தோர்கள்**
**உள்ளுவரோ மனுவாதி ஒருகுலத்துக்கு ஒரு நீதி?”**[26]

கலைஞர் மு.கருணாநிதி ஆட்சியில் கொண்டு வந்து இப்போதும் நடைமுறையில் உள்ள தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் உள்ள பகுதியைத் தொடர்ந்து வரும் வரிகள் இவை!

எனில்,

ஜாதியற்ற சமத்துவக் குறளும்,

ஜாதியம் பேசும் மனுவும் எப்படிச் சமமாகும்?

பிறப்பால் மட்டுமல்ல, பெயராலும் தொழிலாலும் ஏற்றத்தாழ்வு

“சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான்” என்னும் குறள், அவரவர் செய்யும் தொழிலால் ஏற்றத் தாழ்வு ஏதுமில்லை என்று சொல்கிறது.[27]

இதற்கு நேரெதிராக, “இன்ன ஜாதிக்காரன் இன்ன தொழிலைத்தான் செய்ய வேண்டும்” என்று வரையறை செய்வதோடு, அதிலும் ஏற்றத் தாழ்வைக் காட்டுகிறது மனு நூல். பார்ப்பனர்களின் சமூக மேலாதிக்கத்தை வலியுறுத்தும் மனுநூல், சத்திரியர், வைசியர், சூத்திரர்களுக்கு “அவரவர் ஜாதிக்குரிய பணி” மற்றும் சமூகநிலை குறித்துப் பின்வருமாறு வரையறை செய்கிறது:

பார்ப்பனர்க்குரிய பணிகள் யாவை? “சுயம்புவான பிரம்மா, தேவர்களுக்கு அவிசொரிந்து மகிழ்விக்கவும், பிதுர்களுக்கு சிரார்த்தம் செய்யவும் தக்கவனாக பிராமணனைத் தனது முகத்தினின்றும் முன்னம் படைத்தார்”[28] (இவையெல்லாம் இந்தக் கொரோனாக் கொடுங்காலத்தில் அரசாங்கத்தாலேயே தடைசெய்யப்பட்டதும், மனிதரின் அத்தியாவசியத் தேவைப் பட்டியலில் இவை இல்லை என்பதும், இந்தியாவின் பணக்கார சாமியான திருப்பதி உள்பட அனைத்து வழிபாட்டுத் தலங்களும் பலமாத காலம் இழுத்து மூடப்பட்டதும் இதுபோலும் கடவுள் வழிபாடும், பூஜை-புனஸ்காரங்களும், திதி கொடுத்தலும் மனிதவாழ்வில் தவிர்க்க முடியாதவை அல்ல என்பதை ஒரு சிறுகிருமி கற்றுக் கொடுத்துவிட்டது. ஆக, பார்ப்பனர்கள் செய்யும் வேலையும் சொல்லும் மந்திரங்களும் இந்தச் சமூகத்திற்குத் தேவையில்லை என்பதை அனைவரும் புரிந்துகொள்வார்கள்

சத்திரியரின் பணிகள் யாவை? “பிரஜா பரிபாலனம் செய்வது, ஈகை, வேள்விகள் செய்வது, வேத பாராயணம் செய்விப்பது, மன்னர் கடமையாகும்”[29] ஒருவேளை நாலாம் வருணத்தோன் நாடாள வந்துவிட்டால்? என்று எண்ணிய மனு அதற்கும் ஓர் அவசரச் சட்டத்தை எழுதிவைத்திருக்கிறார். “நாலாம் வருணத்தோன் அரசனாக

இருக்கும் நாட்டிலும், அறம் அறியாதோரும் தீய ஒழுக்கமுடையோரும் வசிக்கும் கிராமத்திலும், பாவிகள் அருகுறையும் ஊரிலும் வசிக்கக்கூடாது"[30] மன்னன் இயற்ற வேண்டிய விசாரணைகள் எந்த நாட்டில் நான்காம் வருணத்தானால் நடைபெறுகின்றதோ, அந்நாடு சேற்றில் அகப்பட்ட பசுவைப் போல், கண் முன்னே துன்பமுறுகின்றது.[31] நாலாம் வருணத்தாரும் நாத்திகருமே மிகுந்து, இரு பிறப்பாளர் இல்லாமற் போகின்ற நாடு வறுமை வாய்ப்பட்டு விரைவில் அழிந்து போகும்.[32] அனுஷ்டானங்களில்லாத அந்தணன் மன்னன் சார்பாகத் தீர்மானங்களைச் செய்யவும் கூடும். நாலாம் வருணத்தவன் செய்யக்கூடாது. வைசியனையும், நாலாம் வருணத்தானையும் தன் தன் தொழிலைச் செய்யுமாறு மன்னன் கட்டளையிடுக. இல்லையெனில், வேலையற்ற இவர்கள் உலகையே அழித்து விடுவார்கள்"[33]

நான்கு வருணத்திற்கும் அப்பால், சண்டாளர் என்ற ஜாதியை மனு குறிப்பிடுகிறது. தேர்ப்பாகர், இரண வைத்தியர், மீன் பிடிப்பவர், எலி, உடும்பு பிடிப்பவர், தச்சு வேலை செய்பவர் ஆகியோர் நால் வருணத்திற்கு வெளியில் உள்ளவர்களாவர்.[34] இவர்கள் வாழும் இடமாக "இவர்களனைவரும் நகரத்திற்கும், ஊருக்கும் வெளியில் மரத்தடி, தோப்பு, இடுகாட்டின் அருகில், மலை, மலர்ச்சோலை ஆகிய இடங்களில் தங்கள் தொழிலைப் பலரறிய இயற்றி வாழ்ந்திருக்கவும்"[35] என்கிறது. "இவர்கள் உலோகத்தாலான பாத்திரங்கள் உபயோகிக்கக் கூடாது. இவர்கள் தீண்டிய பாத்திரங்கள் துலக்கினாலும் தூய்மையாகா. நாய், கழுதை இவற்றை இவர்கள் வளர்க்கலாம். மாடு வைத்துப் பிழைக்கக் கூடாது."[36]

"இவர்கள் பிணத்தின் ஆடையை அணிய வேண்டும். உடைந்த சட்டியில் சோறுண்ண வேண்டும். இரும்பு பித்தளை நகைகளை அணிய வேண்டும். எப்போதும் தொழிலுக்காகச் சஞ்சரிக்க வேண்டும்."[37]

"வாணிபர்க்கு ஆநிரைகளைக் காத்தல், தானம் கொடுத்தல், கடலாரம், மலையாரம், கனிப்பொருள், விளைபொருள், தானியங்கள் இவற்றை வியாபாரம் செய்தல், வட்டிக்கு விடுதல், பயிர்த்தொழில் செய்தல் ஆகியவைவிதிக்கப்படுகின்றன."[38]

பிறப்பிலேயே வேறுபாடு வந்தபிறகு, பெயர் வைப்பதிலும் பேதம் காட்டுகிறது மனு தர்ம நூல். மங்களம், மேன்மையைக் குறிக்கும் வகையில் பிராமணனது பெயர் அமைய வேண்டுமாம்,[39]

பிராமணனுக்கு மங்களத்தையும் (மங்களேஸ்வரன், மகாலட்சுமிபோல...)

சத்திரியனுக்கு பலத்தையும் (வைத்தீஸ்வரன், ஜெகதீஸ்வரி போல...)

வைசியனுக்குப் பொருளையும்- (பொன்னையா, திருமூர்த்தி போல...)

சூத்திரனுக்குத் தாழ்வையும் (மண்ணாங்கட்டி, அமாவாசை போல...)

பிரித்துக்காட்டுவதான பெயர்களை இடவேண்டும் என்கிறது மனு.

(பெயர்கள் உதாரணத்திற்காக வழக்கிலிருந்து எடுத்தது இந்தக் கட்டுரை ஆசிரியர்)

இப்பொழுதும் உழைக்கும் மக்கள் வீடுகளில் மண்ணாங்கட்டி, அமாவாசை என்றெல்லாம் பெயர் வைத்திருப்பதைக் காணலாம். சமூக நீதியின் வெற்றியாக இன்றைய உழைக்கும் மக்கள் இதைக் கடந்த பெயர்களை வைப்பதும் நடக்கிறது.

மனுவின் ஜாதி ஆதிக்க விழுதுகளின் இன்றைய நீட்சிகளே இவை என்பதை உணர வேண்டும். இதனால்தான் ஜாதி, மதம் கடந்த பெயர்களை வைத்தார் பெரியார். இல்லையெனில் இன்றும் கூட தமிழர்களின் பெயர்கள் ஜாதி, மதப் பெயர்களாகவே - அடிமை வரலாற்றின் அழியாத அடையாளங்களாகவே நிலைத்திருக்கும் என்பதையும் நினைத்துப் பார்க்கவேண்டும்.

ஜாதிப்பட்டத்தை விடாமலே இன்றும் பெரும்பாலான வட- இந்தியர்களின் பெயர்கள் இருக்கின்றன. தமிழ்நாட்டில் "ஜாதிப் பட்டங்களை ஒழியுங்கள்" என்று பெரியார் நடத்திய இயக்கத்தின் பலனாகவே இன்றைய தமிழர்களின் பெயர்கள் ஜாதிப் பட்டங்களைத் தவிர்த்திருக்கின்றன என்பதை வடஇந்திய பெயர்களுடன் தமிழ்நாட்டுப் பெயர்களை ஒப்பிட்டுப் பார்த்தாலே தெரியும். 1927, டிச.25 "குடிஅரசு" இதழிலிருந்தே ஜாதிப்பட்டத்தைத் தவிர்த்து எழுதிவந்த தந்தை பெரியார், அவ்வாறே திராவிடர் கழகத்தினரும் பின்பற்ற வேண்டும் என்ற வேண்டுகோள் சமூகநீதி வரலாற்றில் பொன்னெழுத்தில் பொறிக்கத் தக்கது. இன்றைய நிலையில் இது மிகப்பெரிய செய்தி. (தமிழ்நாடு கிரிக்கெட் வீரர் நடராசனைப் பற்றிப் புகழ்பாடும் போது வட இந்தியரின் ஜாதிப் பெயர் ஒட்டும் பேசப்பட்டது முக்கியமானது)

"என்னுதும் என்னுது, உன்னுதும் என்னுது" என்பது நியாயமா?

வர்ண பேதத்தின் ஜாதியப் பிடிமானத்தின் அடிக்கட்டுமானம், உரிமை மற்றும் உடமையில் ஆதிக்கம் செலுத்துவதுதானே? உழைப்புச் சுரண்டல்தானே? இதை உணர்ந்து "பார்ப்பனர்க்கு அடிமைச் சேவகம் செய்வதற்கென்றே பிறப்பெடுத்த" நாலாம் வருணத்தானிடம், கூலி கொடுத்தோ, கொடுக்காமலோ பார்ப்பனர்கள் வேலை வாங்கலாம்"[40] என்கிறது மனு. இதை இளையதலைமுறையில் கூடச் சிலர் இன்றும் தொடர்வதன் காரணம் புரிகிறதா?

இதற்கு நேர் மாறாக, தனக்கு உரியதல்லாத தன் உழைப்பாலன்றிக் கிடைக்கும் - எந்தப் பொருளையும் "திருட்டு" என்றே கொள்ளவும் தள்ளவும் வேண்டும் என்னும் குறள் எவ்வளவு உயர்வானது என்பதை உலகமே வியக்கிறதே!

"உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொ ருளைக்

கள்ளத்தால் கள்வேம் எனல்"[41]

ஆனால், உழைக்காமலே உட்கார்ந்து கொண்டு அடுத்தவர் பொருளைச் சுரண்ட ஜாதியின் பெயரால் அனுமதிக்கும் மனு யாருக்கானது என்பதைப் புரிந்துகொள்க.

உண்மையில் இந்த ஜாதியின் பெயரால் நடைபெறும் உழைப்புச் சுரண்டல் தான் மனுவின் அடிப்படை நோக்கமே! அதைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டுதான் நூற்றாண்டு காலமாக இப்போதுவரை - உழைக்காமல் உட்கார்ந்து கொண்டே உண்ணும் நிலைமையைத் தொடர நினைக்கிறது பார்ப்பனியம்.

"பிராமணன் சந்தேகமின்றி சூத்திரன் தேடிய பொருளைக் கைப்பற்றலாம். ஏனெனில், சூத்திரன் எவ்விதப் பொருளுக்கும் உடையவனாக மாட்டான்"[42] பிராமணன் பொருளை அபகரித்த சூத்திரனை சித்திரவதை செய்து கொல்ல வேண்டும். ஆனால், சூத்திரனுடைய பொருளை பிராமணன் தம் இஷ்டப்படி கொள்ளையிடலாம்."[43]

"சூத்திரனுக்கு பிராமணப் பணிவிடை ஒன்றே பயன் தருவதாகும். பிராமணன் இல்லாதவிடத்தில் சத்திரியனுக்கும், சத்திரியனில்லாவிடத்தில் வைசியனுக்கும் தொண்டு செய்ய வேண்டும். அதிகமான செல்வமும், பசுக்களும் வைத்திருக்கிறவன், பிராமணன் கேட்டுக் கொடுக்காவிட்டால், களவு செய்தாவது, பலாத்காரம் செய்தாவது அவற்றை பிராமணன் எடுத்துக் கொள்ள உரிமையுண்டு."[44]

(இப்படி உட்கார்ந்து கொண்டு திருடியே சாப்பிடச் சொல்லும் மனுவும், பிறன் பொருளைத் திருடாதே என்றல்ல; 'திருடவும் நினைக்காதே' என்று 'கள்ளாமை' எனும் ஓர் அதிகாரமே எழுதிய குறளும் எப்படிச் சமமாகும்.)

ஒழுக்க வரையரை கூட ஜாதிக்கு ஜாதி வேறுபடுமா?

"மறப்பினும் ஓத்துக் கொளலாகும்
பார்ப்பான்
பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்"

என்னும் குறளில்[45] படித்தகல்வி மறந்தால் மீண்டும் படித்துக் கொள்ளலாம், ஆனால், "உயர்ந்த ஜாதி என்று சொல்லிக் கொள்பவன், பார்ப்பனர் ஒழுக்கம் தவறினால் அந்த "உயர்ந்த" இடத்தை இழந்துவிடுவான் என்று தெளிவாகச் சொல்கிறார் திருவள்ளுவர். ஆனால், "பிறப்பாலான பார்ப்பன உயர்வு எந்த வகையிலும் மாறாது" என்கிறது மனு.

கல்விகற்றவர் மற்றும் ஒழுக்கமுடையவர் உயர்வையும், கல்லாதவர் மற்றும் ஒழுக்கமிழந்தவர் இழிவையுமே திருக்குறள் பல பாடல்களில் சொல்கிறது.

"மேற்பிறந்தார் ஆயினும் கல்லாதார் கீழ்ப் பிறந்தும்,

கற்றார் அனைத்திலர் பாடு"[46]

என்ன சொல்கிறது எனில், கல்லாதவர் உயர்குடியில் பிறந்தவராயினும், தாழ் குடியில் பிறந்த கற்றவர்க்கு ஈடாக மாட்டார் என்பது ஜாதிய சமூகத்தில் மனுவுக்கு எதிரான அன்றைய போர்க்குரல் அல்லவா!

சங்க இலக்கியத்தின் புறநானூற்றில் ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன் எனும் மன்னன் எழுதிய பாடல் ஒன்றுண்டு. "ஒரு வீட்டில் வயதில் மூத்தவனை விடவும் கல்வி உடையவனே மேலானவன், ஒரு நாட்டில் கீழ் ஜாதியில் பிறந்தவனாயினும் கல்விஅறிவு பெற்றவன் சொல்வதையே மேல்ஜாதிக்காரனும் கேட்க வேண்டும் கற்றவன் சொல்வதை ஜாதி கடந்து – அரசாங்கம் கேட்பதே சிறந்தது" என்பது அந்தப் புறநானூற்றுப் பாடலின் பொருளாகும். பெயர்ப் பொருத்தமும் சரியாக இருக்கிறது – "ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன் என்று!

"ஒருகுடிப் பிறந்த பல்லோருள்ளும்

மூத்தோன் வருக என்னாது, அவருள்

அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்,

வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும்

கீழ்ப்பால் ஒருவன் கற்பின்

மேற்பால் ஒருவனும் அவன்கட் படுமே"[47]

குறளும் சங்கஇலக்கியமும் இப்படி! மனு சொல்வது எப்படி? – "பிராமண குலத்தில் பிறந்தவன் ஆசாரமில்லாதவனாயினும், அவன் நீதி செலுத்தலாம். சூத்திரன் ஒருபோதும் நீதி செலுத்தலாகாது."[48]

ஆக, பிறப்பு ஒன்றையே சிறப்பாகச் சொல்லும் மனுவும், ஒழுக்கத்தையும் கல்வியையுமே போற்றக் கூடிய குறளும் எப்படிச் சமமாகும்?

தண்டனைக்கும் ஜாதி வேறுபாடு உண்டு

அறியாமல் செய்த தவறைப் பொறுத்தல் மனித மாண்பை வளர்க்கும் என்று உலகப் பேரறிஞர் பலரும் சொல்லியிருக்க, அதற்கும் மேலே போய், "அறியாமல் செய்தவர் அறியும் வழி, அவர்க்கு நன்மை செய்து விடுவதுதான்"[49] என்று நல்லறம் சொன்னவர் வள்ளுவர். இதுதானே மனிதரைப் பண்படுத்தும் உயர்நெறி? அதே வேளையில், "பயிர்களை நல்லபடியாக வளர்க்க வேண்டுமானால், பயிர் வளர்ச்சியைக் கெடுக்கும் களைகளை அழிப்பதும் அவசியம் என்பதுபோல, அறிந்தே கொலை செய்த கொடியவரை அவர் யாராக இருந்தாலும் தண்டிப்பதே அரச நீதி!" என்றும் எளிதில் புரியும் எடுத்துக் காட்டுடன் குறள் கூறும்.[50]

ஆனால், இதற்கு மாறாக, கொலை செய்தவனின் ஜாதி பார்த்துத்தான் தண்டனை தரவேண்டும்[51] என்பதா சமநீதி?! அதாவது, கொலைகாரன் பிராமணனாக இருந்தால் அவன் குடுமியைச் சிரைத்தாலே போதுமானது, மற்ற ஜாதி எனில், உயிரையே எடுத்துவிட வேண்டுமாம்."

**இதுவா பொதுநூல்?**

வீடுபேறு மோட்சம் மனுவில் உள்ளது, குறளில் இல்லையே?

குறள் வடமொழியின் நான்கு வேதங்களைப் பின்பற்றி எழுதப்பட்டது எனும் "கட்டுக் கதைகள்" நிறையவே உண்டு, எல்லாம் அவர்கள் புனைந்த

புனைசுருட்டுகள்தாம். இதற்காகவே கி.பி.11ஆம் நூற்றாண்டில் "திருவள்ளுவ மாலை" என்றொரு நூலைத் தொகுத்தார்கள். இதில் "நான்மறையைத் தமிழில் தந்த" என்பதான தொடர்கள் நிறைய வரும்! இந்நூலின் முதற்பாடல் அசரீரி, இரண்டாம் பாடல் கலைமகள் எழுதியது போலும் கற்பனைகளே இந்நூலைப் புனைந்தவர் நோக்கம் புரியும். அதை உதாரணம் வேறு காட்டுவார்கள். அதிலிருந்தே அவை ஒப்பனை இல்லாத கற்பனைச் சொற்புனைக் கதைகள் என்பதையும் புரிந்துகொள்ளலாம்.

55 வெண்பாக்கள் உள்ள இந்த நூலில், நாமகள் (கல்வித்துறைக்கான கடவுள்), உக்கிரப் பெருவழுதி (மன்னன்), கோதமனார், நல்லந்துவனார், வெள்ளிவீதியார், மாங்குடி மருதனார், வடமொழி வேத-வைதிக-வழியில் குறள் எழுதப்பட்டது என்று பாராட்டியுள்ளனர். நக்கீரர், அம்மூவனார், கீரந்தையார் சிறுமேதாவியார் முதலான புலவர்கள் நான்கு உறுதிப் பொருள்களை வள்ளுவர் பாடியதற்காகப் பாராட்டி எழுதியிருக்கின்றனர். இதனால்தான் "திருவள்ளுவ மாலை" ஒரு போலி நூல், ஒருவரே பலபெயரில் எழுதிய நூல்" என்றார் தமிழறிஞர் மு.அருணாசலம் (தமிழிலக்கிய வரலாறு நூற்றாண்டு வரிசை)

ஆனால் "அறம்பொருள் இன்பம் வீடடைதல் நூற்பயனே" என்னும் பிற்கால நன்னூலின் கருத்து வள்ளுவரின் கருத்தல்ல! வள்ளுவர் "இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு" எனவும், "அறமுதலாகிய மும் முதற்பொருள்" எனவும் தொல்காப்பியத் தமிழியத்தைப் பின்பற்றி முப்பால் வகுத்தவர்! எனவே மனுவைப் போல வேத வழிப்பட்டதல்ல குறள்; தமிழ் மரபை ஒட்டி, வீடுபேற்றை வெட்டி வாழ்வியலை மட்டுமே பாடினார்!

**நட்பு முரணும் பகை முரணும்:**

திருக்குறளிலும் இன்றைய பகுத்தறிவுக் கருத்துகளுக்கு ஒவ்வாத சில முரண்பாடுகளும் இருக்கவே செய்கின்றன. ஆனால், அவை நட்பு முரண் வகை சார்ந்தவை.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"

என்று சொன்னதுதான் இந்தக் கருத்துப் போரின் ஜனநாயகத்தைப் புரிந்துகொண்ட பகுத்தறிவுக் கூற்று. இதையே பெரியாரும், "நான் சொல்கிறேன் என்பதற்காக ஏற்றுக் கொள்ள வேண்டாம், உன் பகுத்தறிவைப் பயன்படுத்தி நன்றாக யோசித்து உண்மை அறிந்து கொண்டால் போதும்" என்றே சொல்லிவந்தார். ஆனால், இந்த ஜனநாயகக் கருத்துகள் எதையும் ஏற்காத மனு, "இறைவன் படைத்தான் நீ ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்பது எப்படிச் சரியாகும்? இதுதான் பகைமுரண். நட்பு முரணைப் பேசித் தீர்த்துக் கொள்ளலாம்; பகைமுரணைப் போராடித்தான் வெல்ல முடியும்.

ஜாதி மத அழுத்தமே நமது முன்னேற்றத்திற்குப் பெருந்தடை என்பதால்தானே அறிவுசார் நல்லுலகோர், அதை எதிர்த்துச் சமர் புரிந்தார்கள்.

இன்றைய தமிழ்நாட்டில் மிகப்பெரும்பாலோர் படித்துக்கொண்டே இருக்கும் நூல் திருக்குறள்தான். அறிஞர் மு.வ.எழுதிய "திருக்குறள் தெளிவுரை" நூல் நூறு பதிப்புக்கு மேல் கண்டுள்ளது. இதுபோலும் ஏதேனும் ஒரு திருக்குறள் நூலே இன்றும் அதிக விற்பனை உள்ள (BEST SELLER) நூலாக விற்றுக் கொண்டே இருக்கிறது! திராவிடத் தொடர் இயக்கங்கள் அரசு நடைமுறைகளில் மட்டுமல்லாமல் சமூகரீதியாகவும் நடத்திய இயக்கங்கள் திருக்குறளை மக்களிடம் கொண்டுபோய்ச் சேர்த்ததன் விளைவு, பொருளற்ற புரோகிதத் திருமணங்களைத் தவிர்த்து, திருவள்ளுவரை சாட்சியாக வைத்து திருக்குறளின் இல்லறவியல் பாடல்களைச் சொல்லித் திருமணம் செய்வது வரை வந்திருக்கிறது.

உலகில் உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட மொழிகளில் திருக்குறள் மொழியாக்கம்

செய்யப்பட்டுள்ளது. கலைஞர் வரை நூற்றுக்கு மேற்பட்ட தமிழறிஞர்களின் உரையும் திருக்குறளுக்கு மட்டுமே வாய்த்த பெருமை! வெகுசில காலத்துக்கு ஒவ்வாத கருத்துகள் இருப்பினும் இன்றும் கூட, தமிழரின் தமிழ்ப் பண்பாட்டின் தனி அடையாளமாகத் திருக்குறளே புகழ்பெற்றுத் திகழ்கிறது.

மனுவை ஏற்றிப் போற்றிச் சொல்லிக் கொள்வதும் அதை அவரவர் பத்திரிகையில் வெளியிட்டுக் கொள்வதும் அவரவர் விருப்பம். அதற்காகத் திருக்குறளை இழிவு செய்வதையும், "குறளும் மனுவும் ஒன்றே" என்பதான அறிவுக்கு ஒவ்வாத கருத்துகளை வெளியிடுவதையும் தமிழ்நாடு ஏற்காது என்பதை அறிந்து "மனுவாதிகள் (அ) குறளின் எதிரிகள் தங்களைத் திருத்திக் கொள்ள வேண்டும்.

**அடிக்குறிப்புகள்:**

(1) 24-10-2020 விகடன் இணையம் படத்துடன்

(2) 04-11-2020தினமணிநாளிதழ் நடுப்பக்கக் கட்டுரை

(3) 20-11-2020 தினமணி நாளிதழ் நடுப்பக்கக் கட்டுரை

(4) திருக்குறள்-வரிசை எண்-54, அதிகாரம் வாழ்க்கைத் துணைநலம்)

(5) மனுதர்மசாஸ்திரம் - அத்தியாயம்-11 சுலோகம்-6

(6) மனு தர்ம சாஸ்திரம் -- அத்".11. சுலோ-.66.

(7) மனு தர்ம சாஸ்திரம் -- அத்-9, சுலோ-19

(8) மனு தர்ம சாஸ்திரம் -அத்-2 சுலோ213

(9) மனு தர்ம சாஸ்திரம் -அத்-9சுலோ78

(10) மனு தர்ம சாஸ்திரம் -அத்-5 சுலோ-154

(11) மனு தர்ம சாஸ்திரம் -அத்- 5 சுலோ-156

(12) மு.பழனியப்பன்-திருக்குறள் தமிழ்ப் பண்பாட்டுக் கையேடு-பக்-51

(13) கந்தர்வன்கவிதைகள் சந்தியாபதிப்பகம் பக்-

(14) மனு தர்ம சாஸ்திரம் - அத்-9, சுலோ-148)

(15) பகவத்கீதை - அத்-9, சுலோ-32

(16) கீதையின்மறுபக்கம் கி.வீரமணி-பின்அட்டை

(17) மனுதர்ம சாஸ்திரம் - அத்-8; சுலோ-415

(18) திருக்குறள்- வரிசை எண்-972 (அதிகாரம்-பெருமை)

(19) மனு தர்ம சாஸ்திரம் - அத்-1, சுலோ-31

(20) பகவத் கீதை - அத்4 , சுலோ-13

(21) பாரதிதாசன் - குறிஞ்சித்திட்டு வரிகள்-520-525

(22) பாரதியார் - உயிர்பெற்ற தமிழர் பாட்டு-13

(23) தமிழ்நாடு அரசின் தமிழிணைய கல்விக் கழக இணையதளம் திருக்குறள்-பரிமேலழகர் உரை) http://www.tamilvu.org/slet/l2100/l2100pd1.jsp?bookid=31&auth_pub_id=29&pno=9 )

(24) விகடன் இணையம்-பிப்.07, 2018

(25) மாபெரும்தமிழ்க்கனவு- தமிழ்திசை-செல்வ.புவியரசன்- பக்-220

(26) மனோன்மணியம்- தமிழ்த் தெய்வ வணக்கம், 11ஆம் தாழிசை

(27) திருக்குறள்-வரிசை எண்-972, அதிகாரம்-பெருமை

(28) மனு தர்ம சாஸ்திரம் -அத்-1, சுலோ-94)

(29) மனு தர்ம சாஸ்திரம் அத்-1-சுலோகம்-89

(30) மனு தர்ம சாஸ்திரம் -4-61

(31) மனு தர்ம சாஸ்திரம் -8-21

(32) மனு தர்ம சாஸ்திரம் -8-22

(33) மனு தர்ம சாஸ்திரம் -8-417

(34) மனு தர்ம சாஸ்திரம் -10-47-49

(35) மனு தர்ம சாஸ்திரம் - 10-50

(36) மனு தர்ம சாஸ்திரம் -10 : 52

(37) மனு தர்ம சாஸ்திரம் - 10 : 52

(38) மனு தர்ம சாஸ்திரம் - 1:90

(39) மனு தர்ம சாஸ்திரம் 2-31, 32

(40) மனு தர்ம சாஸ்திரம் - 8-412

(41) திருக்குறள்- வரிசை எண்-282,அதிகாரம்- கள்ளாமை

(42) மனு தர்ம சாஸ்திரம்- அத்தியாயம்-8, சுலோகம்--417

(43) மனுதர்மசாஸ்திரம் அத்தியாயம்-.9. சுலோகம்.248

(44) மனுதர்மசாஸ்திரம் - அத்தியாயம்-11. சுலோகம்-12.

(45) திருக்குறள் வரிசைஎண்-134, அதிகாரம்-ஒழுக்கமுடைமை

(46) திருக்குறள் வரிசைஎண் -409, அதிகாரம்-கல்லாமை.

(47) புறநானூறு, பாடல் எண்-183, ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்

(48) மனு தர்ம சாஸ்திரம் -அத்தியாயம்-8, சுலோகம்-20

(49) திருக்குறள்- வரிசை எண்-314, அதிகாரம்- இன்னா செய்யாமை.

(50) திருக்குறள் வரிசை எண்-550, அதிகாரம்- செங்கோன்மை.

(51) மனு தர்ம சாஸ்திரம் அத்தியாயம்-8, சுலோகம் 379

## கட்டுரைக்கு உதவிய நூல்கள்:

(1) மனுநீதி- ஜாதிக்கொரு நீதி - தந்தை பெரியார்,

(2) கீதையின் மறுபக்கம் - கி.வீரமணி

(3) மனு தர்ம தந்திரம் - ‘விடுதலை’ இராசேந்திரன்,

(4) பொசுங்கட்டும் மனுதர்மம் கலி. பூங்குன்றன்

(5) மநு அதர்மம் - சுந்தம்பட்டி வெ.நாராயணசாமி

(6) மனுதரும சாஸ்திரம் கோமாண்டூர் இராமாநுஜாச்சாரியார் (1865Pdf)

(7) பகவத் கீதை உண்மையுருவில் - பக்தி வேதாந்தசுவாமி பிரபுபாதா

(8) திருக்குறள்-தமிழ்ப் பண்பாட்டுக் கையேடு தொகுப்பு நூல் (USA-ஆண்டு-2000)

(9) ஈரடிப் போர் - ஆயிஷா இரா. நடராசன்

(10) திராவிடர் கழக வரலாறு - கி.வீரமணி

(11) மாபெரும் தமிழ்க் கனவு - தமிழ்த்திசை வெளியீடு

(12) மற்றும் 04.11.2020, 20.11.2020 தேதியிட்ட தினமணி நாளிதழ்கள்

**ஆசிரியர் குறிப்பு:**

முத்துநிலவன், கட்டுரையாளர், கல்வி, சமூகவியல், தமிழ்இலக்கிய ஆய்வாளர், அரசுப் பள்ளியில் 35ஆண்டுகள் தமிழாசிரியப் பணிநிறைவுசெய்தவர், "முதல் மதிப்பெண் எடுக்கவேண்டாம் மகளே!” உள்ளிட்ட ஒன்பது நூல்களின் ஆசிரியர்.

●

# வைக்கம் – இந்தியச் சமூக விடுதலைப் போராட்டத்தின் முன்னோடி



முனைவர் வா.நேரு

**ஆய்வுச் சுருக்கம்**

*மார்ச் 30-1924 முதல், வெற்றிவிழா நடைபெற்ற நவம்பர் 29-1925 வரை, நடந்த போராட்டம் வைக்கம் போராட்டம். தந்தை பெரியார் ஏப்ரல் 13-1924இல் வைக்கம் சென்று போராட்டத்தில் கலந்து கொள்கின்றார். வைக்கம் போராட்டத்தில் தந்தை பெரியாரின் பங்களிப்பை இந்தக் கட்டுரை விரிவாகப் பேசுகிறது. வரலாற்று ஆய்வாளர் பழ.அதியமான் அவர்களின் வைக்கம் போராட்டம் என்னும் நூல், அவர் செய்தித்தாளில் அந்த நூலைப் பற்றி எழுதிய கட்டுரை, அவர் பி.பி.சி.க்கு அளித்த பேட்டி எனப் பலவகையிலும் பழ.அதியமான் அவர்களின் பங்களிப்பை இந்தக் கட்டுரை பயன்படுத்தி வைக்கம் போராட்டத்தினை விளக்குகிறது.*

*தந்தை பெரியார் வைக்கம் போராட்டத்தை ஆரம்பித்தவர் அல்லர், அந்தப் போராட்டத் தீ வலிமையாக எரிவதற்கும், வெற்றி பெறுவதற்கும் காரணமாக இருந்தவர் என்பதை இக்கட்டுரை சுட்டுகிறது. இந்தியாவில் இருக்கும் வைதிகர்களின் மனதில் இருக்கும் சாதி மனப்பான்மையை அவர்கள் காந்தியோடு நடத்திய உரையாடல் மூலமாகச் சுட்டுகிறது. காந்தியடிகள் நடத்திய பல சத்தியாக்கிரகப் போராட்டங்களுக்கு அடிப்படை வைக்கம் போராட்டம். அண்ணல் அம்பேத்கர் இயக்கங்களும், பெரியார் இயக்கங்களும் நடத்திய / நடத்தும் ஆலய நுழைவுப் போராட்டங்களின் முன்னோடி வைக்கம் போராட்டம் என்பதனை இக்கட்டுரை விரிவாக ஆதாரங்களோடு எடுத்து வைக்கின்றது.*

**முன்னுரை:**

*பாறாங்கல்லாய் இறுகிக் கிடந்த மக்களின் ஜாதி மனப்பான்மையில் விழுந்த சுத்தியல் அடி வைக்கம் போராட்டம். இந்தச்சாதி அமைப்பு என்பது கடவுளின் கட்டளை என்று நினைத்துக் கொண்டிருந்தவர்களின் எண்ணத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் அளவிற்கு வலிமையான பிரச்சாரத்தை மேற்கொண்ட ஒரு போராட்டம் வைக்கம் போராட்டம். அரசியல் இயக்கமான காங்கிரசு இயக்கம் சார்பாக அகிம்சை வழியில் நடத்தப்பட்ட சத்யாக்கிரகப் போராட்டம் வைக்கம் போராட்டம். வைக்கம் போராட்டத்தினை ஆரம்பித்தவர் தந்தை பெரியார் அல்லர், ஆனால் அந்தப் போராட்டத் தீ வலிமையாக எரிவதற்கு உயிர்க்காற்றாய் (Oxygen) அமைந்தவர் தந்தை பெரியார்.*

வைக்கம் போராட்டத்தில் குறிப்பிட்டுச் சொல்லவேண்டிய தலைவர்கள் இருவர். அதில் ஒருவர் அன்றைய அகில இந்திய காங்கிரசுத் தலைவராக இருந்த காந்தியார். இன்னொருவர் அன்று தமிழ்நாடு காங்கிரசுக் கமிட்டியின் தலைவராக இருந்த தந்தை பெரியார். தமிழ்நாடு காங்கிரசுக் கமிட்டி என்பது அகில இந்தியக் காங்கிரசு கமிட்டிக்குக் கீழ் தான் இருந்தது அன்று. இருந்தாலும் அகில இந்தியக் காங்கிரசுக் கமிட்டித் தலைவரான காந்தியாரோடு பலவகையிலும் வேறுபட்டு இந்தப் போராட்டத்தில் தந்தை பெரியார் நிற்கின்றார்.

பல வரலாற்று நிகழ்வுகளுக்குக் காரணமானவர் தந்தை பெரியார் ஆவார். தந்தை பெரியாரின் வாழ்க்கை என்பது போராட்டமும், பிரச்சாரமும் இணைந்த வாழ்க்கை ஆகும். பிரச்சாரம் செய்வதற்கே அவர் போராட வேண்டியிருந்தது. மக்கள் அவ்வளவு எளிதாக ஏற்றுக் கொள்ள முடியாத, மனதளவில் கூட செரித்துக் கொள்ள முடியாத கருத்துகளை, உண்மைக் கருத்துகளை மக்கள் மத்தியிலே பிரச்சாரம் செய்தவர் பெரியார். அதற்காகப் போராட வேண்டியிருந்தது. அதனைப் போலவே அவர் நடத்திய போராட்டங்களுக்குப் பிரச்சாரமும் செய்ய வேண்டியிருந்தது. எனவே பெரியாரின் வாழ்க்கை என்பதே போராட்டமும் பிரச்சாரமும் இணைந்த வாழ்க்கையாகும். இந்த இரண்டு வழிமுறைகளாலும் தான் பல வரலாற்று நிகழ்வுகளுக்குக் காரணமானவராக வரலாற்றில் அவர் இடம் பெறுகிறார். அப்படித் தான் வைக்கம் போராட்டத்திலும் அவர் இடம் பெறுகிறார்.

**பிறப்பின் அடிப்படையில் சமூக அநீதி**

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்பது பொது நீதி. உலகத்தின் மற்ற பகுதிகளில் எல்லாம் மனிதர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் மனிதர்களாகப் பிறக்கின்றனர், இந்தியாவில் பிறக்கும் குழந்தைகள் மட்டும் பிராமணக் குழந்தைகளாக, சத்திரியக் குழந்தைகளாக, வைசிய, சூத்திர, பஞ்சமக் குழந்தையாகப் பிறக்கின்றன. "மனிதச் சமூக வரலாற்றில் முதன் முதலாக மக்களைப் பிறப்பின் அடிப்படையில் நான்கு வகையினராகப் பிரித்து வைத்தது ஆரியர்களின் மனு ஸ்மிருதி சாத்திரம் தான்! மனு ஸ்மிருதி உருவாக்கிய பிராமணன்,சத்திரியன்,வைசியன்,சூத்திரன் என்னும் நான்கு வருணங்களே ஆயிரக்கணக்கான குலப்பிரிவுகள்(சாதிகள்) தோன்றுவதற்கு அடிப்படை என்பதை மனு ஸ்மிருதியே ஒப்புக் கொள்கிறது. மக்களை நான்கு வருணங்களாகப் பிரித்ததோடு மட்டுமல்லாது அவர்களில் பிராமணர்களுக்கு மட்டும் மேலாண்மை கொடுத்து அவர்களை உயர்ந்த இடத்தில் வைத்துப் போற்றுகிறது மனு ஸ்மிருதி' (1) என்று பேராசிரியர் ப.காளிமுத்து குறிப்பிடுவார். பல நூற்றாண்டுகளாக மன்னர்களை அண்டியும், அவர்களின் படை பலத்தாலும், வன்முறையாலும், சாதி அமைப்பின் அடிப்படையில் மனிதர்களைச் சூத்திரர்களாக, பஞ்சமர்களாகப் பிரித்து, அவர்களை அடிமையைப் போலவே நடத்திட பார்ப்பனர்களுக்கு உதவிய ஒரு நூல் மனு ஸ்மிருதி என்பதனை நாம் அறிவோம்.

சூத்திரர்களுக்கும், பஞ்சமர்களுக்கும், பெண்களுக்கும் கல்வியை மறுத்து, சொத்துரிமையை மறுத்து விலங்குகளைப் போல அவர்களை நடத்துவதற்கு இந்த மனு ஸ்மிருதி என்னும் நூலும், அதன் அடிப்படையில் அமைந்த ஆட்சியும் அமைந்திருக்கிறது. சாதி என்னும் அமைப்பு பல நூற்றாண்டுகளாய் மனிதர்களைக் கூறுபடுத்தி, வேறுபடுத்திக் கொடுமைகள் பல செய்வதற்கு அடிப்படையாக இருக்கிறது. வேறு எந்த நாட்டிலும் இல்லாத இந்தக் கொடுமையான சாதியினை ஒழிப்பது எவ்வாறு? சமத்துவத்தை நிலை நிறுத்துவது எவ்வாறு? என்னும் கேள்விக்கான விடையைத் தேடுவது தான் ஒரு நூற்றாண்டாகச் சமூகப் புரட்சிவாதிகள் தேடும் விடையாக இருக்கிறது.

"ஜாதி - இந்துக்கள் ஒன்றுபடாமல் தடுக்கும் சுவராகவோ, முள்வேலியாகவோ

அல்ல;அதுசுவராகவோ,முள்வேலியாகவோ இருந்தால் வெட்டி எறிய வேண்டியது தான். ஆனால் உண்மையில் சாதி ஒரு மனப்பிராந்திய -கற்பனை. எனவே அந்த மனப்பிராந்தியக் கற்பனை -கருத்து ஒழிந்தால் தான் ஜாதி ஒழியும் "(2) என்றார் அண்ணல் அம்பேத்கர். சாதி என்னும் கற்பனைக் கருத்து மிக ஆழமாக மக்களின் மனதிலே வேர் பிடித்து நிற்கிறது. அந்தக் கற்பனைக் கருத்தைக் காப்பாற்றிடவே இந்து மதம் என்னும் பார்ப்பனிய மதம் பல நூற்றாண்டுகளாக அரண்களைச் செய்து வைத்திருக்கிறது. அரண்களாக இன்றைக்கும் பார்ப்பனர்கள் உருவாக்கி வைத்த கடவுளும், அவர்களின் வேதங்களும், புராணங்களும், இதிகாசங்களும் இருப்பதைப் பார்க்க முடிகிறது.

**திருவிதாங்கூர் சமஸ்தானம்**:

கேரள மாநிலம் கோட்டயம் மாவட்டம் வைக்கம் சிவன் கோவிலைச் சுற்றியுள்ள தெருக்களில் நடப்பதற்கான உரிமை வேண்டி நடந்த போராட்டம் தான் வைக்கம் போராட்டம் என்பதனை நாம் அறிவோம். இன்று வைக்கம் என்னும் ஊர் இந்திய ஒன்றியத்தில் உள்ள கேரள மாநிலத்தில் உள்ள ஓர் ஊர். ஆனால் வைக்கம் என்னும் ஊர் , போராட்டம் நடந்த காலத்தில் திருவிதாங்கூர் என்னும் சமஸ்தானத்தைச் சார்ந்தது. அதாவது அன்றைக்கு அது ஆங்கிலேயரின் மேற்பார்வைக்கு உட்பட்ட தனி நாடு. தமிழ்நாட்டைச் சேர,சோழ,பாண்டிய மன்னர்கள் ஆண்டது போல, தனியாக திருவிதாங்கூர் சமஸ்தானத்தை ஆண்ட மன்னர்களால் ஆளப்பட்ட பகுதி அது. திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் இன்றைய கேரள மாநிலத்தின் தென்பகுதிகளும், கன்னியாகுமரி மாவட்ட பகுதியும் உள்ளடங்கியிருந்தது. இந்திய ஒன்றியத்துடன் 1949-ஆம் ஆண்டு தான் இணைந்த பகுதி திருவிதாங்கூர் சமஸ்தானமாகும்.

அங்கு ஆரியம் எப்படி உள்ளே வந்தது, எப்படி அங்கு ஆண்ட மன்னனை ஆரியம் வளைத்துப் போட்டது என்பதனைத் தவத்திரு தர்மதீர்த்த அடிகளார் கீழ்க்கண்டவாறு விவரிப்பார்.

"1729 முதல் முப்பதாண்டுக்காலம் திருவிதாங்கூர் சமஸ்தானத்தை மார்த்தாண்ட வர்ம மகாராஜா ஆண்டு வந்தார்... முஸ்லிம்களின் படையெடுப்பு ஆரம்பமானதும் பிராமண மதம் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி நகர ஆரம்பித்தது. குறு நில மன்னர்களையெல்லாம் வென்று நாட்டைக் கீழ்ப்படுத்திய மார்த்தாண்ட வர்மா தன்னுடைய குடிமக்களை ஆள்வதில் ஈவிரக்கமின்றி செயல்படும் சர்வாதிகாரியாக இருந்தார். பிராமணர்களுக்காக ஏராளமான பணத்தைச் செலவிட்டு அவர்களுடைய ஆலோசனைகளைக் கேட்டுத் தான் அவர் ஆட்சி புரிந்தார்... கைகட்டி வாய் பொத்தியவாறு நாட்டைப் பிராமணர்களுக்கு காணிக்கை செலுத்திய மகாராஜா மூன்று காரியங்களைச் செய்தார்.

முதலாவதாக, நாட்டை பத்மனாப ஸ்வாமிக்குக் காணிக்கையாக்கி அந்தக் கடவுளின் தாசனாக மாறினார். இரண்டாவதாக, நாள்தோறும் பிராமணர்களுக்கு உணவளிப்பதற்காக நாடெங்கிலும்'ஊட்டுபுரைகள்'எனப்படும் சோறூட்டு மனைகளை நிறுவினார். மூன்றாவதாக, பிராமணர்களை மகிழ்விக்க ஆறாண்டுகளுக்கு ஒருமுறை ஏராளமான பணத்தைச் செலவிட்டு 'முறைஜெபம்' என்ற உற்சவத்தை மேற்கொண்டார். போர்க்காலத்தில் கோவில்களை அழித்ததற்கான பிராயச்சித்தமாக இதை மேற்கொண்டார். ஆனால் உண்மையில் கோவில்கள் எதுவும் அழிக்கப்படவில்லை. பொதுச்சொத்தைச் செலவிட்டுப் பிராமணர்களைத் தீனி போட்டு வளர்க்க ஒரு சாக்காக இவ்வாறு வதந்தியைப் பரப்பினர்."(3)

1729-முதல் ஆரியம், அந்தப் பகுதியில் நடத்திய மனித நேயமற்ற செயல்களைப் படிக்கிறபோது நமக்கு நெஞ்சு பதை

பதைக்கிறது. இப்படியும் கொடுமைகள் நடக்குமா? என்று தோன்றுகிறது. திருவிதாங்கூர் மன்னனுக்கு அருகில் இருந்த ஆரியர்கள், ஆட்சி அதிகாரத்தின் மூலம் மனுநீதி என்னும் அநீதிச்சட்டங்களால் விளிம்பு நிலை மக்களைப் படுத்திய பாட்டினை பல வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர். இந்தப் பகுதியில் வாழ்ந்த ஒடுக்கப்பட்ட மக்களின் மேல் தீண்டாமை, அண்டாமை, பாராமை போன்ற சமூகக் கட்டுப்பாடுகள் திணிக்கப்பட்டிருந்தன. உயர் ஜாதியினர் எனப்பட்டவர்கள் வாழும் இடங்களுக்கு ஒடுக்கப்பட்டவர்கள் வரக்கூடாது என்னும் கட்டுப்பாடு இருந்திருக்கிறது. பொதுக்குளங்கள், கிணறுகள், சாலைகள் போன்றவற்றைப் பயன்படுத்தக்கூடாது என்ற கட்டுப்பாடு இருந்திருக்கிறது. இதனை மீறுபவர்களுக்கு மிகக் கடுமையான தண்டனைகள், வரி (தண்டத்தொகை) விதித்தல் போன்றவை நடைமுறைப்படுத்தப் பட்டிருக்கின்றன.

"மனு தர்ம ஆதிக்கம் அன்றைய திருவிதாங்கூரில்(கேரளம்) மிகவும் உக்கிரமான நிலையில் அமைந்திருந்தது. நம்பூதிரிகளுக்கும் நாயர்களுக்கும் மற்றும் நம்பூதிரிகளுக்கும் வேளாளர்களுக்கும் இருந்த நெருக்கமான உறவால், மனுதர்ம நடைமுறைகள் மிகவும் குரூரமான முறைகளில் பேணப்பட்டன. அன்றைய கேரளம் 'பைத்தியக்காரர்களின் கூடாரம் 'என்று 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் சுவாமி விவேகானந்தர் சொன்னார் (விவேகானந்தர் நூல் திரட்டு பாகம் 3:1964:294) என்றால் 18ஆம் நூற்றாண்டில் அது எவ்வளவு மோசமான நிலையில் இருந்திருக்கும் என்று கற்பனை செய்து கொள்ள முடியும்.

இந்த வர்ணாசிரமக் கட்டமைப்பின் உச்சியில் பிராமணர்கள் இருந்தார்கள். நம்பூதிரியை நாயர் நெருங்கி நிற்கலாம். தொடக்கூடாது. நம்பூதிரியிலிருந்து நாடார், ஈழவர் போன்றோர் 36 அடி தள்ளியும், புலையர் போன்றோர் 90 அடி தள்ளியும் நிற்க வேண்டும். நாயரிடமிருந்து நாடார், ஈழவர் போன்றோர் 12 அடி தள்ளியும், புலையர் போன்றோர் 64 அடி தள்ளியும் நிற்கவேண்டும். இப்படியே நாட்டிலுள்ள 1050 சாதிகளுக்கு இடையிலும் தூரக்கணக்குகள் நிர்ணயிக்கப்பட்டிருந்தன. பிராமணர்கள் கண்ணில் படக்கூடாத சாதிகளும் அன்று இருந்தன... தீட்டுத் தூரத்தை மீறுபவர்கள் மிகக் கடுமையாகத் தண்டிக்கப்பட்டார்கள் "(4) என்று பொன்னீலன் குறிப்பிடுவதை நாம் மனதில் இருத்திக் கொள்ளவேண்டும். திருவிதாங்கூர் சமஸ்தானமானது எப்படி ஒடுக்கப்பட்ட மக்களைத் துன்பத்திற்கும் துயரத்திற்கும் ஆளாக்கி, உழைக்காதவர்களை உச்சாணியில் உட்காரவைத்து மகிழ்ந்தது என்பதற்கு இதைப் போன்ற நிறைய ஆதாரங்கள் இருக்கின்றன. எனவே வைக்கம் போராட்டத்தைப் பற்றி நாம் படிக்கின்ற போது அல்லது விவரிக்கின்ற போது, நமது மனக்கண் முன்னால் திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள், மதத்தின் பெயரால், மனு தர்மத்தின் பேரால் நடைபெற்ற அத்து மீறல்கள் நமக்கு நினைவுக்கு வருகின்றன.

திருவாங்கூர் சமஸ்தானத்தில் 3,4 நூற்றாண்டுகள் மனுதர்மத்தின் அடிப்படையில் ஆரியர்களுக்கு உழைக்காமல் உல்லாசமாக வாழும் வாழ்க்கையையும், விளிம்பு நிலை மக்களுக்கு வேதனை மட்டுமே தரக்கூடிய ஆட்சியே நடந்திருக்கிறது. அப்படிப்பட்ட நிலையில் தான் அந்த சமஸ்தானத்தில் வைக்கம் போராட்டம் நடந்திருக்கிறது.

### வைக்கம் போராட்டம் கோவில் நுழைவுப் போராட்டமா?

வைக்கம் போராட்டம் என்பது கோயில் நுழைவுப் போராட்டம் அல்ல. கோயில் தெருவில் நடப்பதற்கான உரிமை பெறுவதற்கான போராட்டம். "வைக்கம் போராட்டம் என்பது கோவிலிலே நுழைவதற்காக நடத்தப்பட்ட போராட்டம் அல்ல... அது, கோவிலைச் சுற்றி இருந்த தெருக்களிலே தாழ்த்தப்பட்டவர்கள், ஈழவர்கள், தீயர்கள், புலையர்கள் என்று

சொல்லப்படக் கூடியவர்கள் நடக்கக் கூடாது என்று நிலவி வந்த அக்கிரமத்தை எதிர்த்து நடத்தப்பட்ட போராட்டம் ஆகும். வைக்கம் கோவிலைச் சுற்றி இருந்த தெருக்களிலே அவர்கள் நடக்க உரிமை பெற்றவர்களல்லர்; அவர்கள் போனால் தீட்டுப்பட்டு விடும். ஆகவே அவர்கள் ஊரைச் சுற்றிக்கொண்டு தான் போகவேண்டுமென்று நடைமுறைப்படுத்தி வைத்திருந்தார்கள். எனவே தாழ்த்தப்பட்ட -ஒடுக்கப்பட்ட மக்களுக்கு தெருவிலே நடக்க உரிமை வேண்டும் என்பதற்காகத் தான் அந்தப் போராட்டம் தொடங்கப்பட்டது"(5) என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி குறிப்பிடுகிறார்.

இன்றைய இளைஞர்களுக்கு, தெருவிலே நடக்க உரிமை இல்லையா?.. தெருவிலே நடப்பதற்கு யாரிடம் அனுமதி வாங்க வேண்டும்? என்ற கேள்விகள் எழும். ஆனால் திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் நடைபெற்ற சாதிக்கொடுமைகளைப் பற்றிய செய்திகளைப் படித்தால், அதனை அந்த நிலையில் நின்று நாம் உணர்ந்தால் மிகத் தெளிவாக அன்றைய நிலைமை நமக்குப் புரியும். "மேல்சாதியினர் அருகே புலையர்களும், அவர்களைப் போன்றோரும் ஒரு போதும் வரக்கூடாது. வந்துவிடாமல் இருப்பதற்காகப் புலையர்கள் பொதுத்தெருக்களைப் பயன்படுத்தக்கூடாது. மற்றபடி ஒதுக்கிடங்களில் நடக்கும் போது கூட அவர்கள் தங்கள் வருகையைப் பிறருக்கு அறிவிக்கும் வகையில் 'ஹோய் ஹோய் ' எனக் கத்திக்கொண்டே வரவேண்டும். தற்செயலாக மேல்சாதியினர் எதிரே வர நேர்ந்துவிட்டால் பக்கப் பாதைகள் வழி ஓடி மறைந்துவிடவேண்டும். இல்லையெனில் அவர்கள் வெட்டிக் கொல்லப்படுவார்கள்."(6) இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் 1800இல் திருவிதாங்கூர் அரசரின் ஆலோசகராக ஆங்கிலப் பிரதிநிதி ஒருவர் நியமிக்கப்பட்ட பின்பும், அதனைத் தொடர்ந்தும் கொஞ்சம் கொஞ்சம் மாறியது என்பதையும் பொன்னீலன் தனது நூலில் குறிப்பிடுகின்றார்.

இப்படிக் கொடுமையான பல வரலாறுகளைக் கொண்ட, பார்ப்பன மேலாதிக்கம் நிரம்பிய வைக்கத்தில், தெருக்களில் நடக்க உரிமை வேண்டும் என்பதற்காக நடத்தப்பட்ட போராட்டமே வைக்கம் போராட்டம். கேரள மாநில காங்கிரசுக் கமிட்டி தான் வைக்கம் சத்தியாக்கிரகப் போராட்டத்தைத் தொடங்க வேண்டும் என்று திட்டமிட்டு அறிவிக்கின்றது. 01.03.1924 அன்று கேரள காங்கிரசுக் கமிட்டியின் செயலாளர் கே.பி. கேசவ மேனன் தான், கேரள மாநிலம் கோட்டயம் மாவட்டம் வைக்கம் சிவன் கோவிலைச் சுற்றியுள்ள தெருக்களில் ஈழவர்களையும், புலையர்களையும் அத்தெருக்களில் தடையை மீறி அழைத்துச் செல்லும் திட்டமான வைக்கம் போராட்டத்தினை அறிவிக்கின்றார்.

அன்றைக்கு அகில இந்தியக் காங்கிரசுக் கட்சியின் தலைவராக இருந்தவர் காந்தியடிகள். எனவே அவருக்கு வைக்கம் சத்தியாக்கிரகம் போராட்டம் குறித்து விரிவான கடிதத்தை 13.03.1924 அன்று கேரள காங்கிரசுக் கமிட்டி செயலாளர் கே.பி.கேசவ மேனன் அனுப்பி அவரது ஆசிர்வாதத்தை வேண்டுகிறார்.

30.03.1924இல் வைக்கம் சத்தியாக்கிரகம் தொடங்குகிறது. கேரள காங்கிரசுக் கமிட்டியின் ஆதரவோடு தீண்டாமை விலக்கக்குழு என்னும் பெயரில் சத்தியாக்கிரகம் தொடங்குகிறது. போராட்டத்தில் கலந்து கொண்டு தடை செய்யப்பட்ட தெருவுக்குள் நுழைந்த குஞ்சப்பி என்ற புலையர்சமூகப் போராளியும், பாகுலேயன் என்ற ஈழவர்சமூகப் போராளியும் மற்றும் வென்னியல் கோவிந்தன் பணிக்கர் என்ற நாயர்சமூகப் போராளியும் கைது செய்யப்படுகின்றனர். மறு நாளான 31.03.1924-ல் வைக்கம் சத்யாக்கிரகம் நடக்கிறது. மூன்று சமூகப்போராளிகள் கைது செய்யப்படுகிறார்கள்.

01.04.1924-ல் வைக்கம் போராட்டம் விறுவிறுப்பாக நடந்த சூழலில் அதைத் தடுத்து விட காந்தியிடம் வைக்கம் வைதிகர்கள் தூது செல்கின்றனர். மும்பை அந்தேரியிலிருந்து காந்தி கே.பி. கேசவ மேனனுக்கு எழுதிய கடிதத்தில் சத்தியாக்கிரகத்தை சிறிது காலம் நிறுத்தி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறார். வைக்கம் சத்யாக்கிரகம் நிறுத்தப்படுகிறது. இதனைப் பற்றிப் பழ.அதியமான் "போராட்டம் தொடங்கும் முன் 1922-ல் அங்கீகாரமும், 1923-ல் காங்கிரசு மாநாட்டு வழி ஒப்புதலும், 1924-ல் ஆசிர்வாதமும் அளித்த காந்தி, வைதிகர் பேச்சைக் கேட்டுப் போராட்டத்தை ஏன் நிறுத்தி வைக்கக் கூடாது என்று கோரினார் ' (7) என்று குறிப்பிடுகின்றார்.

வைக்கத்தில் சத்யாக்கிரகிகள் போராட்டத்தை ஆரம்பித்த உடனேயே, இதனைத் தடுத்த நிறுத்த விரும்பிய சனாதானிகள், யாரிடம் போய்ச் சொன்னால் இதனை நிறுத்தமுடியும் என்பதனை உணர்ந்து காந்தியாரிடம் போய் சொல்கிறார்கள். சிவராம அய்யர், வாஞ்சேசுவர அய்யர் என இருவர் வந்து முறையிடுவதாக காந்தியார் குறிப்பிடுகின்றார். அவர்கள் சொல்வதில் இருக்கும் நியாயத்தையும் நாம் உணரவேண்டும் என்று சொல்வது போல 'அவர்கள் கூறுவது உண்மையாக இருந்தால், நாம் அவர்களுக்கு இடம் கொடுத்து வேண்டிய உதவிகளைச் செய்யவேண்டும்' (8) என்று குறிப்பிட்டு பஞ்சாயத்து பேசுவதற்கு அன்றைக்கு காங்கிரசில் இருந்த பண்டித மதன் மோகன் மாளவியாவை அனுப்புவதாகச் சொல்கிறார். ஆனால் பின்னால் பண்டித மதன் மோகன் மாளவியா வைக்கத்திற்கே வரவில்லை என்பதனை அறிகின்றோம். தற்காலிகமாக இந்தப் போராட்டத்தை நிறுத்தி வைப்போம் என்ற மன நிலையில் காந்தியார் இந்தப் போராட்டத்தினை நிறுத்த கடிதம் எழுதுகின்றார். அவருடைய கருத்தினை ஏற்று வைக்கம் போராட்டம் நிறுத்தி வைக்கப்படுகிறது.

காந்தியார் அவர்களைப் பொறுத்த அளவில் வைக்கத்தின் தெருக்களிலே ஒடுக்கப்பட்டவர்கள் நடக்க வேண்டும் என்னும் பிரச்சனை இந்து மத சம்பந்தமான பிரச்சனை என்று எண்ணியிருக்கிறார். செயல்பட்டிருக்கிறார். இந்து மதத்தில் இருக்கும் உயர் ஜாதிக்காரர்களை அழைத்து, அவர்களிடம் பேச்சு வார்த்தை நடத்தி, இந்தப் பிரச்சனையை முடிக்க வேண்டும் என்ற எண்ணம் காந்தியாருக்கு இருந்திருக்கிறது. காந்தியாரைப் பொறுத்த அளவில் தீண்டாமை ஒழிய வேண்டும் என்று சொன்னவரே தவிர, சாதி ஒழிய வேண்டும் என்று சொன்னவரல்லர். வர்ணாசிரம அமைப்பு முறை நாட்டிற்குத் தேவை, அது நல்லமுறை என்றும் சொன்னவர் காந்தியார் ஆவார்.

தந்தை பெரியாரைப் பொறுத்த அளவில், மிகச் சிறிய வயதில் இருந்தே அவருக்குச் சாதி, வர்ணாசிரம அமைப்பின் மீதான புரிதல் இருந்திருக்கிறது. சிறு வயதிலேயே சாதியின் பெயரால் புகுத்தப்படும் கட்டுப்பாடுகளை மீறவேண்டும் என்னும் உணர்வு இருந்திருக்கிறது," ஆசிரியர் மேல்சாதி. அவர் வீட்டில் தண்ணீர் வாங்கிக் குடிக்கலாம். பள்ளிக்கு அருகில் உள்ள வேதக்காரர்கள், வணிகர்கள் வீட்டில் தண்ணீர் குடிக்கக்கூடாது. ஏனென்றால் அவர்கள் நமக்கு மட்டமான சாதி '- இப்படிப்பட்ட ஆணைகளோடு ஈ.வெ.ராமசாமி தொடக்கப்பள்ளியில் சேர்ந்தார்.

மேல்சாதி, கீழ்சாதி என்பதை ஏற்றுக் கொள்ள ராமசாமியின் மனம் இடந்தரவில்லை. இம்முறை அநீதியானது என்று அந்த பிஞ்சு உள்ளத்தில் பட்டது. எப்படியோ பல்லைக் கடித்துக் கொண்டு, சில நாட்கள் மட்டும் ஆசிரியர் வீட்டில் தண்ணீர் குடிக்கலாம் என்ற கட்டளைப்படி நடந்து பார்த்தார். அம்முறையை பல நாள் பின்பற்ற முடியவில்லை. ஏன்?... 'நாம் பலரை இழிவுபடுத்த உரிமை கொண்டாடுவதால் சிலர் நம்மை இழிவு படுத்திக் காட்டுகிறார்கள். நாம் யாரையும் இழிவு படுத்தக்கூடாது.

அத்தகைய சமத்துவ நிலையே சரியான நிலை“ இப்படிக் கருதினார். துடுக்குப் பிள்ளை ராமசாமி. அவரது கருத்து செயல்பட்டது. தண்ணீர் அருந்தக்கூடாத வீடுகளுக்குச் சென்றார். அவரே நீரை வாங்கிக் குடித்தார். அதோடு நின்றாரா? இப்புரட்சியை வெளிப்படுத்தினார். பெற்றோரால் தடுக்க முடியவில்லை. ஜாதியொழிப்பு நடவடிக்கை ராமசாமியின் பத்துப்பன்னிரெண்டு வயதிலேயே முளைத்துவிட்டது “(9) என்று கல்வியாளர் நெ.து. சுந்தரவடிவேலு குறிப்பிடுவார்.

எனவே சிறு வயதில் இருந்தே சமூகத்தில் நிலவும் சாதி அமைப்பு முறையைப் பற்றிய தெளிவும், பார்ப்பனர்கள் ஏமாற்றுகிறார்கள் என்னும் தன்மையும் பெரியாருக்குத் தெரிந்திருக்கிறது. வைக்கம் தெருக்களில் ஆடு நடக்கலாம், மாடு நடக்கலாம், பன்றி நடக்கலாம், ஆனால் ஆறறிவு படைத்த மனிதன் நடக்கக்கூடாதா? என்று ஆவேசமாகப் பெரியார் குரல் எழுப்பியதற்குக் காரணம் இந்தப் புரிதலே. எனவே அந்த வகையில் தான் தந்தை பெரியார், திருவாங்கூர் சமஸ்தானத்தில் ஏற்கெனவே உள்ள சாதி அடிப்படையிலான கொடுமைகளை எல்லாம் புரிந்து கொண்டவராக, சாதி ஒழிப்புப் பணிக்கான ஒரு போராட்டத்தில் முழு மனதோடு கலந்து கொள்பவராக வைக்கம் போராட்டக் களத்திற்கு வருகின்றார்.

வைக்கம் போராட்டம் நடந்து முடிந்து 97 ஆண்டுகள் ஆகின்றன. தமிழ்நாடு பாடப்புத்தகங்களில் வைக்கம் வீரர் என்னும் தலைப்பில் தந்தை பெரியார் பற்றிய பாடம் இருக்கின்றது. இந்து மத வலது சாரி அமைப்புகள் இந்தியாவின் பல பகுதிகளில் வேர் ஊன்றிய போதிலும், தமிழ்நாட்டில் வேர் ஊன்ற முடியாமல் தவிக்கின்றனர். ஏன் நம்மால் ஊடுருவ முடியவில்லை, தமிழ்நாட்டில் என்று அவர்கள் யோசித்து, அதற்குக் காரணம் தந்தை பெரியாரின் தத்துவமும் கொள்கையுமே என்று முடிவு செய்தது போல தந்தை பெரியாரைப் பற்றிய பல பொய்யான செய்திகளை ஊடகங்கள் வழியாகப் பரப்புகின்றனர். அதனைப் போல தந்தை பெரியார் தியாகம் ஏதும் செய்யவில்லை, போராட்டங்கள் செய்து கைதாகவில்லை என்று எந்தவிதமான ஆதாரங்களும் இல்லாமல் எழுதிச் சென்றனர். அவற்றின் ஊடாக பெரியார் வைக்கம் போராட்டத்தில் பெரிய அளவில் பங்களிப்பு ஒன்றும் செய்யவில்லை என்று எழுதினர். அதற்கு மறுப்பாக வரலாற்று ஆய்வாளர் பழ.அதியமான் அவர்கள் எழுதியிருக்கும் ‘வைக்கம் போராட்டம்‘ என்னும் நூல் வந்துள்ளமை கவனிக்கத்தக்கது.

‘தி இந்து’ தமிழ் நாளிதழ், வைக்கம் போராட்டம் என்னும் தன்னுடைய நூல் பற்றி வரலாற்று ஆய்வாளர் பழ.அதியமான் அவர்கள் எழுதிய கட்டுரை ஒன்றினை வெளியிட்டது. அந்தக் கட்டுரையில் மிகத் தெளிவாக தந்தை பெரியாரின் பங்களிப்பைப் பற்றி பழ.அதியமான் விவரிக்கின்றார். அந்தக் கட்டுரையின் சில பகுதிகள்:

“வைக்கம் சென்ற 13 ஏப்ரல் 1924 முதல் அவர் தலைமையில் நடைபெற்ற வெற்றி விழா நிகழ்ந்த 29 நவம்பர் 1925 வரையான காலத்தில் பெரியார் போராட்டத்துக்குப் பங்களித்தார்.

**எப்படி நடந்தது போராட்டம்?**

தடைசெய்யப்பட்ட சாலைகளின் தடுக்கப்பட்ட இடங்களில் தினமும் குறைந்தது மூன்று பேர் சத்தியாகிரகம் செய்வர். 604 நாள்களில் போராட்டம் நிகழ்ந்தது. பல நாள் பெரியார் தலைமை தாங்கினார். போலீஸாரின் தடியடியும் வாயடியும் குறைவின்றி நிகழ்ந்தன. வைதிகர் ஏற்பாடு செய்த அடியாள்களின் அக்கிரமங்களுக்கும் குறைவில்லை. சத்தியாகிரகிகளின் கண்ணில் சுண்ணாம்பைப் பூசிய சம்பவங்களும் நிகழ்ந்தன. மக்கள் ஆதரவைத் திரட்ட வைக்கத்தைச் சுற்றிலும் கிராமங்களிலும் சேர்த்தலை, வர்க்கலை, கோட்டயம் போன்ற நகரங்களிலெல்லாம் ஓயாமல்

பிரச்சாரம் செய்தார் பெரியார். தெற்கே திருவனந்தபுரம், நாகர்கோவில் வரை அவரது பிரச்சாரப் பயணம் நீண்டது. மக்களிடமும் வியாபாரிகளிடமும் நிதி வசூலித்தார்.

வைக்கம் சத்தியாகிரகத்தை அகில இந்திய இயக்கமாக்கக் கேரளத் தலைவர்கள் கோரிய போது காந்தி இணங்கவில்லை. இயக்கம் பலவீனமாகிறதே என்று அவர்கள் வற்புறுத்திய போது அதைச் சாகவிடாமல் சென்னை மாகாணத்தவர் பார்த்துக் கொள்வார்கள் என்று சொல்லிவிட்டார். எனவே, பெரியார் உட்பட தமிழ்நாட்டுத் தலைவர், தொண்டர்களின் பங்களிப்புக்குக் காந்தியின் பொது அனுமதி இருந்தது எனக் கருதலாம். இத்தகைய வெளியார் உதவியின் இன்றியமையாமையை காந்தியை விடவும் சமஸ்தான ரெசிடெண்ட் சி.டபிள்யூ.இ. காட்டன் சரியாக உணர்ந்திருந்தார்: "சாலையை அனைவருக்குமாகத் திறப்பது என்ற பிரச்சினை உள்ளூர் சம்பந்தப் பட்டதாகவே இருப்பினும், வெளியிலிருந்து மட்டும் இதற்கு உதவி வராதிருந்தால் உண்மையில் இந்த இயக்கம் எப்போதோ பிசுபிசுத்துப் போயிருக்கும்" என்று 21 ஏப்ரல் 1924 அன்றைய குறிப்பில் அவர் சொல்கிறார்.

பிந்நாளில் 1980-களில் வைக்கம் போராட்டத்தைப் பற்றிய முதல் ஆய்வு நூலை எழுதிய கேரள வரலாற்றுப் பேராசிரியர் டி.கே.ரவீந்திரன் "பெரியாரின் வரவினால் இயக்கத்திற்குப் புதிய உயிர் கிடைத்தது" என்று பதிந்துள்ளார். மிகச் சமீபத்தில், காந்தியின் அகிம்சை தொடர்பில் வைக்கம் போராட்டத்தை ஆய்வுசெய்து அமெரிக்க ஆய்வாளர் மேரி எலிசபெத் கிங் நூல் ஒன்றை எழுதியுள்ளார். அவருக்கு கேரளாவின் புகழ்வெற்ற பேராசிரியரான கே.கே. குசுமான் (1943-2007) அளித்த நேர்முகத்தில் "ஒடுக்கப்பட்டவர்களின் தலைவராக இந்தியா முழுவதும் அறிமுகமாகியிருந்த பெரியார் தன் வெடிப்புறப் பேசும் திறனால் இக்கட்டான நேரத்தில் போராட்டத்தை வளர்த்தெடுத்தார்" என்று விவரித்துள்ளார்.

**என்ன செய்தார் பெரியார்?**

அரசினரும் கேரளரும் மெச்சும்படியாக வைக்கத்தில் பெரியார் என்ன தான் செய்தார்? மக்கள் ஆதரவைத் திரட்டும் பிரச்சாரமே அவரது முதன்மையான பணி. "நாடு என்ன உங்கப்பன் வீட்டுச் சொத்தா? நாட்டைப் பத்மநாப சுவாமிக்கு அர்ப்பணித்து விட்ட பிறகு, நாடே கோயில் சொத்து தானே!" என்று மன்னரைப் பார்த்துப் பேசினார் பெரியார். மன்னர் திருமனசைப் பாராட்டலாமே தவிர எதிர்த்துப் பேசுவது கூடாது என்பது திருவாங்கூர் சமஸ்தான சம்பிரதாயம்.

கிறிஸ்தவரும் முஸ்லிம்களும் அந்தத் தெருவில் நடக்கலாம். இந்துவான ஈழவர் நடக்க அனுமதி இல்லை. இந்த முரண் ஏன் என்பது சத்தியாகிரகிகளின் வாதங்களுள் ஒன்று. அதற்குப் பதில் அளித்த அதிகாரிகள், அவர்களையும் வேண்டுமானால் தடுத்துவிடுகிறோம் என்று கூறினர். இதைக் கிண்டல் செய்தார் பெரியார். "நாங்கள் பசியாக இருக்கிறோம் என்று சொன்னால், பசியாக இருக்கிறோம் என்று நீங்கள் ஏன் சொல்கிறீர்கள் என்றால், மற்றவர் சாப்பிடுவதை நீங்கள் பார்க்கிறீர்கள் என்று அரசாங்கம் சொல்கிறது. அவர்கள் சாப்பிடும் உணவைப் பறித்து விடுகிறோம் என்கிறது" என்றார்.

ஈழவரின் மீதான தீண்டாமையை மறுத்துப் பேசும் போது பெரியார் பின்வருமாறு பேசினார். "உடம்பின் கழிவுகளைச் சுத்தப்படுத்துவது போன்ற குறிப்பிட்ட பணிகளுக்காக இடது கை பயன்படுகிறது. ஒவ்வொரு கைக்கும் தனித் தந்தை, தாய் உண்டா? இடது கையைத் தொடும் போதெல்லாம் வலது கை குளித்து முழுக வேண்டும் என்று நினைக்கிறதா? நாம் கடவுளைத் தொழும்போது வலது கையுடன் மட்டும் செல்கிறோமா? கோயிலுக்குச் செல்லும் போது நமது இடது கையை விட்டுவிட்டுச் செல்கிறோமா? வலது பக்கம் இடது பக்கத்தை விட உயர்வானது

என்றால் இடது கண்ணால் நம்மைப் பார்ப்பவரைக் குற்றம் சொல்லுகிறோமா அல்லது வலது காலால் உதைபடும்போது சந்தோஷப்படுகிறோமா?" என்று சாதாரண மக்களுக்கும் புரியும்படியாகப் பேசினார் பெரியார்.

தீண்டாமையைக் கண்டித்து இவ்வளவு வேகமாகப் பேசியோர் தமிழ்நாட்டிலிருந்து சென்ற தலைவர்களான பெரியாரும் கோவை அய்யாமுத்துவும் தான். கிளர்ச்சிக்காரர் அனைவரையும் சிறைப்படுத்த அரசாங்கம் முயன்றது. வைக்கம் வந்த பதினைந்து நாட்களுக்குள் பெரியார் பேசுவதற்குத் தடை விதிக்கப்பட்டது. கோட்டயம் மாவட்டத்துக்குள் பிரவேசிக்கவும் தடை போடப்பட்டது. பின்னர், அந்தத் தடை கொல்லம் மாவட்டத்துக்கும் நீண்டது. எந்தத் தடையையும் மதிக்காமல் பெரியார் தொடர்ந்து பிரச்சாரத்தில் ஈடுபட்டார், சமஸ்தானம் முழுவதும் பிரசாரப் பயணம் மேற்கொண்டார். அரசாங்கம் பொறுக்க முடியாமல் ஒருகட்டத்தில் அவரைக் கைது செய்தது. நீதிமன்ற விசாரணையும் வைக்கத்தில் நிகழ்ந்தது. "இந்த நீதிமன்றம் நியாயம் செய்யும் என்ற நம்பிக்கை இல்லை. விசாரணை வெறும் வேஷம். நீதிமன்றத்துடன் ஒத்துழைக்க முடியாது" என்று அறிவித்ததோடு, "சமாதானம் உண்டு பண்ணவே நான் வைக்கத்துக்கு வந்தேன், எவ்விதமான தண்டனை விதித்தாலும் ஏற்கத் தயார்" என்றும் நீதிமன்றத்தில் தெரிவித்தார் பெரியார். இதையடுத்து நீதிமன்றம் 22 மே 1924-ல் ஒரு மாத வெறுங்காவல் தண்டனை அளித்தது. அருவிக்குத்தியில் பெரியார் அத்தண்டனையை அனுபவித்தார்.

### அடுத்தடுத்த சிறைத் தண்டனைகள்:

சிறையிலிருந்து விடுதலை அடைந்த பெரியார் மீண்டும் நேராக வைக்கம் போனார். ஈரோட்டுக்குச் செல்வார் என்று எதிர்பார்த்த அரசாங்கம், ஏமாற்றமும் கோபமும் அடைந்தது. "கோட்டயம் மாவட்டத்திற்குள் நுழைவதற்குத் தடை அமலில் இருக்கும்போது அவரை வைக்கத்திற்குள் நுழைய ஏன் அனுமதித்தீர்கள்?" என்று மாவட்டக்காவல் துறைக் கண்காணிப்பாளரை மாவட்ட மாஜிஸ்டிரேட் கடிந்துகொண்டார். ஆனால், அரசாங்கம் உடனே கைது செய்யவில்லை.

அரசாங்கத்தின் அச்சுறுத்தலைப் பொருட்படுத்தாமல் பெரியார் தொடர்ந்து பிரச்சாரத்திலும் போராட்டத்திலும் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். ராட்டையைப் போராட்டக் களத்தில் கொண்டு செல்வதில் காவல் துறைக்கும் சத்தியாகிரகிகளுக்கும் பிரச்சினை எழுந்த போது பெரியார் அதைத் தீர்த்து வைத்தார். தொடர்ந்து அவரை அரசாங்கம் வெளியில் விட்டுவைக்கவில்லை. முதல் சிறைவாசம் முடிந்து விடுதலையான 27-வது நாள் (18 ஜூலை 1924) மீண்டும் கைது செய்தது. இந்த முறையும் பெரியார் நீதிமன்றத்துடன் ஒத்துழைக்க மறுத்தார். முதல் முறை உபாயமான தண்டனை விதித்தும் 'எதிரி' திருந்தவில்லை என்பதாலும், இரண்டாம் தடவையாக அரசு உத்தரவை மீறி நடந்திருப்பதாலும் நான்கு மாதக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

இம்முறை ஆறுக்குத்திச் சிறையில் பெரியாரை அடைக்கவில்லை. மற்ற சத்தியாகிரகிகள் இருந்த திருவனந்தபுரத்துக்கும் அனுப்ப அரசாங்கம் விரும்பவில்லை. கோட்டயம் மாவட்டச் சிறையில் அடைக்க விரும்பியது. அதற்காக வைக்கத்திலிருந்து புறப்பட்ட படகு, 20 மைல் தூரத்துக்குப் பிறகு பெருமழை, புயல் காரணமாக மேலும் போக முடியாமல் திரும்பிவிட்டது. வைக்கம் காவல் நிலையச் சிறையில் சில நாள் வைத்திருந்து பின் திருவனந்தபுரம் மத்தியச் சிறைக்கே அனுப்பி வைத்தது அரசாங்கம்.

திருவனந்தபுரம் மத்தியச் சிறையிலிருந்த கே.பி. கேசவ மேனன், ஜார்ஜ் ஜோசப் உள்ளிட்ட சத்தியாகிரகிகள் அனைவரும் அரசியல் கைதிகளாகக் கருதப்பட்டு மரியாதையுடன் நடத்தப்பட்டனர்.

ஆனால், பெரியார் அவ்வாறு நடத்தப்படவில்லை. 'கால்களில் விலங்குச் சங்கிலி, தலையிலே கைதிகள் அணியும் ஒரு குல்லாய், முழங்காலுக்குக் கீழே தொங்குகிற ஒரு வேட்டி, கழுத்தில் கைதி எண் குறிக்கப்பட்ட மரப்பட்டை. இவற்றுடன் ஈ.வெ.ராமசாமி கொலைகாரர்களோடும் கொள்ளைக்காரர்களோடும் வேலை செய்துகொண்டிருந்தார். தண்டனை அடைந்த ஒரு சாதாரண கைதி ஒரு நாளைக்கு எவ்வளவு வேலை செய்வானோ அதைவிட இருமடங்கு வேலை செய்கிறார்." இது பெரியாருடன் சிறையிருந்த கே.பி. கேசவ மேனனின் நேரடி சாட்சியம்.

பெரியாருக்கு இழைக்கப்பட்ட இந்தக் கொடுமையைப் பொறுத்துக் கொள்ள இயலாத கேசவ மேனன், பெரியாருக்கு அரசியல் கைதி அந்தஸ்து அளிக்குமாறு சிறையிலிருந்தே அரசாங்கத்திடம் வேண்டிக்கொண்டார். எனினும், விடுதலை அடையும் வரை அதற்குப் பதில் வரவில்லை என்று தன் வாழ்க்கை வரலாறான 'கடந்த கால'த்தில் குறித்துள்ளார்.

**பெரியாருக்கு ஆதரவாக ராஜாஜி:**

பெரியாரின் நிலை ராஜாஜியையும் வருத்திற்று. பெரியாருக்கு ஆதரவாக அரசாங்கத்தைக் கண்டித்துப் பத்திரிகையில் எழுதினார் அவர். ஈ.வெ. ராமசாமி நாயக்கரைக் கடுங்காவல் தண்டனையில் வைத்திருப்பதும், இரும்பு விலங்கிட்டிருப்பதும், அவருக்குச் சிறை உடை அணிவித்திருப்பதும், மற்ற சத்தியாகிரகிகள் சரியாகப் பெற்றுள்ளவற்றை அவருக்கு மறுப்பதும் நியாயப்படுத்தவே முடியாதவை என்று 'தி இந்து' ஆங்கில நாளிதழில் எழுதியிருந்தார் ராஜாஜி (27 ஆகஸ்ட் 1924). இந்தச் சமயத்தில் பெரியாருக்கு ராஜாஜி சூட்டிய புகழாரம் முக்கியமானது. "ஈ.வெ.ராமசாமி நாயக்கர் ஒரு தளர்வுறாத ஆன்மா. செல்வ வளத்தின் மகிழ்ச்சிகளையும் பதவிகளையும் வெறுத்து ஒதுக்கித் தள்ளிவிட்டு கடினமான இந்தப் பாதையைத் தேர்ந்தெடுத்துள்ளார். பெரும்பாலான நம்மைப் போல அல்ல; உண்மையிலேயே!"

திரு.வி.க.வும் இக்கொடுமையைச் சாடினார். "திருவாங்கூர் அரசாங்கம் ஒரு சத்தியாகிரகியை இவ்வாறு துன்புறுத்துவது தருமமோ என்று கேட்கிறோம்" என்று மனம் நொந்தார் திரு.வி.க.

**சிறை தளர்த்த முடியாத வீரர்:**

இரண்டாம் முறையாகச் சட்டத்தை மீறியிருப்பதால் தனிச்சலுகை எதுவும் அவருக்கு வழங்க வேண்டாம் என்ற மாவட்ட மாஜிஸ்டிரேட்டின் கருத்துக்குள் ஒளிந்துகொண்டு அரசாங்கம் விடுதலை வரை துன்புறுத்தியது. புதிய அரசாங்கம் பொறுப்பேற்றதையடுத்து 30 ஆகஸ்ட் 1924 அன்று பெரியார் உட்பட 19 சத்தியாகிரகிகள் விடுவிக்கப்பட்டனர். விதிக்கப்பட்டிருந்த கடுந் தண்டனைக்காக கேரளமும் தமிழ்நாடு வருந்த, விடுதலையான பெரியாரோ, நாகர்கோவிலில் பேசும்போது, "நான் சிறையில் பட்ட கஷ்டத்திற்காக யாரும் வருந்த வேண்டாம். விடுதலை தான் என்னை வருத்தப்பட வைத்துவிட்டது" என்று வேதனையையும் வேடிக்கையாக எதிர்கொண்டார்.

அடுத்து பெரியார், கே.பி. கேசவ மேனன் உள்ளிட்டோர் ஓர் அறிக்கையை வெளியிட்டனர். "பொதுச்சாலைகளில் எல்லோரும் நடமாடலாம் என்பதை அனுமதிப்பதற்குரிய அறிகுறியாகவே எங்கள் விடுதலையைக் கொள்கிறோம். அப்படி நடக்காவிடில் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவோம்" என்று அவ்வறிக்கையில் தெரிவித்தனர். இவ்வறிக்கை மூலம் அரசின் விடுதலையைச் சலுகையாக ஏற்காமல் அதையும் ஒரு நிபந்தனையாக மாற்றினர் சத்தியாகிரகிகள். கேட்டிலும் துணிந்து நின்றார் பெரியார்.

ஒன்றரை மாதங்களுக்கு மேல் சிறையிருந்த பெரியார், இந்த விடுதலைக்குப் பிறகும் வீட்டுக்குத் திரும்பவில்லை. வைக்கத்துக்கே சென்று போராட்டத்தைத் தொடர்ந்தார். நெடுங்கணா, நாகர்கோவில் போன்ற ஊர்களில் பத்து நாள் வரை

பிரச்சாரம் செய்துவிட்டு, ஈரோட்டுக்கு செப்டம்பர் 10-ம் தேதி திரும்பினார். காத்திருந்தது போல் சென்னை மாகாணக் காவல் துறை 11-ம் தேதி பெரியாரைக் கைது செய்தது. இந்தக் கைது ஆறு மாதம் முன்பு மயிலாப்பூரில் பேசிய அரசு விரோதப் பேச்சு ஒன்றுக்கானது. வேறு அரசாங்கத்தால், வேறு காரணத்துக்காக, வேறிடத்தில் கைது நிகழ்ந்திருப்பினும் அவரை மீண்டும் வைக்கத்துக்குச் செல்ல ஒட்டாமல் தடுப்பதே நோக்கம் என்று ஊகிக்கலாம். எது எப்படியோ வைக்கத்துக்கு உடனடியாகச் செல்லவிடாமல் இந்தக் கைதும் வழக்கும் அவரைத் தடுத்துவிட்டன.

பெரியார் வைக்கத்தில் இருந்த காலத்திலும் சரி, பிறகும் சரி, போராட்டம் கடும் நெருக்கடிகளைச் சந்தித்தது. பண நெருக்கடி அதில் முதலாவது. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி, பெரியார் வழியாக ரூ.1000 கொடுத்தது. மற்ற பிரச்சினைகளை ஆலோசித்து முடிவெடுக்க பல ஆலோசனைக் கூட்டங்கள், சமாதானத் தூதுகள், பிரச்சாரக் குழுக்கள், மகளிர் அணிகள் அவ்வப்போது உருவாயின. அவை பலவற்றில் பெரியாரும் நாகம்மையாரும் இடம்பெற்றிருந்தனர். இவ்வகையில் திவானைச் சந்தித்து சமாதானம் பேச ஏற்பட்ட எட்டுப் பேர் கொண்ட குழுவில் பெரியாரும் ஒருவர்.

பெரியார் வைக்கத்தில் போராடிக் கொண்டிருந்த காலத்தில் அங்கு வந்த தலைவர்கள் அனைவரும் அவரைக் கலந்தாலோசித்தனர். ஆரிய சமாஜத் தலைவர் சிரத்தானந்தர் போராட்டம் நலிவுற்றிருந்த ஒரு கட்டத்தில் அதை எடுத்து நடத்தவும் ஒப்புக்கொண்டார். ராஜாஜி வைக்கம் வந்த போது காவல் நிலைய சிறையில் இருந்த பெரியாரைச் சந்தித்த பிறகே ஆசிரமம் சென்றார். வரதராஜுலு நாயுடு, எஸ்.சீனிவாச ஐயங்கார், டி.எஸ்.சொக்கலிங்கம் போன்றோர் சத்தியாகிரக ஆசிரமத்தில் அவரைச் சந்தித்தனர். காங்கிரஸ் தலைவர் சி.வி.வேங்கட ரமண அய்யங்கார் பெரியாருடன் பிரச்சினைக்குரிய சாலைகளைப் பார்வையிட்டார். ஆக இந்திய, தமிழ்நாட்டுத் தலைவர்கள் பலரும் பெரியாருடன் போராட்டம் குறித்து விவாதித்தனர்.

**காந்தி - பெரியார் சந்திப்பு:**

போராட்டத்தின் நிறைவுக் கட்டத்தில் வைக்கம் வந்த காந்தியுடனும் பெரியார் தொடர்பில் இருந்தார். டெல்லியிலிருந்து சென்னை வழியாக வந்த காந்தியை ஈரோட்டில் (8 மார்ச் 1925) வரவேற்றுவிட்டு, வர்க்கலையில் (12 மார்ச் 1925) அவரோடு இணைந்து கொண்டார். அதேபோல், நாராயண குருவைச் சந்தித்த காந்தியுடனான சிறு குழுவில் அவர் இருந்ததையும் காவல் ஆணையர் பதிவுசெய்துள்ளார். பெரியாரைக் கலந்தாலோசித்த பிறகே ராணியாரைக் காந்தி சந்தித்துப் பேசியதாகப் பலவிடங்களில் பிற்காலத்தில் தெரிவித்துள்ளார் பெரியார்.

வைக்கம் வருகையின்போது காவல் துறை ஆணையருடன் காந்தி மேற்கொண்ட ஓர் ஒப்பந்தத்தின் விளைபயனாய், ஓராண்டுக்கு முன்னால் பெரியாருக்கு விதிக்கப்பட்டிருந்த தடை விலக்கிக் கொள்ளப்பட்டது. 'ஈ.வெ. ராமசாமி நாயக்கருக்கு விரோதமாகப் பிறப்பித்த தடை உத்தரவைத் திருவாங்கூர் கவர்ன்மென்டார் வாபஸ் வாங்கிக் கொண்டு விட்டார்கள் என்பதைக் கேட்க வாசகர்கள் சந்தோஷமடைவார்கள்" என்று காந்தி 'யங் இந்தியா'வில் (23 ஏப்ரல் 1925) தன் மகிழ்ச்சியைப் பகிர்ந்தார்.

**மனைவியுடன் களம் சென்றார்:**

காங்கிரஸின் தமிழ்நாட்டுத் தலைவராகவே பெரியார் போராட்டத்தில் கலந்துகொண்டார். தனிப்பட்ட முறையில் அல்ல; அவர் வழியாகவே தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி ஆயிரம் ரூபாயைப் போராட்டத்துக்கு அனுப்பியது. கிடைக்கும் பெயர் விவரப்படி, 50 பேர் அளவிலான தொண்டர்களுடன் சென்று அவர் அங்கு போராடினார். தன் குடும்பத்தையும்

போராட்டத்தில் ஈடுபடுத்தினார். 15 மே 1924-ல் வைக்கம் வந்த நாகம்மையார், தொடர்ந்து நான்கு மாதம் சுற்றுப்பயணம் செய்ததற்கு ஆதாரங்கள் கிடைக்கின்றன. நாகர்கோவில் தலைவர்கள் சிலரும் குடும்பத்துடன் வைக்கம் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதில் மிக முக்கியமான செய்தி, பெரியார் தன் வாழ்வின் நடுப்பகுதியில் வைக்கத்தில் 74 நாட்கள் சிறையிலும், 67 நாட்கள் வெளியிலுமாக 141 நாட்களைப் போராட்டத்துக்காகச் செலவிட்டார் என்பதாகும்.

ஆலோசகர் காந்தி, கொள்கை அடிப்படையில் போராட்டத்தில் ஈடுபட்ட அயல் மதத்தவரை வெளியேற்றினார், சத்தியாகிரகிகள் மேற்கொண்ட உண்ணாவிரதத்தை நிறுத்தினார், அகாலியர் நிறுவியிருந்த தரும உணவுச்சாலையை மறுத்தார், அயலிலிருந்து தொண்டர்களோ நிதியோ வருவதைத் தடைசெய்தார். இப்படியான காந்தியின் அறிவுறுத்தல்களால் போராட்டம் பல இன்னல்களைச் சந்தித்தது, இரு முறை சத்தியாகிரகிகள் நேரடியாகச் சென்று அவரிடம் முறையிட்டனர். இயக்கமும் பலவீனப்பட்டு வந்தது. எனினும், ஜார்ஜ் ஜோசப் தவிர, பொதுவெளியில் காங்கிரஸ்காரர் எவரும் எதிர்ப்பேச்சு பேசவில்லை, பெரியாரும் பேசவில்லை. ஓர் உண்மை சத்தியாகிரகியாகவே களத்தில் அவர் விளங்கினார். பின்னாளில் கருத்து வளர்ச்சியும், அதனால் பார்வை மாற்றமும் நேர்ந்த நிலையில் பெரியார் காந்தியின் அறிவுறுத்தல்களை விமர்சித்தார். சத்தியாகிரகத்தை நிறுத்திவிடவே காந்தியும் இராஜாஜியும் விரும்பினர் என்று இதே அறிவுறுத்தல்களையே காட்டி விமர்சித்தார்.

**தீர்வு தந்த போராட்டம்**:

எப்படியோ நவம்பர் 1925-ல் போராட்டம் - பெரியாருக்கு ஏன் காந்திக்கும் தான் - முழு மகிழ்ச்சியைத் தராத, நான்கில் மூன்று தெருக்களில் மட்டும் அனுமதி என்ற ஒருவகை சமாதானத்துடன் முடிவுக்கு வந்தது. சத்தியாகிரகத்தின் வெற்றி விழாவுக்குத் தலைமை தாங்க பெரியாரைக் கேரளா அழைத்தனர். அயலிலிருந்து கலந்துகொண்ட ஒரே தலைவர் பெரியார் மட்டுமே. சத்தியாகிரகத்தின் வெற்றியைப் பற்றியும் தோல்வியைப் பற்றியும் பேசுவதற்கு அதற்குள் காலம் வந்துவிடவில்லை. தெருவில் நடக்க உரிமை கேட்டவர்களைச் சிறைக்கு அனுப்பிய அரசாங்கம், தெருவில் நடப்பதற்கு இப்போது கையைப் பிடித்து அழைத்துச் செல்ல முன்வந்திருப்பதைப் பார்த்தால் சத்தியாகிரகத்துக்கும் மகாத்மாவுக்கும் எவ்வளவு சக்தி இருக்கிறது என்பது விளங்குகிறது என்று பெரியார் வியந்தார் (குடிஅரசு, 6 டிசம்பர் 1925).

போராட்டத்தின் வெற்றிவிழாவைப் பெரியாரின் தலைமையில் கொண்டாடியது மிக முக்கியத்துவமுடைய செய்தியாகும். கேரளர்கள் நன்றி மறக்காதவர்கள். இன்றும் வைக்கத்தில் கேரளர்கள் நன்றியைத் தெரிவிக்கும் விதமாக கொண்டாடப்படுகிறது பெரியார் சிலை.".[9] வைக்கம் போராட்டத்தில் தந்தை பெரியாரின் பங்களிப்பைக் குறைத்தும், அவதூறுகளைப் பரப்பியும் வந்தவர்களுக்கு, வரலாற்று ஆய்வாளர் பழ.அதியமான் அவர்களின் 'வைக்கம் போராட்டம்' என்னும் புத்தகம் சரியான பதிலடியை ஆதாரங்களோடு கொடுத்திருக்கிறது என்பது பாராட்டுக்குரியது.

தெருக்களில் நடக்கவேண்டும் என்பதற்காக நடந்த மாபெரும் மனித உரிமைப் போராட்டம், வைக்கம் போராட்டம். வைக்கம் போராட்டத்தில் ஈடுபட்ட தந்தை பெரியார் அவர்களும், காந்தியடிகள் அவர்களும் தங்களுடைய வாழ்க்கை முழுவதும் நடத்திய போராட்டங்களுக்கு முன்னோடியாக, முன்னோட்டமாக வைக்கம் போராட்டத்தை எடுத்துக்கொண்டார்கள் எனலாம். தந்தை பெரியார் அவர்களைப் பொறுத்த அளவில், வைக்கம் போராட்டத்திற்கு முன்னரே நடைபெற்ற ஒத்துழையாமை இயக்கப் போராட்டம்,

கள்ளுக்கடை மறியல் போன்ற போராட்டங்களில் ஈடுபட்டிருக்கிறார். இன்னும் கேட்டால், தான் கலந்து கொள்வது மட்டுமல்ல, போராட்டங்களில் அந்தக் காலகட்டத்திலேயே தன்னுடைய குடும்பத்துப் பெண்களையும் கலந்து கொள்ளச் செய்யும் பெரும்பண்பு பெரியாரிடம் இருந்திருக்கிறது. அப்படித்தான் கள்ளுக்கடை மறியலில் பெரியாரின் மனைவி நாகம்மையாரும், தங்கை கண்ணம்மாவும் ஈடுபட்டார்கள் என்பதுவும், ஈரோட்டில் கள்ளுக்கடை மறியலைக் கைவிடவேண்டும் என்று காந்தியாரிடம் கேட்டபோது கள்ளுக்கடை மறியலைத் தொடர்வதா நிறுத்துவதா என்பதைப் பற்றி முடிவு செய்ய வேண்டியவர்கள் ஈரோட்டிலுள்ள நாகம்மாள், கண்ணம்மாள் என்னும் இரு பெண்மணிகளே ஆவர் என்று காந்தியடிகள் கூறியதும் நாம் அறிந்ததே.

வைக்கம் போராட்டத்தில் தந்தை பெரியார் மேற்கொண்ட அணுகுமுறை, போராட்டமும், பிரச்சாரமும் இணைந்த அணுகுமுறையாகும். காந்தியடிகளும் மற்றவர்களும் வைக்கம் போராட்டத்தைத் தொடர்ந்து அரசியல் விடுதலையைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தபோது சமூக விடுதலையைப் பற்றிப் பேசியவர்கள் தந்தை பெரியாரும் அண்ணல் அம்பேத்கரும் ஆவர். சமூக விடுதலைக்கான போராட்டத்திற்கான வழிமுறை, பிரச்சாரமும் போராட்டமும் இணைந்த வழிமுறை என்னும் தந்தை பெரியாரின் பிந்தைய வழிமுறைக்கு அடித்தளமாக அமைந்தது வைக்கம் போராட்டம் எனலாம். வைக்கம் போராட்டத்திற்குப் பின்னால் சுயமரியாதை இயக்கம் ஆரம்பித்த பின்பும், நீதிக்கட்சியில் இருந்தபோதும், திராவிடர் கழகம் ஆரம்பித்த பின்பும், நடத்திய போராட்டங்கள் அனைத்தும் வன்முறை இல்லாமல் அகிம்சை வழியில் நடத்தப்பட்ட போராட்டங்களே. எனவே இந்தப் போராட்டங்களுக்கு எல்லாம் அடிப்படையாகத் தந்தை பெரியாருக்கு வைக்கம் போராட்டம் அமைந்தது எனலாம்.

அரசியல் போராட்டங்கள் உலகம் முழுவதும் நடைபெற்றிருக்கின்றன. வன்முறையாலும் அந்தப் போராட்டங்கள் வெற்றி பெற்றிருக்கின்றன. ஆனால் சமூக விடுதலைக்கான போராட்டம் என்பது எதிராளியின் மனச்சாட்சியோடு நடத்தும் போராட்டம். நாம் செய்தது எவ்வளவு பெரிய பிழை என்று எதிராளியை எண்ண வைக்கும் போராட்டம். சாத்திரத்தின் பெயரால், ஜாதியின் பெயரால் சக மனித உயிர்களுக்கு எவ்வளவு பெரிய கொடுமையை நாம் செய்து கொண்டிருந்தோம் என்று உணர வைக்கும் போராட்டம். தந்தை பெரியார் தன் வாழ்நாள் முழுவதும் இந்தப் போராட்டத்தைத் தான் நடத்தினார். ”பெண்களுக்கான உரிமை என்று வருகின்ற போது ,ஆண்களே, உங்கள் மனைவிமார்களை நினைத்துக்கொண்டு யோசிக்காதீர்கள். உங்கள் அம்மாவை, உங்கள் அக்காவை, உங்கள் தங்கையை, உங்கள் மகளை நினைத்துக்கொண்டு யோசியுங்கள். அவர்கள் படும் இன்னல்களை எண்ணுங்கள். பெண் உரிமை எவ்வளவு தேவை என்பது உங்களுக்குப் புரியும்” என்னும் கருத்துப்பட கூறியதைப் போல தந்தை பெரியாரின் அணுகுமுறைக்கு அடித்தளமாக அமைந்தது வைக்கம் போராட்டம் எனலாம்.

1927, மார்ச்20 இல் அண்ணல் அம்பேத்கர் நடத்திய மகத் சத்யாக்கிரகம் இந்திய வரலாற்றில் புகழ் வாய்ந்த போராட்டமாகும். வைக்கம் தெருவில் நடப்பதற்கு போராட்டமென்றால், மகரில் பொதுக் குளமான சவுகார் குளத்தில் நீர் குடிக்கும், எடுக்கும் போராட்டமாகும். அந்தப் போராட்டத்திற்கான உத்வேகத்தை வைக்கம் போராட்டத்தில் இருந்து பெற்றதாக அண்ணல் அம்பேத்கர் கூறியிருக்கிறார்.

"தீண்டப்படாத வகுப்பினரின் போராட்டம் தொடர்பாக ஈடு இணையற்ற

நிகழ்ச்சி 1925ல் நடைபெற்றது. திருவிதாங்கூர் ராஜ்யத்தில் வைக்கத்தில் சில வீதிகளில் தீண்டப்படாதவர்கள் நுழையக்கூடாது என்று தடுக்கப்பட்டிருந்தனர். இந்த வீதிகளில் நடப்பதற்கான உரிமையை நிலை நாட்டிய பார்ப்பனர் அல்லாதார் தலைவரான ராமசாமி நாயக்கரின் தலைமையில் சத்தியாக்கிரகப் போராட்டம் நடைபெற்றது. அந்த அறப்போராட்டம் விளைவித்த சிந்தனைத் தாக்கமும், தன்னுரிமை உணர்ச்சிப் பெருக்கமும் பரவலாக மிகப்பெரிய விளைவை ஏற்படுத்தின. இதனால் வைதீக இந்துக்களும் கூட ஓரளவு சமத்துவ உரிமை உணர்வையும் பெருந்தன்மையையும் பெற்றதால் தீண்டப்படாதவர்களுக்குத் தடை செய்யப்பட்டிருந்த வீதிகளைத் திறந்துவிட்டனர்.

அதே நேரத்தில் மற்றொரு நிகழ்ச்சியும் நடைபெற்றது. பொறுப்புள்ள ஜாதி இந்துக்களையும் சுயமரியாதை உணர்வுள்ள தீண்டப்படாதவர்களையும் இந்நிகழ்ச்சி உலுக்கியது. 1926 மார்ச் மாதம் சென்னையில் முருகேசன் என்கிற தீண்டப்படாதவர், இந்துக் கோயிலினுள் நுழையக்கூடாது என்ற தடையை மீறியதற்காக கைது செய்யப்பட்டு கோயிலின் புனிதத்தைக் கெடுத்தார் என்பதற்காகத் தண்டிக்கப்பட்டார்.

அம்பேத்கர் இந்த நிகழ்ச்சிகளைக் கூர்ந்து கவனித்து வந்தார். மகத் சத்தியாக்கிரகம் தொடங்கவிருந்த போது எழுதிய ஆசிரியவுரை ஒன்றில் வைக்கம் சத்தியாக்கிரகம் பற்றி நெஞ்சம் நெகிழ்ந்து அவர் எழுதினார். இவை குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள். இனி நடக்கவிருக்கும் நிகழ்ச்சிகளுக்கு இவை முன்னோடிகள். (டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் வாழ்க்கை வரலாறு, தனஞ்சய் கீர் தமிழில் க.முகிலன் பக்.87–88)

அமராவதி கோயில் நுழைவுப் போராட்டத்துக்கான இறுதி முடிவு (1927 நவம்பர்), சவுகார் குளத்தில் தண்ணீர் எடுக்கும் போராட்டம் (1927 டிசம்பர்), பார்வதி கோயில் நுழைவு (1929 அக்டோபர்), நாசிக்கில் உள்ள காலாராம் கோயில் நுழைவு (1930) என அம்பேத்கர் முன்னெடுத்த போராட்டங்களுக்குத் தூண்டுதலாக பெரியார் ஈ.வெ.ரா.வின் வைக்கம் போராட்டம் இருந்துள்ளது " (11). என்று எழுத்தாளர் ப.திருமாவேலன் குறிப்பிடுகிறார். அடுக்கடுக்காய் நடந்த கோவில் நுழைவுகளுக்கான அடித்தளமாக வைக்கம் போராட்டம் இருந்திருக்கிறது. எதிரிகளுக்கு தன்னுடைய தரப்பு நியாயத்தை விளக்குவதற்கான ஒரு வாய்ப்பாக, அண்ணல் அம்பேத்கர் அவர்கள் மகத் போராட்டத்தை நடத்திக் காட்டினார். விளக்கம் கொடுத்தார். விளைவுகளை ஏற்றுக் கொண்டார். பின்னர் வெற்றி கண்டார்.

தமிழ்நாட்டில் அதற்குப் பிறகு (வைக்கம் போராட்டத்திற்குப் பிறகு) நடந்த கோவில் நுழைவுப் போராட்டங்களில் வைக்கம் போராட்டத்தின் தாக்கம் இருந்ததா? என்னும் கேள்விக்கு பழ.அதியமான், “அதற்குப் பிறகு தமிழ்நாட்டில் நடந்த கோவில் நுழைவுப் போராட்டங்கள் மட்டுமல்ல, இந்தியா முழுவதும் நடந்த கோவில் நுழைவு, தெரு நுழைவு போராட்டங்களில் வைக்கம் மிகப்பெரிய பங்களிப்பை, உத்வேகத்தை அளித்தது... அம்பேத்கர் 1936வாக்கில் ஒரு போராட்டத்தைத் துவங்கிய போது வைக்கம் போராட்டம் தான் தனக்கு ஓர் உணர்ச்சியைக் கொடுத்ததாகக் குறிப்பிடுகிறார். கேரளாவிலும் 1936இல் கோவில் நுழைவு பிரகடனம் செய்யப்பட்ட போது வைக்கம் தான் அதற்குக் காரணம் என எல்லோருமே சொல்லியிருக்கிறார்கள்“[12] என்று பி.பி.சி. நேர்காணலில் பதில் அளித்திருக்கிறார். எனவே தொடர்ச்சியான பல சமூக விடுதலைப் போராட்டங்களுக்குத் தொடக்கமான போராட்டமாக வைக்கம் போராட்டம் இருந்திருப்பதை நாம் காண முடிகின்றது.

நடந்து முடிந்து 97 ஆண்டுகள் நிறைவு அடைந்த இந்தக் காலகட்டத்திலும் முழுமையாக நிலைமை மாறிவிட்டதா என்றால் இல்லை என்பது தான் பதில்.

*கர்நாடக மாநிலத்தில் 2021, செப்டம்பர் 4-ந் தேதி நடந்த நிகழ்வு இது. 'கர்நாடக மாநிலம் , கொப்புள் மாவட்டம், மியாப்பூர் கிராமத்தில் உள்ள ஹனுமன் கோயிலில் கடந்த செப்.4-ந் தேதி தலித் சமுதாயத்தைச் சேர்ந்த சந்திரசேகர் என்பவர் குடும்பத்தினருடன் சென்றார். அவர் உள்ளிட்ட அவரது குடும்பத்தினர் கோயிலுக்கு வெளியே நின்றிருந்தபோது, அவரது 2 வயது மகன் கோயிலுக்குள் சென்றாராம். இதனை பிரச்சனையாக்கிய அப்பகுதியைச் சேர்ந்த சிலர், சந்திரசேகர் குடும்பத்தினரிடமிருந்து கோயிலைச் சுத்தம் செய்ய ரூ 25,000 அபராதம் விதித்து கிராமப் பஞ்சாயத்தில் முடிவு செய்யப்பட்டது'(13). இது குறித்து புகார் அளிக்கப்பட்டு 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள் என்றாலும், இந்தியா சுதந்திரம் பெற்று 75 ஆண்டுகள் ஆன பிறகும் கூட இப்படிப்பட்ட சாதிய மனநிலை இன்றைக்கும் கூட இருப்பதைப் பார்க்க முடிகிறது. அப்படியானால், 97 ஆண்டுகளுக்கு முன்னால் வாழ்ந்த மனிதர்களின் மனநிலை என்பது எவ்வளவு மோசமானதாக இருந்திருக்கும் என்பதனை நம்மால் ஊகிக்க முடியும். அப்படிப்பட்ட நிலையில் நடைபெற்ற மனித உரிமைப் போராட்டம், சமூக விடுதலைப் போரட்டம் தான் வைக்கம் போராட்டம்.*

*அன்றைய ஜாதிய மன நிலையைப் புரிந்து கொள்ள, வைக்கம் போராட்ட முடிவில் நடைபெற்ற ஓர் உரையாடல் உதவுகிறது. அந்த உரையாடல் காந்தியாருக்கும் வைதீகர்களுக்கும் (வைக்கம் போராட்ட எதிர்ப்பாளர்களுக்கும்) நடைபெற்ற உரையாடல். ஒடுக்கப்பட்டவர்கள் வைக்கம் தெருக்களில் நடக்கக்கூடாது; ஏனென்றால் அவர்கள் முன் ஜென்மத்தில் பாவம் செய்தவர்கள். முன் ஜென்மத்தில் பாவம் செய்த காரணத்தால் அவர்கள் ஒடுக்கப்பட்ட ஜாதியிலே கடவுளால் பிறக்க வைக்கப் பட்டிருக்கிறார்கள். எனவே அவர்கள் நடக்கக்கூடாது என்பது பார்ப்பனர்களின் வாதமாக அன்றைக்கு இருந்திருக்கிறது.*

*"நம்பியாத்ரி: "இந்து சாஸ்திரத்தின் தெய்வீகத்தன்மையை மகாத்மாஜீ நம்புகிறீர்களா?"*

*காந்தி: "ஆம்."*

*நம்பியாத்ரி: "கர்ம விதியை மகாத்மாஜி நம்புகிறீர்களா?"*

*காந்தி: "ஆம்."*

*நம்பியாத்ரி: "மறு பிறப்பில் உங்களுக்கு நம்பிக்கை உண்டா?"*

*காந்தி: "உண்டு."*

*நம்பியாத்ரி: "எங்கள் நம்பிக்கையின் படி, எங்கள் ஆச்சாரியாரின் கருத்துப்படி அவர்கள் முற்பிறப்பின் மோசமான கர்மாவின்படி அணுகமுடியாத ஜாதியில் பிறந்திருக்கிறார்கள் என்று நாங்கள் நம்புகிறோம். இம்முறையில் அவர்களை நடத்தும்படி எங்கள் கேரள ஆச்சாரியார்களால் நாங்கள் ஆணையிட்டுக் கூறப்பட்டிருக்கிறோம். அவ்வகையில் அவர்களை கொள்ளைக்காரர்களை விடவும் திருடர்களை விடவும் மோசமானவர்களாக நாங்கள் கருதுகிறோம்"(14)*

*மனிதர்களைக் கேவலமாக நடத்துவதற்கு, பிறப்பின் அடிப்படையில் அவர்கள் ஒடுக்கப்பட்ட ஜாதியில் பிறந்த காரணத்தால் கொள்ளைக்காரர்களை விடவும், திருடர்களை விடவும் மோசமாக நாங்கள் கருதுகிறோம் என்று காந்தியாரின் முன்னாலேயே சொல்கிறார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இந்த மனப்பான்மையை அசைத்த போராட்டம் வைக்கம் போராட்டம். நாங்களும் மனிதர்களே என்பதனை தங்களை உயர்ஜாதி என்று எண்ணிக் கொண்டிருந்தவர்களுக்கு அழுத்தம் திருத்தமாக நிரூபித்த போராட்டம் வைக்கம் போராட்டம். ஜாதி ஒழிப்பையே தன்னுடைய வாழ்வின் இலட்சியமாக எடுத்துக்கொண்டு தனது இறுதி மூச்சுவரை அதற்காகவே பாடுபட்டு மறைந்த தந்தை பெரியாரின், முதல் தீண்டாமை ஒழிப்புப் போராட்டம், தீண்டாமைக்கு காரணமான ஜாதி ஒழிப்புப் போராட்டம்,*

முதல் சமூக விடுதலைப் போரட்டம் தொடங்கிய இடம் வைக்கம் போராட்டம். நேற்று நடந்த சமூக விடுதலைப் போரட்ட நிகழ்வுகளுக்கு மட்டுமல்ல, நாளை நடக்கும் சமூக விடுதலைப் போரட்ட நிகழ்வுகளுக்கும் முன்னோடி வைக்கம் போராட்டம் எனலாம்.

**அடிக்குறிப்புகள்**:


1. மனுநீதி - ஒரு மறுபார்வை, டாக்டர் ப.காளிமுத்து, அன்புமுகில் நூல் வெளியீட்டகம், பழனி, பக்கம் 33-34

2. சாதியை ஒழிக்க வழி, டாக்டர் பி.ஆர். அம்பேத்கர், பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடு. பக்கம் 77

3. இந்துமதம் கொடுங்கோன்மையின் வரலாறு, தவத்திரு தர்ம தீர்த்த அடிகளார், மலையாளத்திலிருந்து தமிழில் வெ.கொ.பாலகிருஷ்ணன், சாளரம், மடிப்பாக்கம், சென்னை-91 பக்கம் 175.

4. தெற்கிலிருந்து, பொன்னீலன், மக்கள் அச்சகம், சென்னை-2 பக்கம் 44-45

5. காங்கிரஸ் பழைய வரலாறும் வைக்கம் போராட்டமும் கி.வீரமணி, பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடு. பக்கம் 14

6.. தெற்கிலிருந்து, பொன்னீலன், பக்கம் 46.

7. வைக்கம் போராட்டம், பழ.அதியமான், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், பக்கம் 330

8. மேலது, பக்கம் 32

9. புரட்சியாளர் பெரியார், நெது. சுந்தரவடிவேலு, தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை-8 பக்கம் 29

10. வைக்கத்திற்கும் பெரியாருக்கும் என்ன சம்பந்தம்?, 'தி இந்து' நாளிதழ் கட்டுரை, பழ.அதியமான், 24.12.2019

11. ஆதிக்க சாதிகளுக்கு மட்டுமே அவர் பெரியார்?, ப.திருமாவேலன், நற்றிணை பதிப்பகம், பக்கம் 186

12. வைக்கம் போராட்டம், பி.பி.சி. நேர்காணல், பழ.அதியமான், பி.பி சி. தமிழ் இணையதளம், 27.01.2020.

13. தினமணி நாளிதழ்,6.9.2021

14.வைக்கம் போராட்டம், பழ.அதியமான், பக்கம் 552-553


**ஆசிரியர் குறிப்பு**:


முனைவர். வாநேரு, தமிழகப் பகுத்தறிவு எழுத்தாளர் மன்றத்தின் மாநிலத் தலைவர் ஆவார். மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழிலக்கியத் துறையில், 'இறையன்பு படைப்புகளில் தன்னம்பிக்கையும் மனித நேயமும்' என்ற தலைப்பில் முனைவர் பட்டம் பெற்றவர். பெரியார் பட்டயச் சான்றிதழும் பெற்றவர். பி.எஸ்.என்.எல் நிறுவனத்தில் அதிகாரியாகப் பணியாற்றி விருப்ப ஓய்வு பெற்ற இவர், தமிழ்நாட்டில் மதுரை மாவட்டம் சாப்டூரில் பிறந்தவர். இவர், 'பங்குனி உத்திரமும் பள்ளிக்கூடமும்', 'சூரியக்கீற்றுகள்' எனும் இரண்டு கவிதைத் தொகுப்புகளும், 'நெருப்பினுள் துஞ்சல்' எனும் சிறுகதைத் தொகுப்பையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

'திருக்குறள் வலியுறுத்தும் உயிர்ச்சூழலும் இன்றைய உலகச்சூழலும்', 'கடவுளையும் சடங்குகளையும் வள்ளுவம் புறக்கணிக்கிறது', 'தமிழ்த் துறவிகளும் வள்ளுவர் கூறும் தவமும்', 'ஆரிய எதிர்ப்புக்கு முன்னுரை-திருக்குறளின் பாயிரம்', 'செல்வமும் குடிமையும்', 'ஊழும் கூழும் பகுத்தறிவுப் பார்வை' போன்ற தலைப்புகளில் இவரின் கட்டுரைகள் திருக்குறள் ஆய்வுத் தொகுப்புகளில் வெளிவந்துள்ளன. உலக/ இந்திய மாநாடுகளில் கலந்துகொண்டு ஆய்வுக்கட்டுரைகள் அளித்தவர். பல்வேறு இலக்கிய இதழ்களிலும், சமூக இதழ்களிலும், இணையத்திலும் பரவலாக எழுதி வருபவர்.

# Notes

## Notes

## Notes

# Notes

*DRAVIDA POZHIL l Volume : 1, Issue : 4, (Quarterly) October - December 2021*
*Printed and published by Dr. K. Veeramani, M.A.,B.L., on behalf of Periyar Maniammai Institute of Science and Technology, Vallam, Thanjavur - 613403. Tamil Nadu, India and*
*Printed at PMIST Press, Thanjavur and*
*Published from PMIST Vallam, Thanjavur. Patron : Dr. K. Veeramani, M.A.,B.L.*
*Tel: (91) 98401 32684 Email: dravidapozhil@pmu.edu*

## வைக்கத்தில் உள்ள

# தந்தை பெரியார்

## சிலை மற்றும் நினைவு இல்லம் திறப்புக் கல்வெட்டு (மலையாளத்தில்)



### Valluvar and Periyar, the Two Rationalists of Tamil Nadu

- Dr. **R. PRABHAKARAN**, Bel Air, USA

Just like Thiruvalluvar, who condemned the Aryans' beliefs and practices, Periyar wanted to reform the Tamil society. He studied Thirukkural and found that the ideas in Thirukkural are compatible with his own ideas. He encouraged the Tamil people to read Thirukkural.

### The Legend of Valluvar - An Evaluation by Stuart Blackburn: Our Evaluation of His Views

- Prof. Dr. **T. MURUGARATHANAM**

Dr. Stuart Blackburn is a western Tamil scholar at theUniversity of London. His analysis and interpretation of the legend of Valluvar, the source material Tiruvalluvamalai, significance of the history of the Tamil Sangam incidents, and the convergence of the western scholars with natives are to be appreciated. However, the essay misses on the part that Tamil language was considered as nīcabhāshā& Valluvar was not acceptable to the Vaidika Brahmans.

### திராவிட - ஆப்பிரிக்க ஒப்புமைக் கூறுகள்

- பேரா. முனைவர். **தாயம்மாள் அறவாணன்**

ஆப்பிரிக்கரின் பல்வேறு பண்பாடுகள், திராவிட மக்களின் பண்பாட்டோடு ஒத்துள்ளன. சொற்கள்,உண்ணும் பொருட்கள், ஒப்பனைக் கலைகள், நடனப் பழக்கம், உறவுமுறைகள், மணவினை, விளையாட்டுகள், மூடநம்பிக்கைகள் என்று பல்வேறு கோணங்களில் சமூக ஒப்புமைக் கூறுகள்.

### சங்கச் செவ்வியல் மறுவாசிப்பு - பெரியாரைத் துணைக்கோடல்

- பேரா. முனைவர். **தென்னவன் வெற்றிச்செல்வன்**

தொல்காப்பியம், சங்கஇலக்கியம், பதினெண்கீழ்க்கணக்கு, சிலப்பதிகாரம் ஆகிய வற்றுள் புதைந்துள்ள தொன்மவியலைச் சமகால வாழ்வியலோடு பெரியாரியல் பார்வையில் பொருத்தி, மாறுபட்டகளங்களில் புரிந்துகொள்ள முயலும் முயற்சி.

### குறளும் மனுவும் - ஒப்பீடு

- திரு. **நா. முத்துநிலவன்**

மனுநூல், மக்கள் விரோத நூல். பெண்களை, உழைக்கும் மக்களை இழிவு படுத்தும் நூல். திருக்குறளோ மக்கள் சமூக விழுமியம் கொண்ட நூல். பெண்களை, உழைக்கும் மக்களை வாழ்த்திடும் நூல். வடிவிலோ, கருத்திலோ, நீதியிலோ, இரண்டு நூல்களும் ஒன்று ஆகவே ஆகாது என்று நிறுவும் கட்டுரை.

### வைக்கம் இந்தியச் சமூக விடுதலைப் போராட்டங்களின் முன்னோடி

- முனைவர். **வா. நேரு**

வைக்கம் போராட்டம், எப்படிப் பின்னால் நிகழ்ந்த இந்தியச் சமூக விடுதலைப் போராட்டங்களுக்கெல்லாம் முன்னோடியாகத் திகழ்ந்தது என்றும், போராட்டமும் பிரச்சாரமும் இணைந்த வெகுமக்கள் எழுச்சியை, அன்றே பெரியார் எப்படிச் சாதித்துக் காட்டினார் என்பதையும் இக் கட்டுரை விளக்குகின்றது.

PERIYAR MANIAMMAI INSTITUTE OF SCIENCE & TECHNOLOGY (Deemed to be University)
Periyar Nagar, Vallam, Thanjavur - 613 403. Tamil Nadu, India.

dravidapozhil.pmu.edu